

தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும்

கார்த்திகேசு சிவத்தம்பி

109

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
6-1-1996
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
6-1-1996
LIBRARY
469255
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும்

(இலக்கிய வரலாற்றாய்வு)

கார்த்திகேசு சிவத்தம்பி

M.A., (இலங்கை), Ph.D; (பர்மிங்காம்)

இணைத்தமிழ்ப் பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணம், இலங்கை

469255

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,

அம்பத்தூர், சென்னை – 600 098.

469255

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THAMIZH ILAKKIYATHIL
MATHAMUM MAANUDAMUM

by

Dr. K. Sivathamby

முதல்பதிப்பு : மார்ச், 1983 (தமிழ்ப் புத்தகாலயம்)
இரண்டாம் பதிப்பு : டிசம்பர், 1994

(நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு)

(C) ஆசிரியருக்கு

Code No : A820
ISBN : 81-234-0378-X

விலை : ரூ. 26.00

மேலட்டை வடிவம் : ஜெயவர்மா
ஒளி அச்சு : எக்ஸ்பிரஸ் கம்ப்யூட்டர்ஸ்
சென்னை – 33.

Printed at:
SRI YESES PRINT HOUSE
Madras - 600 005. Phones : 83 32 31, 83 32 59

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
6-1-1996
LIBRARY

எனது ஆளுமையின்
உருவாக்கத்திலும் வளர்ச்சியிலும்
பெரும் சிரத்தை கொண்டிருந்த
பேரர் இருவர்

த. சிதம்பரம் பிள்ளை
த.கு. செல்வமாணிக்கம்

அவ்விருவரின் பவித்திரமான
நினைவுகளுக்கு
இச்சிறுநூல் சமர்ப்பணம்

– கா.சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே

பக்கம்

✡ தமிழிலக்கியத்தில் மதங்களின் பங்கு 15

✡ தமிழிற் கிறித்தவ இலக்கியப் பாரம்பரியம் 31

✡ தமிழிலக்கிய வரலாற்றில் இஸ்லாமியத் தமிழிலக்கியங்கள் 85

✡ சைவ சித்தாந்தம் - ஒரு சமூக வரலாற்று நோக்கு 124

✡ தமிழிலக்கியத்தில் மானுடம் 156

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
6-1-1996
LIBRARY

முன்னுரை

இலக்கியம், வரலாறு, பண்பாடு, மதம்,
தமிழிலக்கிய வரலாற்று ஆய்வுகளிற் புதிய
பரிமாணங்களின் அத்தியாவசியம் பற்றிய ஒரு குறிப்பு

இந்நூலில் வரும் ஐந்து "அலகு"களையும் ஒன்றாக இணைத்து நோக்குவதற்கான "குவிமுனை" (Focus) யொன்றினை வற்புறுத்துவதாக இம்முன்னுரை அமைய வேண்டும். தனித்தனிக் கட்டுரைகளாகவே ஆராயப் பெற்று எழுதப்பெற்ற இக்கட்டுரைகளை ஒன்றாக இணைக்கும் பொழுது தமிழிலக்கிய வரலாற்று ஆய்வின் ஓர் அம்சம் முனைப்புடன் தெரிகின்றது. தமிழிலக்கியப் பாரம்பரியத்தில் மதங்கள் பெறுகின்ற இடம் பற்றிய கண்ணோட்டத்தினையும், மதநிலைச் சித்திரிப்புகளினூடே தெரிய வரும் . மானுடக் கோட்பாடுகள் பற்றிய குறிப்பினையும் இக்கட்டுரைகள் ஆராய்கின்றன.

அந்த அளவில் தமிழிலக்கிய ஆய்வு வெளியீட்டுப் பாரம்பரியத்தில் இது ஒரு மிகச் சாதாரணமான, விசேட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனமெதனையும் ஈர்க்க வேண்டாத ''இன்னுமொரு - மேலதிக'' பிரசுரம்தான்.

ஆனால் ஒரு சிறிய-மிகச் சிறிய-வேறுபாடு உண்டு. இந் நூலில் வரும் கட்டுரைகள் எவற்றிலாவது ''இலக்கியமும்'', ''மதமும்'' ஒன்றுக்கொன்று புறம்பானவையாகவும், ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்ட தாகவும் காட்டப்படவே இல்லை. மாறாக மதத்துக்கு இலக்கியம் அத்தியாவசியமென்பதும் அதாவது இலக்கியமில்லாது மதம் நின்று நிலைக்க முடியாது என்பதும், மதமில்லாது, குறிப்பாக நவீன யுகத்துக்கு முற்பட்ட கால இலக்கியங்களில், ஆத்ம உயிர்ப்புகள் ஆத்மக் கிளர்ச்சிகள் பற்றிய குறிப்புகள் இடம் பெறமுடியாது என்பதும் இக்கட்டுரைகளில் வலியுறுத்தப்பட்டுள்ளன. அந்த நோக்கிற் பார்க்கும் பொழுது இவை ஒரு பொருளின் பல்வேறு அத்தியாயங்கள்தான் என்பது புலனாகின்றது. இந்த நூலிலுள்ள ஒரு குறையென்ன வெனில் தரப்பட்டிருக்கும் அத்தியாயங்கள் போதா என்பதுதான். அத்தியாயங்கள் போதா எனும் குறைபாட்டை ஏற்றுக்கொள்கிறேன். நூலே இல்லாதிருப்பதிலும் பார்க்கக் குறைந்த அத்தியாயங்களுடன் ஒரு நூலாவது இருப்பது நல்லது என நியாயப்படுத்திக் கொள்ள எனது மனம் விரும்புகின்றது.

ஆனால் இந்த அணுகுமுறையின் அத்தியாவசியத்தை வற்புறுத்தல் வேண்டும். ஏனெனில் இது தமிழிலக்கிய வரலாற்றின் வர்த்தமான ஆய்வு நெறிகள், ஆய்வுப் பொருட்கள் பற்றிய ஒருமுக்கிய பிரச்சனையை இவை கிளப்புகின்றன.

இலக்கிய வரலாறு இன்று தமிழிலக்கியப் பாடத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரமிசமாகி விட்டது. பல்கலைக்கழகப் புகுமுக நிலைமுதல் முதுமாணி (எம்.ஏ.) வரை இது ''பாடமா''கிவிட்டது. இது ஆராய்ச்சித்துறையாகவும் வளர்கிறது, வளர்க்கப்படுகிறது.

ஆனால் ''இலக்கிய வரலாறு'' என்னும் இத்தொடர் எத்தொகையினைக் குறிக்கின்றது என்பது தான் முக்கியமான வினாவாகும். பொதுவான அபிப்பிராயம் இது வேற்றுமைத் தொகை என்பதுதான். சிறிது கரடுமுரடான நிலையில் இது நான்காம் வேற்றுமைத் தொகையாகவும் (இலக்கியத்துக்கு வரலாறு என்றும்) சிறிது நுண்ணிதான நிலையில், ஆனால் அதிகக் கருத்து வேறுபாடில்லாது, இரண்டாம் வேற்றுமைத் தொகையாகவும், (இலக்கியத்தின் வரலாறு என்றும்) கொள்ளப் படுவது கண்கூடு. பாடபுத்தக ஆசிரியர்கள் முதலாவது கருத்தை உட்கொண்டும், அகன்ற பார்வையுள்ள, ஆராய்ச்சி யாளர்கள் இரண்டாவது கருத்தை உள் வாங்கியும் எழுதி யுள்ளனர்.

இலக்கிய வரலாறு என்பதை History of Literature ஆகக் கொண்டால் இந்த அணுகுமுறை சரியானதே. இலக்கியத்தின் வரலாறு, இலக்கிய வரலாறு ஆயிற்று.

அடுத்த இந்த 'இலக்கியத்தின் வரலாறு' எதற்குத் தேவைப்படுகின்றது என்ற வினாவை எழுப்புதல் வேண்டும். அதில் 'இலக்கியத்தினை நன்கு விளங்கிக் கொள்வதற்கு' எனவே வரும். தொடர்ந்து, ''இலக்கியம் பற்றிய விளக்கம் எதற்கு அத்தியாவசியமாகின்றது'' என்ற வினாவை எழுப்பும் பொழுது, இலக்கியம் என்பது தன்னுள் தான் முடிந்த முடிவு அன்று என்பதும் அது, தான் தோன்றுகின்ற சமூகத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுடன் இணைந்தது என்பதும் தெரியவரும்.

இந்நிலையில் இலக்கிய வரலாறு இரண்டாம் வேற்றுமைத் தொகை என்னும் தன்மையை உதறிவிட்டு உம்மைத் தொகையாகுவதற்குத் துடிப்பதை அவதானிக்கலாம். அதாவது இலக்கிய வரலாறு என்பது இலக்கியத்தின் வரலாறு மாத்திரம் அன்று. அது இலக்கியமும் வரலாறும் இணைந்த ஒரு நிலையே என்பது தெரியவரும்.

ஒருநாட்டின் அல்லது சமூகத்தின் வரலாற்றை அதன் இலக்கிய வழி நின்று பார்ப்பதை இலக்கிய வரலாறு என்று கொள்ளும் நிலைக்கு நாம் படிப்படியாக வந்து சேர்கிறோம். ஆங்கிலத்தில் வரும் Literary History எனும் பதம் இதையே சுட்டுகின்றது.

தமிழ் மக்களின் வரலாற்றை-அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு வரலாற்றை-இலக்கிய நிலை நின்றும் இலக்கிய வழி நின்றும் பார்க்கும் ஆய்வு நோக்கு இன்னும் தொடங்கவில்லையென்றே கூறலாம். தமிழ் நாட்டின் வரலாற்றை சில ஆட்சிப் பரம்பரைகளின் வரலாறாகவே (பல்லவர் காலம், சோழர் காலம்) பார்ப்பதால் இப்பண்பு நிலவுகிறது. வரலாறு என்பது சமூக உறவுகளின் தெளிவிப்பு, மக்களின் முற்போக்குப் பயணத்தின் பல்வேறு கட்டங்கள் எனும் கண்ணோட்டம் நிலையூன்றத் தொடங்கும் பொழுதுதான் இலக்கிய வழி வரலாற்றை இனங்கண்டு கொள்வதில் ஆர்வம் பிறக்கும். இலக்கியத்தைச் சமூக சிந்தனையின் பரிணமிப்பாக நோக்கும் பொழுது இலக்கிய வரலாற்றைச் சமூக வரலாறாகப் பார்க்கும் தன்மை தவிர்க்கப்பட்ட முடியாத ஒன்றாகி விடும். அத்தகை சமூக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனையுடைய ஆராய்ச்சியாளர்கள் இன்று தமிழிலக்கிய வரலாற்று ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். அவர்களின் முயற்சிகள் கணிசமானவை.

இந்நூல் இலக்கிய வரலாற்றை வரலாற்றின் இலக்கியப் பரிணமிப்பாகப் பார்க்கவில்லையென்பது கண்கூடு. ஆனால் இலக்கியத்தைப் பண்பாட்டின் முக்கிய பரிணமிப்பாகக் கொள்கிறது. (பண்பாடு என்பதற்குரிய வரைநிலை இலக்கணத்தை முதலாவது அத்தியாயத்திற் கண்டு கொள்க.) பண்பாட்டுக்கும் இலக்கியத்துக்குமுள்ள உறவையே நாம் இன்னும் சரிவர நிறுவவில்லை. தமிழ் நாட்டின் சிற்பக் கலைக்கும், தமிழிலக்கியத்துக்கும் அடிப்படையான அழகியற் கருத்தொருமைப்பாடு எதுவும் உண்டா என்பது பற்றியும் ஆராய்தல் வேண்டும். தேவார, பாசுரங்களின் எளிமையான கவர்ச்சிக்கும், பல்லவர் காலச் சிற்ப முறைக்கும், காவியத்தின் அகண்ட நோக்குக்கும், சிற்றிலக்கியங்கள் காட்டும் நுண்ணிய சித்திரிப்புக்கும் சோழர் காலத்து கட்டடக்கலை, சிற்பக்கலை வளர்ச்சிக்கும், நாயக்கர்கள் காலத்து மிதமிஞ்சிய அணிப்பிரவாகத்துக்கும் அக்காலச் சிற்ப அமைப்புக்கும் தொடர்பு நிச்சயம் உள்ளது. இந்நூல் பொதுவான பண்பாட்டமைப்பில் மதம் பெறும் இடத்தையும், அந்தப் பண்பாட்டனுபவத்தினூடாகப் புலப்படும் மானுடக் கோட்பாட்டையும் வற்புறுத்துகின்றது.

மதம் என்பது வெறும் நம்பிக்கைகளின் தொகுதியன்று. அது சமூக உறவுகளுடனும், உற்பத்தி உறவுகளுடனும் நெருங்கிய சம்பந்தம் கொண்டது. குறிப்பாக நிலவுடைமையமைப்பில் அது சமூக உற்பத்தி உறவின் ஒரு முக்கிய அங்கமாகும். அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவில், நிலவுடைமையிலிருந்து இன்னும் விடுபடாத இந்தியாவிலும், (தமிழ் நாட்டிலும்) இலங்கையிலும் மதத்தின் சமூகப் பணி பற்றி நாம் சிரத்தையோடு கவனம் செலுத்துதல் வேண்டும்.

குறிப்பாகத் தமிழ் நாட்டில் இருபதாம் நூற்றாண்டின் முதல் ஐந்து தசாப்தங்களிலும் முக்கிய இடம் பெற்ற பகுத்தறிவு இயக்கம் அரசியலதிகாரம் பெற்று சமூக மேற்கட்டுமானத்தின் ஒரு பகுதியாக இடம் பெறத் தொடங்கியதன் பின்னர், மதங்களின் முக்கியத் துவத்தைக் குறைத்து மதிப்பிடும் ஒரு தன்மை காணப்பட்டது. தமிழ் பேசும் மக்களிடையேயுள்ள உப-பண்பாட்டுக்குழுவினர் (கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள்) தத்தம் தனித்துவத்தை நிறுவ எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகளில் மதம் பெறும் இடத்தை நோக்கும் பொழுதும், சமூக ஒடுக்கு முறைகளை மதம் மாறுவதனால் வென்று விடலாமென்ற நம்பிக்கைத் தொடர்ந்து காணப்படுவதை நோக்கும் பொழுதும் தமிழ்ச் சமூகத்தினரின் அடி நிலையில் மதம் பெறும் முக்கியத் துவத்தை நாம் உணரலாம்.

இக்கண்ணோட்டத்திற் பார்க்கும்பொழுது பொதுவான பண்பாட்டு வளர்வியக்கத்தில் மதமும் இலக்கியமும் ஒன்றுடன் ஒன்று இணையும் முறைமையை அறிய விரும்புவது, வெறும் இலக்கிய வரலாற்றுத் தேவையாக மாத்திரமல்லாது, அத்தியாவசியமான சமூகத் தேவையாகவும் அமைகின்றது. புலனாகின்றது. வரலாறு இறந்த காலத்ததுதான். ஆனால் நிகழ்காலத்தை விளக்கிக் கொள்வதற்கு அந்த இறந்தகாலம் தேவைப்படுகின்றது. இன்னுமொரு வழியாகவும் கூறலாம். நிகழ்காலத்தின் தேவைகளை விளங்கிக் கொள்வதற்கும் எதிர்காலத்திற்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலட்சியங்களை உருவாக்குவதற்கும் நிலைநிறுத்துவதற்கும் இறந்த காலத்தினை நன்கு அறிவது அத்தியாவசியமாகின்றது.

தமிழ்ப் பண்பாடு என நாம் இன்று கூறும் இப்பண்பாட்டு வட்டத்துள் மதம் பெறும் இடத்தை ஆராய்வதே எனது நோக்கம். இதனை இரண்டு வகையாக அணுகலாம். ஒன்று வரன்முறையாக இந்த மண்ணினுள் நடந்தேறிய பண்பாட்டு விகசிப்பை அறிந்து கொள்ளுதல், மற்றது இதற்குப் புறத்தேயிருந்து வந்து இந்த மண்ணோடு இணைத்துக் கொண்ட பண்பாட்டு இணைப்பை அறிந்து கொள்வது. தமிழ்ப் பண்பாடு என்பது இன்றைய நிலையில் இந்த இரண்டு அமிசங்களையும் உள்ளடக்கியதே.

வைணவத்தின் தமிழிலக்கியப் பாரம்பரியத்தை, அவ்விலக்கியப் பாரம்பரியத்தின் சமூகத் தளத்தை ஆயும் முயற்சியில் ஈடுபட்டுள்ளேன். ஆய்வுக் கட்டுரையாக வடிப்பதற்கான தயார் நிலை இன்னும் ஏற்படவில்லை.

எனவே அதை விடுத்து, கிறிஸ்தவத் தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தினையும் இஸ்லாமியத் தமிழிலக்கியப் பாரம்பரியத்தினையும் சைவ சமய இலக்கியப் பாரம்பரியத்தினையும் தமிழிலக்கிய வரலாற்றுப் பின்னணியில், இலக்கியத்தை வரலாற்றின் ஒரு முகிழ்ப்பாகக் கொள்ளும் நோக்கு முறையிற் பார்த்துள்ளேன். மானுடத்தைப் பற்றிய சிற்றாய்விலும் மானுடம் எனும் கோட்பாடு தமிழிலக்கியப் பாரம்பரியத்திற் பல்வேறு கால கட்டங்களிலும் எவ்வாறு முகிழ்ந்துள்ளது என்பதையும் எடுத்துக்காட்ட முயன்றுள்ளேன்.

தமிழிலக்கியச் சிந்தனை மரபுடன் இஸ்லாமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறித்தவமும் இணைந்த முறையும்; அந்தச் சிந்தனை மரபுக்கு இவை ஏற்படுத்திய விஸ்தரிப்பும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

ஆயினும், இத்துறையின் இன்றைய ஆராய்ச்சி நிலையை நோக்கும் பொழுது, பதில் பெறக்கூடிய வினாக்களிலும் பார்க்க பதில் பெற முடியாத வினாக்களே அதிகமாகவுள்ளன என்பது தெரியவரும்.

ஆனால் ஒன்று, விடைகளை உடனே பெற்றுவிட முடியாது என்பதற்காக வினாக்களைப் பின் போடக்கூடாது. இன்றைய எமது வினாக்கள்தான் எதிர்கால ஆராய்ச்சியாளர் களின் பொறுப்புகளாக அமையும்.

இறுதியாக, நன்றிக்கடன் கூறும் முக்கிய பணி உள்ளது. தமிழ் இலக்கியத்தில் மதம் எனும் ஆய்வு, வண. தனிநாயக அடிகளாரின் நினைவு யாழ்ப்பாண, இறைசட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் வெளியிட்ட நினைவு மலரிலே வெளியானது (1981). மானுடம் பற்றிய கட்டுரை தனிநாயக அடிகளார் நினைவாக எஸ். புனிதலிங்கம், மு. கனகராசன் வெளியிட்ட (1931) மலரில் வெளியானது. சுவாமி ஞானப்பிரகாசர் நினைவாக முத்திரை வெளியிடப் பெற்ற பொழுது நடைபெற்ற கருத்தரங் கில் 'ஈழத்துத் தமிழ் கத்தோலிக்க இலக்கியப் பாரம்பரியம் எனும் பொருள் பற்றி ஆய்வுக் கட்டுரை வாசித்தேன். கிறிஸ் தவத் தமிழ் இலக்கியப் பாரம்பரியம் அதன் வழியாகக் கிளர்ந்ததே. யாழ்ப்பாண ஆயர் திலோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களின் குறிப்புரையும் வண பிதா சந்திர காந்தனோடு நடத்திய இரண்டொரு உரையாடலும், கத்தோலிக்கப் பாரம்பரியம் பற்றிய சில கருதுகோள்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கு விளங்கவும் விளக்கவும், உதவியுள்ளன. அவர்களுக்கு என் நன்றி உரித்து. புரட்டஸ்டண்டுப் பாரம்பரியம் பற்றிய ஆய்வுகளிற் சிறிது காலமாக ஈடுபாடு கொண்டுள்ளேன். தென் தமிழகத்துச் சமூக வரலாற்றிற் கிறித்துவத்தின் தொழிற்பாடு களை ஆராய்வதில் ஆர்வங்கொண்டுள்ள எனக்கு, திரு டேவிட் பாக்கியமுத்துவுடன் நடத்திய உரையாடல்கள் அத்துறையில் அதிக ஊக்கத்தினை ஏற்படுத்தின. அதற்கு மேலும் உதவுவதாக அமைந்தது. திரு சு. செபநேசனின் ஆராய்ச்சி உறவு அவரது கலாநிதிப் பட்டத்துக்கான ஆராய்ச்சியை ஆற்றுப்படுத்துபவன் என்ற முறையில் பல பிரச்சனைகளை அறிவதற்கும், அவை பற்றிச் சிந்திப்பதற்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அவருக்கு என் நன்றிகள். இத் தொகுதியில் வரும் ''சைவ சித்தாந்தம்-ஒரு சமூக வரலாற்று நோக்கு'' எனும் கட்டுரை மதுரைப் பழநியப்பப் பிள்ளை பவளவிழா மலருக்காக எழுதப்பெற்றது. அதனை எழுதுவதற் கான உள்ளத் தூண்டுதலைத் தந்தவர்கள் தஞ்சாவூரைச் சேர்ந்த நண்பர்கள் அ. மார்க்ஸ், பொ. வேலுசாமி ஆவர். இவர்கள் இருவருடனும் நடத்திய உரையாடல்களின் பொழுது கிளம்பிய கிளப்பப்பெற்ற பிரச்னைகளுக்கு விடைகாணும் நோக்கத் துடனேயே இக்கட்டுரை எழுதப்பட்டது. அவர்கள் இருவருக் கும் என் நன்றியுரித்து.

இந்நூலுக்கு வேண்டிய தட்டச்சுப் பிரதிகளைத் தயாரித் தவர் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறை உதவியாளர் செல்வி தில்லிமலர் சின்னத்துரை; படியெடுத்துதவியவர் தமிழ்த்துறைச் சிறப்புத் தேர்வு மாணவி செல்வி த. சுசிலா. இவர்கள் இருவருக் கும் என் நன்றிகள் உரித்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் நூலாக்கத்துக்கு உதவியவர்கள். நூலின் தோற்றத்துக்கு உந்துசக்தியாகவிருந்தோர் ஒருபுறத்தில் எனது மாணவர்கள்; மறு புறத்தில் எனது மனைவியார். இவ்விரு புறங்களுமே ஆளுமையின் இணைபிரியா அங்கங்கள் எனவே தனித்த நன்றிகள் வேண்டியதில்லை.

இந்நூலை இரண்டாம் பதிப்பாக வெளியிடும் நியூசெஞ்சுரி புத்தக வெளியீட்டு நிறுவனத்தார்க்கும் என் நன்றி.

கார்த்திகேசு சிவத்தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
6-1-1996
LIBRARY

தமிழிலக்கியத்தில் மதங்களின் பங்கு

1

இத்தலைப்பினை நோக்கும் பொழுது சைவம், வைஷ்ணவம் முதலாம் அறுவகை வைதிக மதங்களும் அவற்றின் உட்பிரிவுகளும், அவைதிக மதங்களெனக் கொள்ளப்படுபவையான ஆசீவகம், சமணம், பௌத்தம் என்பனவும், இப்பெரும் பாரியத்தினுள் வராதனவாகிய சிறுதெய்வ வழிபாடுகளும் இவற்றைவிட இந்தியப் பெரும் பாரியத்தினின்றும் தோன்றாத ஆனால் இன்று இந்திய வரலாற்றுடன் பின்னிப்பிணைந்து கொண்டனவாக விளங்கும் கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மதங்களும் தமிழ் இலக்கியப் பரப்பிலும், பொருளிலும், முக்கியமாக தமிழ் மக்களின் இலக்கிய அனுபவத்தில் ஏற்படுத்திய விஸ்தரிப்புக்களைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் எனக் கொள்ளப்படலாம். ஆனால் இக்கட்டுரையில் அத்தகைய ஒரு விவரண ஆய்வினை மேற்கொள்ளாது. மதம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம் ஆகிய இவ்விரண்டும் எவ்வகையில் ''பண்பாடு'' என்பதன் அங்கங்களாக விளங்குகின்றன என்பதையும், பண்பாட்டின் அங்கங்கள் என்ற வகையில் ஒன்று மற்றதற்கு எத்துணை அத்தியாவசியமாக அமைகின்றதென்பதனையும், இப்பரஸ்பரக் கடப்பாடு தமிழ் இலக்கியத்திலே எவ்வாறு தொழிற்பட்டுள்ளது என்பதனையும் சிறிது சுட்டிக் காட்டுவதே கட்டுரை ஆசிரியனின் நோக்கமாகும்.

2

மதமோ, இலக்கியமோ தமக்கென முற்றிலும் தனியான ஒரு இயங்குதளத்தைக் கொண்டனவன்று. சமூகம் என்னும் மனிதக் குழும முழுமையின் பல்வேறு பரிமாணங்களில் இரண்டே இவை. சமூக வாழ்க்கையே இவை இரண்டுக்கும் அடிப்படை.

''பண்பாடு'' என்னும் மனித வாழ்க்கைக் கோலத்தின் இரண்டு முகிழ்ப்புக்களே மதமும் இலக்கியமும். பண்பாடு என்னும் வட்டத்துக்குள்ளேயே இவை இயங்கும்.

சமூகவியல், மானிடவியல் துறைகளிற் பண்பாடு என்பது உயர் வழக்குகள், கருத்துக்களாகக் கொள்ளப்படுவதில்லை.

> ''பண்பாடு என்பது குறிப்பிட்ட ஒரு மக்கட்கூட்டம் தனது சமூக வரலாறு வளர்ச்சியினடியாகத் தோற்றுவித்துக் கொண்ட பௌதீகப்பொருள்கள். ஆத்மார்த்தக் கருத்துக்கள், மதநடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> முறைகள், சமூகப்பெறுமானங்கள் ஆகிய யாவற்றினதும் தொகுதியே யாகும். ஒரு கூட்டத்தினரின் பண்பாடு என்பது அக்கூட்டத்தினரின் தொழில் நுட்பவளர்ச்சி உற்பத்திமுறைமை, உற்பத்தி உறவுகள், கல்வி, விஞ்ஞானம், இலக்கியம், கலைகள், நம்பிக்கைகள் ஆகியனவற்றின் தொகுதி யாகும்.''

எனவே பண்பாடு பெருவட்டத்தினுள் மதம் இலக்கியம் எனுமிரண்டுமே வரும்.

இக்கட்டத்திலே மதம் பற்றிய வரைவிலக்கணம் ஒன்று அத்தியாவசியமாகின்றது. மத ஒப்பியலாய்வில் உலகப் பிரசித்தி பெற்ற பேராசிரியர் நினியன் ஸ்மார்ட் (Ninian Smart) அவர்கள் மதத்தின் இயல்பினைச் சுருக்கமாகவும் தெளிவாக வும் கூறியுள்ளார்.

> ''மதம் என்பது ஆறு பரிமாணங் களைக் கொண்ட ஒன்றாகும், கோட் பாடுகள், ஐதீகங்கள், ஒழுக்கநெறி போதனைகள், சடங்குகள், சமூக நிறுவனங்கள், மத அனுபவம் தரும் உந்துதல் அல்லது இயக்கப்பாட் டுயிர்ப்பு என்பனவே அந்த ஆறு பரி மாணங்களுமாம்.''

பேராசிரியர் ஸ்மார்ட் எடுத்துக் கூறியுள்ள இவ்வாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமிசங்களையும் பற்றி ஆழமாக நோக்கும் பொழுது, அவை வெளிப்படுத்தப்படுவதற்கும், பேணப்படுவதற்கும், கையளிக் கப்படுவதற்கும் அவை ஏதோ ஒருவகையில் இலக்கியத்தை நம்பியிருக்க வேண்டுமென்பது தெரியவரும். அந்த வடிவம் வாய் மொழியாகவோ, எழுத்துமொழியாகவோ இருக்கலாம். அதுவும் அவை உயர் மதங்களாகவிருப்பின் (நாமும் இங்கு எம்மையறியாமலே உயர் மதங்களைப் பற்றியே சிந்திக் கின்றோம்). அவற்றுக்கு எழுத்தங்கீகாரம் இருப்பது அவசிய மாகும். மதங்களின் ஊற்றுக் கால்களாக விளங்கும் ''நூல்''கள் அவ்வம்மதங்களில் பெறும் முக்கியத்துவத்தை நோக்கின் இவ்வுண்மை புரியும். விவிலியம், குர்ஆன், தம்மபதம், வேதங் கள் ஆகியன போற்றப்படும் முறையை நோக்குதல் வேண்டும்.

மதம் தரும் அனுபவத்தை வெளியிட வாய்ப்பான வாய்க் கால் வேறெதுவுமே இல்லை. 'சமாதி' நிலை கூட மொழித் தொடர்பை உள்ளடக்கியே நிற்கின்றது. மொழியாற்கூட எடுத்துக் கூறப்பட முடியாதது எனும் பொழுது மொழியின் சாதாரணத் தொடர்பு நிலை முக்கியத்துவம் நன்கு புலப் படுகின்றது.

இவ்வுண்மையை இன்னுமொரு வகையிலும் நிறுவலாம்.

மதம் என்பது மூன்று அத்தியாவசிய அமிசங்களைக் கொண்டது. முதலாவது நம்பிக்கை (Faith); இரண்டாவது சடங்குகள் (Rituals); இந்தச் சடங்குகளுக்கு அத்தியாவசிய மான ஐதீகங்கள் (Myths) இதற்குள்ளேயே அடங்கும். மூன் றாவது இவை இரண்டும் வளர்க்கும் அல்லது இவையிரண்டி னடியாக வளர்த்தெடுக்கப் பெறும் சமூகக் கண்ணோட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது உலகநோக்கு இம்மூன்றும் ஒருங்கிணையும் பொழுதே மதம் தொழிற்படும். இம்மூன்றினையும் பண்பாட்டி லிருந்தும் இலக்கியத்திலிருந்தும் பிரித்து நோக்க முடியாது. சற்று ஆழமாக நோக்கினால் இலக்கியத்தின் உந்துசக்தியாகவும் களமாகவும் நம்பிக்கைகள், ஐதீகங்கள், உலகநோக்கு (இங்கு சமயச் சார்பற்ற விஞ்ஞான ரீதியான உலகநோக்குப் பற்றி நாம் குறிப்பிடவில்லை) விளங்கி வந்துள்ளன என்பது தெரிய வரும். சமய இலக்கியங்கள் என நாம் கொள்வனவற்றில் இம்மூன்றும், விறகில் தீயாகவும், பாலிற்படு நெய்யாகவும் கிடப்பதை அவதானிக்கத் தவற முடியாது.

இதனால் மதத்திற்கு இலக்கிய அத்தியாவசியமான வெளிப்பாட்டு முறைமை என்பது புலனாகின்றது.

3

அடுத்து இலக்கியத்தை நோக்குவோம். ஒரு சமூகம் நிலைபேறுடைய நிறுவனமாக இயங்குவதற்கும், அவ்வாறு இயங்கியுள்ளது என்பதை அறிவதற்கும், இலக்கியம் மிக முக்கியமானதாகும். இதனாலேயே இலக்கிய உருவாக்க மில்லாது சமூக உருவாக்கமில்லையெனப் பேராசிரியர் றேமண்ட் வில்லியம்ஸ் (Raymond Willams) கூறுவர். அந்த இலக்கியம் வாய்மொழி இலக்கியமாகவோ, எழுத்து மொழி இலக்கியமாகவோ அமையலாம். வெளிப்பாட்டு முறைமை அமைவது வேறுபடினும், சமூக உருவாக்கத்திற்கு இலக்கியம் அத்தியாவசியமானதென்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம் என்பது சமூக உணர்வுகளையும் சிந்தனைகளையும், அச்சமூகத்தில் வாழும் மக்களின் வாழ்க்கையிலே தோன்றும் உணர்ச்சிகளையும், மொழிக்குறியீடு கொண்டு தருவதாகும். ‘‘மக்களின் வாழ்க்கையிலே தோன்றும் உணர்ச்சிகள்’’ எனும்பொழுது உணர்ச்சிகள் சமூக உறவுகளின் படியாகவே தோன்றுபவை என்பது நன்கு தெளிவாகின்றது. சமூக உறவுகளினடியாக வரும் தனிமனித உணர்ச்சிகள் என்று கூறும் பொழுது, அதற்குள் மதமும் தவிர்க்க முடியாதபடி இடம்பெற்று விடுகின்றது. ஏனெனில் குறிப்பிட்ட சமூகத்தின் உணர்வில், சிந்தனையில், அதன் நம்பிக்கைகள், சடங்குகள் உலகநோக்கு என்பன இன்றியமையா வகையில் ஆழமாக இடம் பெற்று விடும்.

இந்த நம்பிக்கைகள், சடங்குகள், உலகநோக்கு ஆகியன உற்பத்தி உறவுகளின் தன்மைக்கேற்றனவாகவே அமையும். உற்பத்தி உறவு மட்டத்தினின்றும் முற்றிலும் விடுபட்டனவாய் இவை இருத்தல் முடியாது.

எனவே இதுகாலவரை தோன்றிய இலக்கியங்கள் மதஉணர்வுகளைப் பிரதிபலித்திருப்பது தவிர்க்க முடியாத தாகும். இத்தகைய சூழ்நிலையில் இலக்கியத்தின் களமாக மதம் (நம்பிக்கை, ஐதீகம், உலகநோக்கு) அமைவதில் ஆச்சரிய மில்லை. இவ்வமைவு சமூகத்துக்குச் சமூகம் அதன் உற்பத்தி வளர்ச்சிக்கேற்ப மாறுபடலாம்.

இதுவரை கூறியவற்றைத் தொகுத்து நோக்கும் பொழுது பாரம்பரிய சமூகங்களில் மதமும் இலக்கியமும் ஒன்றுக் கொன்று ஆதாரமாக அமையும் நிலைமை புலனாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4

இந்தியாவின் இன்றைய நிலையில் மொழிவழிப் பண்பாடே முக்கியமான பகு நிலைக்கூறாகக் கொள்ளப்படுகின்றது. இந்நிலைமை ஏற்படுவதற்கான சில அடிப்படைக் காரணங்கள் உள்ளன. ''பண்பாடு'' எனும் பொழுது அதன் முக்கியமான முகிழ்ப்பினை நாம் மொழியிலேயே காணலாம். அதாவது மொழி பண்பாட்டின் குறியீடாகின்றது. மேலும் பண்பாட்டின் தனித்துவமான தொழிற்பாட்டுக்கு மொழியே காரணியாகவும் அமைகின்றது. இக்கருத்து லெவி ஸ்ற்றோஸ் (Levi Strauss) என்பாரது கூற்றினால் நன்கு புலனாகின்றது. அவர் பண்பாட்டின் தோற்றத்திற்கு மொழி முக்கியமானதென்பர். (Language is a Condition of Culture).

இதுவரை நாம் மொழியையும் மதத்தையும் பண்பாட்டினுள்ளடங்கியவையாகவே கொண்டோம். ''தமிழ்'' என்று கூறும் பொழுது இங்கு மதத்தையும் விஞ்சிய மொழிநிலைப் பண்பாட்டையே (Linguistic Culture) குறிக்கிறோம். இந்த மொழி நிலைப் பண்பாட்டுக்குள் மதம் ஓர் உப பண்பாடாக (Sub-Culture) அமையும். மதங்கள் ஒரு மொழி வட்டத்தினுள் இயங்கும்பொழுது, பண்பாட்டின் பொதுமை காரணமாக ஒவ்வொரு மதத்தினரும் தத்தம் கருத்துக்களை எடுத்துக்கூற அப்பொதுக் களஞ்சியத்தையே பயன்படுத்தவேண்டி வரும். இதனால் அது உப பண்பாடாகவிருக்கும் அதே வேளையில் முழுப் பண்பாட்டினது வளத்தையும் செழுமையையும் பயன்படுத்துவதாகவுமிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ, வைஷ்ணவ, கிறிஸ்த்துவ, இஸ்லாமிய மத நிலைகளிலே அவ்வக் கடவுளரை குறிப்பிடுவதற்குத் தமிழில் அவர்கள் பயன்படுத்தும் சொற்களை எடுத்து ஆராய்ந்தால் மேற்கூறியதன் உண்மை விளங்கும். ஆண்டவன், இறைவன், தேவன், பிதா, தந்தை என்ற சொற்களின் பயன்பாட்டை நோக்குக.

அத்துடன் இவ்வுப-பண்பாடு ஒவ்வொன்றும் முழுப் பண்பாட்டிலும் தன் ஆதிக்கத்தைச் செலுத்தி முழுப் பண்பாட்டையும் தனது மேலாண்மைக்குட் கொண்டு வரவும் விரும்புகின்றது.

இவற்றால் மதம் அதன் அநுட்டான நிலையில் மொழிப் பண்பாட்டின் ஓர் அங்கமாக உப பிரிவாக விருப்பினும் அது அம்மொழிப் பண்பாடு முழுவதையும் பயன்படுத்துவதாகவே இருக்குமென்பதும் புலனாகின்றது.

இவ்வாறு மதமும் மொழியும் ஒன்று மற்றொன்றிலே தங்கி நிற்கும் பொழுது மதம் மொழியின் ''வளர்ச்சி''க்கு உதவுகின்றது என்பது ஏற்புடைன்மயற்ற ஒரு கருது கோளாகவே அமையும். குறிப்பிட்ட ஒரு மதம் குறிப்பிட்ட ஒரு மொழியிலே புதிய பரிமாணங்களை ஏற்படுத்தலாம். உதாரணமாக மறுபிறப்பு வாதத்தில் நம்பிக்கை கொண்ட மதங்கள் தொழிற்பட்ட எமது பண்பாட்டினுள் இஸ்லாம், கிறித்தவம் வந்து சேர்ந்தபொழுது அவை தமது ''இறுதி நாள் தீர்ப்பு''க் கோட்பாட்டைச் சனரஞ்சகப்படுத்த முனையும் பொழுது பல புதிய கருது கோள்களையும், சொற்றொடர்களையும் பயன்படுத்த வேண்டிய நிலையேற்பட்டது. இது மொழியின் வளத்தில் ஏற்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ''வளர்ச்சி''தான். ஆனால் இந்த ''வளர்ச்சி'' ஏற்படுத்தப் படாவிட்டால் இஸ்லாமும் கிறித்தவமும், தத்தம் தனித்துவத் தையும் பிறமதங்களிலிருந்து தாம் வேறுபடும் முறைமையை யும் தமிழில் நிறுவமுடியாது போயிருக்கும். எனவே மதங் களால் வந்ததாகக் கொள்ளப்படும் ''வளர்ச்சி'' உண்மையில் அவற்றைப் பொறுத்தவரையில் அத்தியாவசியமான தேவை என்பது புலனாகின்றது.

5

''தமிழில் மதங்கள்'' என்று கூறும் பொழுது உண்மையில் உயர் மதங்கள் பற்றியே சிந்திக்கின்றோம். சமூகவியல் நிலை நின்று நோக்கும் பொழுது இது ஏற்புடைமை உடைய ஒரு நிலை பாடாகாது. ஆயினும் இந்நிலை தவிர்க்க முடியாத ஒன் றென்பதை ஏற்கனவே பார்த்தோம். தமிழில் நாம் பேசும் உயர் மதங்கள் யாவுமே வளர்ச்சியுற்ற நாகரிகங்களின் வழியாகத் தோன்றியவையே.

''தமிழில் மதங்கள்'' என்னும் பொழுது இன்னுமொரு முக்கியமான ஒரு பரிமாணமுள்ளது. தமிழில் இடம் பெற்றுள்ள சில மதங்கள் இந்தியப் பண்பாட்டைத் தமது தளமாகக் கொண்டவை (சைவம், வைஷ்ணவம்). சில இந்தியப் பண்பாட்டு வட்டத்திற்கு அப்பாலிருந்து வந்தவை (கிறித்தவம், இஸ்லாம்). பின்னர் கூறப்பட்ட இருமதங்களும் தம்மைத் தமிழ் என்னும் மொழி நிலைப்பண்பாட்டுடன் இசைவு படுத்தியுள்ளன. இதற்குக் காரணம் அம்மதங்களை மேற்கொண்டோர் இப்பண் பாட்டு வட்டத்தினுள்ளிருந்தோரே. அவர்களுக்கு, அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கெனவே அறிந்திருந்த மொழியனுபவம், பண்பாட்டனு பவம் என்பனவற்றின் அடிப்படையிலேயே புதிய மதங்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளவும் இயைபு படுத்திக் கொள்ளவும் வேண்டியிருந்தது.

அம்மதங்கள் தங்கள் அடிப்படைக் கருதுகோள்களை- தமிழ்ப்படுத்தியும் தமிழ்ப்படுத்த முடியாதவிடத்து அம்மதத் தின் மூல அல்லது அறிமுக மொழியிலிருந்து பதப்பெயர்ச்சி செய்து கொண்டன. அல்லா, யெகோவா, ஹறாம் ஹலால், தீன், எல்லேலுயா' என்பன உதாரணங்கள். வைதீக மதங்களிற் கூட இந்நிலைமை காணப்படுகின்றது. அவை வடமொழிப்பதங்கள் பலவற்றைக் கையாளுகின்றன. (பாபம், புண்ணியம், ஆன்மா)

6

முதலில், சமூகவியல் நிலையில் மதங்கள் ஆற்றும் பணிகள் எவ்வாறு இலக்கியத்தின் மூலம் நிறைவுபெறுகின்றன, என்பதைத் தமிழ் நிலை நின்று காண்போம்.

மதம் ஒழுக்க நெறிகளையும் சமூகப்பெறுமானங்களையும் நிலை நிறுத்துகின்றது. தமிழிலே காணப்படும் அறநூல்கள் இவ்வுண்மையை வலுப்படுத்தி நிற்கின்றன. இங்கு அறம் என்னும் பொழுது ஒவ்வொரு மதமும் அதன் நம்பிக்கை, சடங்கு, உலகுநோக்கு ஆகியவற்றுக் கேற்ப அறப்பெருமானங் களையே வற்புறுத்துமென்பதை மறந்து விடக்கூடாது. தமிழி லுள்ள அறநூல் வளத்துக்குச் சமணபௌத்த மதங்கள் குறிப் பிட்ட ஒரு கால கட்டத்தில் (கி.பி. 3 முதல் கி.பி. 7 வரை) சமூக மேலாண்மையுடன் விளங்கியமையே காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதத்துக்கும் ஆட்சிமுறைக்கும் நெருங்கிய உறவு ஏற்படுவது தவிர்க்கப்பட முடியாததாகும். பெரும்பாலும் இவ்வுறவு சுமுகமானதாகவே இருக்கும். சில வேளைகளில் முரணுற்றதாகவும் இருக்கும். சமூக மாற்றம் நிகழும் சூழலையும் தன்மையையும் கொண்டு இந்நிலை தீர்மானிக்கப்படும். சோழர்காலத்திலே நிலவிய சைவமதப் பேணுகைக்கும் அரச நிறுவனத்துக்குமுள்ள தொடர்பினை இங்கு மனங்கொள்ளல் வேண்டும். கோயில் நிர்வாகம் முதல் சைவசித்தாந்தம் வரை இச்செல்வாக்கினைக் காணலாம். சைவசித்தாந்த கோட்பாட்டிற்கும் சோழ ஆட்சியமைப்புக்குமுள்ள அடித்தள ஒற்றுமையை இரண்டிலும் பேசப்படும் அதிகார வரன்முறையால் விளங்கிக் கொள்ளலாம். சோழர்களின் வைஷ்ணவ எதிர்ப்புக்கான சமூக பொருளாதாரப் பின்னணி இன்னும் தெளிவாக்கப்படவில்லை.

நிலவும் ஆட்சியமைப்புக்கெதிரான போராட்டங்களும் மதப் போர்வையினூடே நிகழ்த்தப்பெறுவதுண்டு. சைவ வைஷ்ணவ சண்டைகளுக்கு அத்தகைய ஓர் அடிப்படை இருந்திருத்தல் வேண்டும். அதனைத் தெளிவுபடுத்துதல் அறிஞர் கடன்.

தமிழ் நாட்டில் 15-ஆம், 16-ஆம் நூற்றாண்டில் முருக வணக்கம் மோலோங்கியமைக்கும் விஜய நகர நாயக்க மன்னராட்சி திணித்த படையாட்சி நிலமாகிய முறைமைக்கும் அடிப்படையில் தொடர்பிருத்தல் வேண்டும். தெலுங்கராட்சியும் இந்து மதத்தின் பேராலேயே நிறுவப்பெற்ற பொழுது தமிழ் மக்களின் தனித் துவத்தை முன்னிறுத்துவதற்கும் வலியுறுத்துவதற்கும் முருக வணக்கம் உதவியிருத்தல்வேண்டும். ''செந் தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்பான்'' என்பதன்

469255
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக பொருளாதார முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளுதல் அவசியம்.

மக்களாட்சிக் கோட்பாடு பரவிவரும் இந்நாட்களில் பிராமணீய முறைமைக்குள் வராத தெய்வங்களான மாரியம்மன் போன்ற தெய்வங்களின் வணக்கம் முதனிலைப் படுவதையும் நோக்குதல் வேண்டும். இவ்வாறு அவ்வணக் கங்கள் மேனிலை எய்தும் பொழுது அவற்றை வைதிகம் இசைவுபடுத்திக் கொள்ளும் முறைமையினையும் நோக்குதல் வேண்டும். கருமாரியைக் "கிருஷ்ணமாரி" எனச் சுப்ரபாதம் பாடும் மரபு தற்செயல் நிகழ்வன்று. இவை மத இலக்கியங்கள் சமூக அசைவியக்கத்தின் வெளிப்பாடாக அமைவதைக் காட்டுவனவாகும்.

இவற்றிலும் பார்க்க தமிழிலக்கியத்தைப் பொறுத்த வரையில் முக்கியமானது, பக்தியநுபவ வெளிப்பாடாகும்.

மத அநுபவத்தின் பல்வகைக் கோலத்தை உளவியல் நிலை நின்று ஆராய்ந்த வில்லியம் ஜேம்ஸ் அவர்கள் மனிதர்களின் தனிநிலைப்பட்ட மத அநுபவத்தையே முக்கியமானதாகக் கொள்வர். இந்த அநுபவம் அவர்களது ஆளுமையினடியாக வருவது. இவ்வநுபவம் மிக மிக முக்கியமானதாகும். இதுவே தமிழிலக்கியத்திற் பேசப்பெறும் பக்தியுணர்வின் அடிப்படையாகும். தெய்வத்தைத் தன்னிலைப்படுத்தி, மனித உறவுப் படிம அடிப்படையில் அத்தெய்வத்துடன் உறவு கற்பித்துக் கொண்டு, அந்த உறவின் அடிப்படையில் தோன்றும் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதே பக்தியநுபவத்தின் அச்சாணியாகும். தெய்வங்களை மனித நிலைப்படுத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மனித நிலையின் இன்றியமையா உணர்ச்சி பாவங்களை அத்தெய்வத்தின் மேல் ஏற்றி முழுமத அநுபவத்தையுமே சமூக அநுபவக் குறியீடுகளில் (ஆண்டான் அடிமை, காதலன் காதலி, தகப்பன் பிள்ளை தாய் பிள்ளை, நண்பன்) வெளிப்படுத்தும் முயற்சிதான் பக்தி முறையாகும். சைவ வைஷ்ணவ மதங்களில் நிலவிய ஐதீகங்கள், தெய்வங்களை மனிதப் பண்புப் படிமத்தில் நோக்க உதவின.

இந்தப் பக்திப் பாரம்பரியமே தமிழ் இலக்கியத்திற்கு அனைத்திந்தியப் பாரம்பரியத்தில் மிகமுக்கியமான ஓரிடத்தை வழங்கியுள்ளது. கி.பி. பத்தாம் நூற்றாண்டின் பின்னர் இது படிப்படியாக வடக்கு நோக்கிப் பரவுகின்றது. இந்தப் பக்தி அநுபவத்தின் தலை சிறந்த இலக்கிய வெளிப்பாடாய் அமைவன மாணிக்கவாசகரின் திருவாசகம். (திருக்கோவையார் அன்று) நம்மாழ்வாரின் பாசுரங்கள் ஆகியவையாகும். ஆக்கத்திறனுடைய பெண்ணொருத்தி இந்த அநுபவங்களைத் தனதாக்கிக் கொள்ளும் பொழுது எத்தகைய அற்புதமான கவிப்பிரவாகத்துக்கு இடமளிக்க முடியு மென்பதற்கு ஆண்டாளின் பாசுரங்கள் உதாரணமாகும்.

தமிழ் நாட்டின் இலக்கியப் பாரம்பரியம், 7-ஆம் 8-ஆம் நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டில் தோற்றுவிக்கப் பெற்ற நில மானிய அமைப்பில் நிலவிய பிரபுத்துவ உறவுகள், சமண பௌத்த மதங்களுக்கெதிராகத் தோன்றிய சமூக இயக்கத்தின் மனிதாயுதப் பண்புகள் போன்றவற்றின் ஒன்றிணைந்த கோலப் பொலிவுதான் பக்தி இயக்கம். இவ்வநுபவ நெறியின் தாக்கத்தை தமிழ் நாட்டினுள் பிற்காலத்தே வந்த மதங்களிலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாட்டின் மறைஞான (Mystic Poetry)க் கவிதையிலும் இப்பண்பினைக் காணலாம். மறைஞானக் கவிதைகளுக்கு உலகப் பொதுவான சில பண்புகள் உள்ளன. புலனுணர் வைக்கும், தெரிவுணர்வுக்கும் அப்பாற்பட்ட ஒரு தெளிவினை (ஞானத் தெளிவினை) புலனுணர்வுக் குறியீடுகளாலும் உருவகங்களாலும் புலப்படுத்துவது இக்கவிதை களின் முக்கிய பண்புகளில் ஒன்றாகும்.

இத்தகைய கவிதைகள் மொழிப்பயன்பாட்டிற் புதிய பரிமாணங்களை ஏற்படுத்துவன. சொல்லைக் கொண்டு சொல்லின் பொருளுக்கு அப்பாலுள்ள ஒன்றை உணர்த்தவும் வெளிப்படுத்தவும் முனையும் இக்கவிதைகள் இலக்கியத்தில் மிகமுக்கியமான இடத்தை வகிப்பது இயற்கையே. சித்தத்தின் தொழிற்பாட்டிற்கு அப்பாலுள்ள உணர்வு நிலையினை இவை குறிக்கும். ''சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட'' என வரும் தொடர் இதனை ஓரளவு சுட்டி நிற்கின்றது. இதனைப் பூரணமாக விளங்கிக் கொள்வதற்குக் கார்ல் மார்க்ஸ் மதம் பற்றிக் கூறிய ''உலகப்பிரக்ஞை பற்றிய மறுதலையான உணர்வு'' (a reversed world consciousness) என்னும் கோட்பாடு பற்றிய தெளிவுமிருத்தல் வேண்டும். ஏனெனில் உண்மையில் இந்த மறுதலையான உணர்வு மூலம் மனிதநிலை யின் சாரத்தையே (human essence) அக்கவிஞர்கள் காணமுனைகின்றனர். இத்தகைய கவிதை வெளிப்பாட்டில் ஈடுபடுபவர்கள் பௌதீக நிலையில் ''உன்மத்த'' நிலையுடை யோரே என்னும் உண்மையை நாம் மறந்துவிடலாகாது. இந்த உன்மத்தநிலை அகக்காரணிகளால் எழுவதாகவிருக்கும். அன்றேல் புறக்காரணிகளால் தூண்டப்படுவதாகவுமிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இலக்கியத்தில் இம்மறைஞானக் கவிதைகள் முக்கிய இடம் வகிக்கின்றன. வைதீகப் பாரம்பரியத்தில் வரும் மறைஞானக் கவிஞர்களான திருமூலர், மாணிக்கவாசகர், தாயுமானவர், இராமலிங்கர் ஆகியோரது கவிதையாக்கங்கள் தமிழிலக்கியத்தில் முக்கிய இடம் பெறுபவை. ஒரே மொழிப்பண்பாட்டு வட்டத்துள்ளிருந்து முகிழ்த்தெழும் இருவேறு மதங்களில் மறைஞானப் பாடல்களின் அநுபவ ஒருமையை விளக்குவனவாகத் தாயுமானவர் பாடல்களும் மஸ்தான் சாகிபுவின் பாடல்களும் அமைகின்றன.

தமிழிலுள்ள சித்தர் பாடல்களும் மறைஞானக் கவிதைப் பாரம்பரியத்தில் ஒரு புதிய பரிமாணத்தை உண்டாக்கியுள்ளன. பெரும் பாரம்பரியத்தைப் புறக்கணிப்பது போன்ற ஒரு 'பாவ' நிலையினை அவை சுட்டுவதை அவதானிக்கத் தவறக்கூடாது.

மத அநுபவத்தினை முற்றிலும் இதயதாபமாகவே கொள்ளாது புறநிலையான மெய்யியல் உரைகல் கொண்டு அதனை விளக்கி சித்தத்தின் அறிவியலைத் தெளிவுபடுத்தும் பொழுது மதத்தின் மெய்யியற் கோட்பாடுகள் தெளிவுபடுகின்றன. தமிழில் இதனைச் சைவசித்தாந்தம் பற்றிய சாஸ்திரங்களிற் கண்டு கொள்ளலாம். சைவசித்தாந்த சாஸ்திர விளக்கமாக அமைந்துள்ள நூல்களும் அச் சாஸ்திர நூல்களுக்கு எழுதப் பட்டுள்ள உரைகளும் தமிழில் தத்துவ சிந்தனைகள் வெளிப் படுத்தப்படும் லாவகத்தினை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. இந்த நூல்களிற் போதிய பரிச்சய மேற்படும் பொழுது தமிழில் எக்கருத்தினையும் ஐயந்திரிபறவும் மயக்கமறவும் எடுத்துக் கூறும் நடையாற்றல் தானே ஏற்படும். பண்டிதமணி சி. கணபதி பிள்ளையின் நடைச்சிறப்புக்கு இதுவே காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பியச் செல்வாக்குக்கு முற்பட்ட தமிழர் சிந்தனையின் இலக்கிய வெளிப்பாடுகளை நோக்கும் பொழுது தமிழர் சிந்தனை முற்றிலும் சமயச் சார்பற்றதாக இருக்கவில்லை என்பது புலனாகின்றது. திருக்குறளில் வரும் ஒழுக்கவியற் சிந்தனைகள்கூட மதச்சார்பினவே. குறிப்பிட்ட ஒரு மதத்தைச் சார்ந்தனவையாக இல்லாதிருக்கலாம். ஆனால் அந்த ஒழுக்க நெறிகள் பராம்பரிய மதங்கள் சுட்டும் அற அடிப்படை வழியாகவே வருவன.

தமிழர்களின் அழகியற் படிமங்கள் கூட மதநிலைப்பட்டனவாகவேயுள்ளன. ஐரோப்பியப் பாரம்பரியத்திலே தோன்றியது போன்ற மதச்சார்பற்ற நிலைநின்ற அழகியல் நோக்குத் தமிழில் இன்னும் இடம்பெறவில்லையென்றே கூறவேண்டும். ஐரோப்பியச் செல்வாக்கு வழித் தோன்றிய இலக்கிய வடிவங்களின் அழகியல் அடிப்படைகட்கும் பாரம்பரிய இலக்கிய வடிவங்களின் அழகியல் அடிப்படைக்குமுள்ள வேறுபாடுகளை நுனித்து நோக்கும் பொழுது இவ்வுண்மை நன்கு புலனாகும். தமிழின் மிகப் புதிய இலக்கிய வடிவமான புதுக்கவிதை பாரம்பரிய அழகியலுணர்வுகட்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை இங்கு நோக்குதல் வேண்டும்.

தமிழ் நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சி முறைமையும் தமிழ் பேசும் மக்களின் சிந்தனை வளர்ச்சி நெறியும் இலக்கியத்தையும் மதத்தையும் இணைத்தே வைத்திருந்தன. தமிழின் முற்று முழுதான சமயச் சார்பற்ற இலக்கிய வடிவங்கள் நாவலும் சிறுகதையுமே.

மதச்சார்பின்மை நவீன தமிழிலக்கியத்தின் பண்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
6 - 1 - 1996
LIBRARY

தமிழிற் கிறிஸ்தவ இலக்கியப் பாரம்பரியம்

"ஒரு விடயத்தில் தமிழ், இந்தியாவின் மற்றைய சுதேச மொழிகளிலும் பார்க்க மேன்மையொன்றினையுடையதாகவுள்ளது. மிகத் தொகையான கிறிஸ்தவ இலக்கியம் இம் மொழியிலேயுள்ளது. மற்றெந்தச் சுதேச மொழியினைப் பேசுபவர்களிலும் பார்க்கத் தமிழ் பேசும் கிறிஸ்தவர்கள் எண்ணிக்கை இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகமாயிருந்ததால், அந்த மொழியில் (தமிழில்) எழுதப் பெற்றுள்ள (கிறிஸ்தவ) நூல்கள், மற்றைய மொழிகளிலுள்ள கிறிஸ்தவ நூல்களின், விகிதப் படி பார்க்கும் பொழுது அதிக தொகையினவாகவேயுள்ளன.

—மீரோன் வின்ஸ்லோ—தமிழ் ஆங்கில அகராதியின் முன்னுரையிலிருந்து (1862)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

தமிழின் மேன்மைகளிலொன்றாக, இக்கூற்றையும் ஏற்றுக் கொண்டு திருப்தியடைந்துவிடுவது சுலபம். ஆனால் இக் கூற்றின் அடியாக எழும் இலக்கிய, பண்பாட்டு வினாக்களுக்கு விடை இறுக்க முனையும்பொழுதுதான்-அதாவது மற்றைய இந்திய மொழிகளிலும் பார்க்கத் தமிழிலே அதிகம் கிறிஸ்தவ நூல்கள் இருப்பதால், தமிழிலும், தமிழிலக்கியப் பாரம்பரியத் திலும் தமிழ்நாட்டிற் பயிலப்படும் கிறிஸ்தவத்தின் முறைமை யிலும் காணப்படும். காணப்படக்கூடிய முக்கிய மாற்றங்களை அறிய முனையும் பொழுதுதான் அதன் அடித்தளத்திலுள்ள சமூக வரலாற்றுப் பிரச்சனைகள் தெரியவரும்.

ஒரு மொழிப்பண்பாட்டு வட்டத்தினுள் வரும் மதமொன் றினது இலக்கியப் பாரம்பரியத்தினை அறிய முனைகின்ற பொழுது மூன்று விடயங்களைப் பற்றிய தெளிவான அறிவு இருத்தல் வேண்டும்.

1. குறிப்பிட்ட இலக்கியமும் இலக் கியப் பாரம்பரியமும் எவ்வகையில் அந்த மொழிக் கூட்டத்தினுள் ஓர் உப- பண்பாடாக வரும் அம்மதத்தினரின் தனித்துவத்தைப் பேண உதவு கின்றது?

2. இந்திய இலக்கியங்கள் அன்றேல் இலக்கியப் பாரம்பரியம் அந்தப் பெரு மொழிக் கூட்டத்தினை எவ்வாறு பாதிக்கின்றது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. குறிப்பிட்ட இவ்வுப-பண்பாடு தோன்றுவதற்கு முன்னர் அப்பெரு மொழி வட்டத்தின் பாரம்பரியங்கள், மரபுகள் எவ்வகையில் இவ்விலக்கியங் களையும் இலக்கிய மரபையும். நிர்ணயித்துள்ளது?

இவற்றுக்கான விடைகளை மத, பண்பாட்டு வரலாற்றி னடிப்படையிற் பெற்றுக்கொள்ளல் வேண்டும். கிறிஸ்தவ இலக்கியங்கள், இலக்கியமரபு, தமிழ்-கிறிஸ்தவப் பண்பாட்டுத் தொடர்பு ஆகியன பற்றி நிறைய எழுதப்பட்டு இருப்பது உண்மையெனினும், மேலே கூறப்பட்டவை பற்றி தமிழ் இலக்கிய வரலாற்று நிலைநின்று நோக்கிச் செய்யப்பட்ட ஆராய்ச்சிகள் மிகக் குறைவே. ஒப்பியல் மத ஆய்வு அடிப் படையிற் பல ஆராய்ச்சியாளர்கள் சிறப்பாகக் கிறிஸ்தவர் களாகவுள்ள தமிழறிஞர்கள் விரிவாக ஆராய்ந்துள்ளனர். வண. குலேந்திரன், வண. பிதா எஸ். ஞானப்பிரகரசம், டி. பாக்கிய முத்து, டாக்டர் தயானந்தன் பிரான்சிஸ், வண. பிதா இராச மாணிக்கம் போன்றோர்: இத்துறையில் முக்கியமானோர் என லாம். மேனாட்டவர்களிற் பலர் நீண்ட காலமாக இத்துறையில் ஈடுபட்டு வந்துள்ளனர். ஜி.யு. போப் முதல் பல அறிஞர்களின் பெயர்களைக் கூறலாம். அப்பட்டியலில் சேர்க்கப்பட வேண்டிய இரு அறிஞர்களது அண்மைக்கால ஆக்கங்களைக் குறிப்பிடுவது அத்தியாவசியமாகும். ப்றொர் ரிலியாண்டர் (Bror Tiliander) எழுதியுள்ள Christian and Hindu Terminology - A Study in their mutual relation ships, with Special reference

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

to Tamil area. (Uppsala-1970) எனும் நூலும் பிஷப் ஸ்ரீஃபன் நீல் (Stephen Neil) எழுதியுள்ள Bhakthi-Hindu and Christian (Madras 1974) என்னும் நூலும் இவ்வொப்பியல் ஆய்வினை மேற்கொண்டு செல்வதற்குப் பெரிதும் உதவுகின்றன. நிறுவன ரீதியாக மேற் கொள்ளப்படும் ஆய்வுகளில் மதுரை அரசரடி தமிழ்நாடு மறையியற் கல்லூரி மட்டத்திற் செய்யப்பட்டு வெளிக்கொணரப்படும் ஆய்வுகளும் முக்கியமானவை யாகும். கத்தோலிக்கத்தினைப் பொறுத்தவரையில், வண. தனி நாயக அடிகளாரால் தூத்துக்குடியில் நிறுவப்பெற்று இப் பொழுது திருச்சியில் சிறப்புறத் தொழிற்படும் தமிழ் இலக்கியக் கழகத்தின் பணி இத்துறையில் மிக முக்கியமானதாகும்.

முதலிலே கூறியதுபோன்று அத்தகைய ஆய்வினை மேற்கொள்வதற்கு குறிப்பிட்ட மதங்களின் இறைக் கோட்பாடுகள், மதச்சமூகவியல் அம்சங்கள் பின்பற்றப்படும் (தமிழ் நாடல்லாத) பிற தேசங்களிலும், நாடுகளிலும் தோன்றும் இலக்கியங்களின் தன்மை போன்றவற்றை அறிதல் அத்தியா வசியமாகும். இவ்வாசிரியர் அத்தகைய அறிவுக்கு உரிமை கொண்டாடக் கூடியவர் அன்று. எனவே தமிழ் நாட்டின் சமூக இலக்கிய வரலாறுகளில் ஈடுபாடு கொண்டவன் என்ற வகை யில் கிறித்தவம் தமிழ்ப்பேசும் மக்களிடையே பரவிய முறை யின் தன்மையினை எடுத்துக்காட்டி கிறித்துவம் இது காலவரை தோற்றுவித்துள்ள தமிழிலக்கியத்திற்கும், அந்தப் பரவல் முறைமைகளுக்குமுள்ள அடிப்படைச் சமூக இயையை எடுத்துக் காட்டுவதே இவ்வாசிரியரின் நோக்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

கிறித்தவத் தமிழ்ப் பங்களிப்புப் பற்றிப் பேசும் இலக்கிய வரலாற்றாசிரியர்கள் கிறித்தவத்தின் இருபெரும் கிளைகளான றோமன் கத்தோலிக்கப் பிரிவும் கத்தோலிக்கம் அல்லாத கிறித்தவமும் தமிழ்நாட்டிற் பரவிய முறைமையினையும், அதன் காரணமாகத் தமிழ் இலக்கியப் பங்களிப்பிற் பெறும் ஒன்றுக் கொன்று சிறிது வேறுபாடான இடத்தினையும் தெளிவு படுத்துவதில்லை. கிறித்தவர்கள் தமிழுக்காற்றிய "தொண்டு" எனக் கூறிக் கிறித்தவர்களை மானசீகமாகத் "தமிழிலிருந்து ஒதுக்கிவைக்க விரும்பியோரும், கிறித்தவர்கள் பங்களிப் பினையும் "மேனாட்டர்" பங்களிப்பினையும் எவ்வாறு பிரித்து நோக்குவது எனத் தயங்கினோருமெனப்பலர் இக் களத்திலே நடமாடியுள்ளனர். தமிழ் இலக்கிய வரலாறு என்பது தமிழிலேயுள்ள இலக்கியங்களின் காலவரன்முறை நெறிப் பட்ட வரலாறே எனக்கொண்டதனாலேயே இக்குழப்பம் ஏற் பட்டது எனலாம். இலக்கிய் வரலாறு என்பது இலக்கியமும் வரலாறும் ஒன்றையொன்று பாதிக்கும் வகையினை அறிந்து இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படும் வரலாறு. (Literary History) எனும் நோக்கு நெறிநின்று இவ்விட யம் ஆராயப்பட்டிருப்பின் இப்பிரச்னை தோன்றியிருக்காது.

றோமன் கத்தோலிக்கமும், கத்தோலிக்கம் சாராத கிறித்துவப் பிரிவுகளும் தமிழ்நாட்டிற் பரவிய வரலாற்றுப் பின்னணியும், பரவிய முறைமையும் அவற்றின் பரவலுக்குக் காரணமாக விருந்த சமூக அரசியற் சக்திகளும், அப்பரவலின் சமூகப் பயன்பாடும் ஆதிக்கமும் பெற்ற சமூகசக்திகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானவை என்பதை அறிதல் அத்தியாவசியமாகும்.

தமிழிற் கிறித்தவத்தின் வரலாற்றையும், இஸ்லாத்தின் வரலாற்றையும் அறிய விரும்பும் எவரும் தனியே தமிழ் நாட்டுடன் (இந்தியாவினுள்) மாத்திரம் நின்று அவ்வரலாறு களை முற்றுமுழுதாக அறிந்துவிட முடியாது. இலங்கையில் இம்மதங்கள் பரவிய முறைமையையும், தொழிற்பட்ட, தொழிற் படும் முறைமைகளையும் அறிதல் அத்தியாவசியமாகும். உண்மையில், இஸ்லாமிய, கிறித்தவத் தமிழ் இலக்கியங்கள் இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் தோன்றிய முறைமையிலும், வளர்த்தெடுக்கப்பட்ட முறைமையிலும் பரஸ்பர உறவுகள் இருப்பதைக் காணலாம். தமிழ் இலக்கிய வரலாற்றில் இது ஒரு முக்கியமான பரிமாணமாகும். நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சி யில் இலங்கை பெறும் இடத்திற்கு முன்னோடியாக இஸ்லாமிய, கிறித்தவ இலக்கிய வளர்ச்சியில் இலங்கை முக்கிய இடம் பெறுகின்றது.

3

இலங்கைத் தமிழ் பேசும் கிராமங்களில் கிறித்தவர்களை ''வேதக்காரர்கள்'' என்றும் இந்துக்களைத் ''தமிழர்கள்'' என்றும் கூறும்வழக்கம் உண்டு. கிறித்தவர்களை வேதக்காரர் கள் என்னும் மரபு தமிழ்நாட்டிலும் உண்டு. ஆயினும் தமிழ் பேசும் முஸ்லீம்களுடன் ஒப்பு நோக்கும்போது தமிழ் கிறித்த வர்கள் தமிழ் முஸ்லீம்கள் போன்று மதப்பண்பாட்டில் அதிக மான ஒதுக்குநிலையை கடைப் பிடிப்பதில்லை என்பது தெரிய வரும். இஸ்லாம் நிலைநிறுத்தவரும் சமூக இயைபு காரண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகவே இந்த நெகிழ்ச்சியின்மை காணப்படுகிறது எனலாம். இத்தகைய ஒரு ஒதுக்குநிலை முன்பு கிறித்தவர்கள் இடத்தேயும் காணப்பட்டதுதான். "தமிழ் நாட்டின் பண்பாட்டின் மறு மலர்ச்சியிற் கிறித்தவப் பண்பாட்டின் வரலாறு" பற்றி ஆராய்ந்த டி.ஏ. தங்கசாமி அவர்கள் "தமிழ்ப்பண்பாடு என்பது இந்து ஆலயமாகி விடாது என்பதை அந்தப் பண்பாட்டை மறுதலித்துக் கைவிடுவதனால் தாங்கள் வேர் அற்றவர்களாகவும் தமது சொந்த நாட்டில் தாம் அந்நியர்களாகவும் ஆகுகின்றார்கள் என்பதையும் முழுக்குழுமமாக (Community) அறிந்து கொள்வதற்கு அதிக காலம் எடுத்தது" என்று கூறியுள்ளதை (Bulletin of the Christian Institute for the study of Religion and society Vol II No. 2 June 1965 பக் 19) இங்கு மனம் கொள்ளல் வேண்டும்.

ஆயினும் இன்றைய தேசிய உணர்வுகள் தேசியத் தேவைகள், அறிவு நிலை ஆகியன காரணமாக மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவற்றிற்கு முன்னர் எமது சமூகப் பண்பாட்டு விஸ்தரிப்பு எவ்வாறு நடந்துள்ளது என்பதை அறிதல் அத்தியாவசியமாகும். இலக்கிய வரலாறு எம்மீது திணிக்கும் கடமை இதுவாகும்.

கிறித்தவம் தமிழ் நாட்டிற்கு வந்த இரண்டாவது இந்தியத் தோற்றச் சார்பற்ற மதமாகும். முதலாவது இஸ்லாமாகும். இந்த மதங்களினது இந்தியப் பரம்பலில் அவற்றின் மதமாற்ற முறைமை முக்கிய இடம் பெற்றன. அரசியற் படை அதிகார வலுவும், தனித்த மதமாற்ற முயற்சிவெற்றியும் இப்பரம்பலுக்குக் காரணமாகவிருந்தன. ஆனால் தமிழ் நாட்டில் இஸ்லாத்தின் பரவலுக்கு அரசியல் படை அதிகார வலு அதிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவவில்லை. வணிக உறவுகள் காரணமாக இஸ்லாம் தமிழ் நாட்டின் கீழைக் கோடியில் (கீழைக்கரை முதல் காரைக்கால் வரையுள்ள பகுதியில்) இடம் பெற்றதெனலாம். இஸ்லாம் வட இந்தியாவிற் பரவிய முறைமைக்கும், தமிழ் நாட்டில் பரவிய முறைமைக்கும் வேறுபாடு உண்டு.

4

தென்னாசிய அநுபவத்திற் கிறித்தவமும், பாரம்பரியப் பண்பாடுகளும், தேசிய வாதமும் தொழிற்பட்டுள்ள முறைமைப் பற்றி ஆராய்ந்துள்ள பேராசிரியர் சின்னப்பா அரசரத்தினம் வேறொரு பண்பாட்டுச் சூழலில் தோன்றி வளர்த்தெடுக்கப் பெற்ற மதங்கள் புதிய பண்பாட்டுச் சூழலில் நிலைநாட்டப் படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் பொழுது இரு காரணிகள் அப்பரம்பலைத்துரிதப்படுத்து வதற்கு உதவும் என்றும், அவை அரசியலும், புதிய இடத்தின் புதிய மதத்தினரின் குடியிருப்புக் குழுக்களுமாகும் என்றும் கூறியுள்ளார். கிறித்தவத்தைப் பொறுத்த வரையில் ஆரம்பக் கட்டத்தில் இந்தக் குடியிருப்புக் குழு அமிசம் நன்கு தொழிற்படவில்லை. ஏனெனில் கிறித்தவத்தின் வருகைக்குக் காரணமாக அமைந்த ஐரோப்பியர்களின் குடியிருப்புகள் கடற் கரையோரங்களில் தனித்த பிறதொடர்பற்ற குடியேற்றங்களாக இருந்தன. எனவே பிராமணீயமோ, இஸ்லாமோ, தமிழ் நாட்டில் வேரூன்றிய முறையில், அதாவது அந்தச் சமூகத்தின் அசை வியக்கத்தினூடாக மேற்கிளம்பும் முறையில், கிறித்தவம் ஆரம்பத்தில் தமிழ் நாட்டில் இருக்கவில்லை. (Christianity Traditional Cultures, and Nationalism: The South Asian Experience. Jaffne 1978).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவிற்குள்ளும், தமிழ் நாட்டிற்குள்ளும் முதன் முதலில் றோமன் கத்தோலிக்கமே வந்தது. மலையாளக் கரையில் சீரியக் கிறித்தவர்கள் அதற்கு முன்னரிலிருந்தே வாழ்ந்து வந்துள்ளாரெனினும், தமிழ்நாட்டினுள் அது முதற்றடவையாக பதினாறாம் நூற்றாண்டில் வந்த பொழுது போர்த்துக்கேய அதிகாரத்தின் ஒரு விஸ்தரிப்பகாவே வந்தது.

கிறித்தவம் முற்றிலும் ''பறங்கி மார்க்கமாகவே'' நின்ற காலமது. கிறித்தவத்திற் சேர்வதைப் ''பறங்கிக் குலம் புகுதல்'' என்று குறிப்பிட்டனர். வண. பிதா ஃபிரான்சிஸ் சேவியர் இந்தியாவுக்கு வருவதற்கு முன்னர் (1542) நடைபெற்ற மதமாற்றத்தில் மதம் மாற்றப்பட்டவர்களின் மொழியையோ, பண்பாட்டையோ அறிவதற்கு எவ்வித முயற்சியும் எடுக்கப் படவில்லை. தூத்துக்குடிப் பரவர்கள் முதன் முதலில் மதம் மாற்றிய முறைமை இதற்கு உதாரணமாகக் காட்டுவர். கன்னியா குமரிக்கருகே மதச் சார்பற்ற கடமைகளைச் செய்வதற்கெனப் போர்த்துக்கேயரால் நியமிக்கப் பெற்ற, ஏற்கனவே மதம் மாறிய ஒருவர் (இவர் பெயர் ஜோன்தகுறூஸ் ஆகும்) அப்பகுதி மக்களிடம், அப்பொழுது முத்துச்சலாபங்களை ஆண்டு வந்த அராபியர் கொடுக்கும் தொல்லைகளிலிருந்து விடுபட்டு போர்த்துக்கேயர் பாதுகாப்பு பெறுவதற்கு மதம் மாறுவதே உசிதமெனச் சொல்லி அவர்களின் மதமாற்றத்துக்குக் காரணமாக இருந்தார் என்று கூறப்படுகிறது. (C.B Firth-An introduction-to Indian Church History. Madras. 1976 பக்-52) மதமாற்றம் செய்யப் பட்டாலும் இவர்களிடையே கிறித்தவ ஈடுபாட்டை வளர்ப்பதற்கான எவ்வித நடவடிக்கைகளும் ஆரம்பத்தில் செய்யப்பட வில்லை என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண. பிதா ஃபிரான்சிஸ்சேவியர் (பின்னர் இவர் அர்ச்சிஷ்ட குருவாக்கப் பெற்றார்) தமிழ் நாட்டிலே தேவ ஊழியம் செய்த காலத்திலும் **(1542 - 1545)** நிலைமை பெருமாற்றம் அடைந்ததாகக் கூறமுடியாது. ஆனால் மதம் பற்றிய போதனையைத் தமிழில் வழங்க வேண்டும் என்னும் முறைமை தொடங்குகின்றது. பிரான்சிஸ் சேவியர் அவர்களே தான் கையாண்ட முறைமை பற்றிக்குறிப்பிட்டுள்ளார். ''அவர்கள் எம் மொழியையும் நாம் அவர்கள் மொழியையும் விளங்காத நிலையில். அவர்களுள் திறமை வாய்க்கப் பெற்ற படித்தவர்கள் சிலரைத் தெரிந்தெடுத்து அவர்களுள்ளே ஸ்பானிஷையும் தமிழையும் தெரிந்த சிலரைத் தேடமுயன்றேன். (அப்படிக் கண்டு கொள்ளப்பட்டவர்களும் நானுமாக) நாங்கள் பல நாட்கள் ஒன்று கூடி பேருழைப்பின் பின்னர் அடிப்படைச் சமயக் குறிப்புக்களை மொழி பெயர்த்தோம்.'' அவ்வாறு மொழி பெயர்க்கப்பட்ட தமிழ்ப் பாடத்தைச் சேவியர் ஒலிபெயர்த்துப் போர்த்துக்கேயத்தில் எழுதிப்பாடமாக்கினார் என்று கருதப்படுகிறது. (டி. பாக்கியமுத்து. Early Prose Translation in Tamil ஐந்தாம் உலகத் தமிழ் நாட்டு மலர், மதுரை, 1981. பக்கம் xiii) முதன் முதலில் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட நூல் என்று இன்று கொள்ளப்படும். சார்ற்றில்ஹா **(Cartilba-1554)** வரும் தமிழ் நடை அவர்கள் கையாண்ட தமிழ் நடையினை ஓரளவு உணர்த்துமெனக் கொள்ளலாம்.

"ஆகாசமும் பூமியும் படசசவன சாவமும்
ஆனவனெ பிதாவெ தமபிரானெ விசுவாசம
அவவணணம எனனடெ காததவே
யெசு கிறிஸ்து அவவனெட புதானெ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவனெ சுததமான சித்ததினெ॥டெய
கருணெ கொண்டு கெறபம் ஆயி
கனனியாஸதிரி மரியததிலெ
பெறநதவனெ."

(இப்பகுதி திரு பாக்கியமுத்து அவர்களின் மேற்குறிப்பிட்ட கட்டுரையிலே தரப்பட்டுள்ளது).

ஆனால் இந்நூல் அச்சிடப்பெற்றது வீரமாமுனிவர் தமிழ் எழுத்துக்களை மாற்றியமைப்பதற்கு முன்னர் என்பதையும், அக்காலத்திலே சாதாரண மக்கள் விளங்கத்தக்க அதே வேளையில் இலக்கணச் செம்மையுடைய மொழி நடை உரு வாகவில்லை என்பதையும் இந்த நூலே ஆசிய மொழிகளிற் தோன்றிய முதலாவது கிறித்தவ மொழி பெயர்ப்பு என்பதையும் மனங்கொண்டே இது பற்றிய மதிப்பீட்டினைச் செய்தல் வேண்டும்.

இதோடு தொடர்பான இன்னும் ஓர் உண்மையும் உண்டு. ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட மதமாற்ற நடவடிக்கை களினால் கத்தோலிக்கத்துக்குக் கொண்டுவரப்பட்டவர்கள் தமிழின் உயர் பாரம்பரியங்களை எடுத்துக் கூறத்தக்கவர்களாக இருக்க வில்லை. சாதி முறைமையில் உயர் இடம் பெறாத வர்களே பெரும்பாலும் இம்மதமாற்றத்துக்கு உட்படுத்தப் பட்டனர். கிறித்தவர்கள் ஆகும் பொழுது ஒவ்வொருவரும் தமது வாழ்க்கை முறைகளை முற்றிலும் மாற்றி அமைக்க வேண்டியிருந்தது. சாதி முதல் உணவு வரை பாரம்பரியங்கள் பலவற்றைக் கைவிட்டனர். கிறித்தவம் எல்லாவகைகளிலும் பறங்கி மார்க்கமாகவே காணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1605-இல் இந்தியாவை வந்தடைந்து 1606-இல் தமிழ் நாடு வந்து சேர்ந்த றொபேட்த நொபிலி இந்த நிலைமையை மாற்ற விரும்பினார். கிறித்தவனாவதால் ஒருவன் தனது பாரம் பரியத்தை இழக்க வேண்டியதில்லை என்பதை வலியுறுத்திய நொபிலி கிறித்தவத்தை இந்திய மயப்படுத்தும் பணியை மேற்கொண்டார். தமிழ் சமஸ்கிருத மொழிகளை நன்கு படித்து. காவி உடை தரித்து இந்திய மரபின் சந்நியாசிக் கோலத்துடன் இருந்த இக் கத்தோலிக்க பிதா தனது பெயரையே "தத்துவ போதக சுவாமிகள்" என்று வைத்துக்கொண்டார். அவர் வாழ்க் கையைப் போன்றே எழுதிய நூல்களும் கத்தோலிக்கத்தை தமிழின் உயர் மரபுடன் இணைப்பனவாகவே அமைந்தன. தமிழிலும் தெலுங்கிலும் கிறித்தவப் பாடல்களை இயற்றிய அவரது இலக்கிய ஆக்கங்களாகக் கொள்ளப்படுபவை "ஞானோபதேசம்" (ஐந்து பாகங்கள்) "ஆத்ம நிர்ணயம்" "அஞ்ஞான நிவாரணம்" "தூஷணதிக் காரம்" "புனர்ஜென்ம ஆட்சேபம்" என்பனவாம். தத்துவ போதசுவாமிகள் முதுமையடைந்து கண்பார்வை இழந்திருந்த காலத்தில் யேசு சங்கத்தின் தலைவரின் ஆணைப்படி 1645-இல் யாழ்ப்பாணம் சென்று அங்கிருந்த யேசுசபையின் மேலாளராக இருந்தார் என்று கூறப்படுகிறது. தத்துவ போதகரின் யாழ்ப்பாண வாழ்க்கை பற்றி அறிவது வரலாற்று ஆசிரியர்கள் கடமை யாகும்.

தத்துவ போதகர் தோற்றுவித்த பண்பாட்டு முக்கியத்துவத் தினை உணர்ந்து கொள்ளுதல் அவசியமாகும். பறங்கி மார்க்க மாக இருந்த கத்தோலிக்கத்தை சத்திய வேதமாக மாற்றும் முயற்சியை மேற்கொண்ட அவருக்கு இந்தியச் சமூக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையான சாதியமைப்பை கிறித்தவத்தின் ஓர் அங்க மாக ஏற்றுக் கொள்ளும் ஓர் நிலைமையும் ஏற்பட்டது. ஆயினும் நொபிலியின் இப் பெருமாற்ற முயற்சி அவரது சம காலத்தவர் பலரால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இறுதியில் பாப்பரசர் ஐந்தாம் கிறகோறி 1623–இல் நொபிலிக்குச் சாதக மாகவே தீர்ப்பளித்தார். தத்துவபோதகரின் முயற்சிகள் கிறித்த வத்தை இந்தியாவிற்குள் அகவயப்படுத்துவதாக இருந்தன எனப் பேராசிரியர் அரசரத்தினம் கூறுவர். இந்த அகவயப்பாடு (internationalization) இலக்கியத்தைப் பொறுத்தவரையில் மிக முக்கியமான ஓர் அமிசமாகும். மதநடைமுறைகள் கிரியை களில் கூட அத்தியாவசியப்படுத்தப்படாத ஒரு அமிசம் ஆக்க இலக்கியத்துக்கு அச்சாணியாக அமையும். அதாவது ஆக்க இலக்கியம் அந்த மொழி மரபின் உணர்ச்சி பகைப்புலத்தினடி யாகவே தோன்ற முடியும். ஆக்க இலக்கியம் ஒரு சமுதாயத் தின் ஆத்மக்குரல். அது அந்த சமுதாயத்தின் அடிவேரிலிருந்து வெளிவந்து மலருதல் வேண்டும். அதாவது ஆக்க இலக்கியத் திற்கு ஆதார சுருதியாக அமையும் அநுபவம் அந்த சமூக அநுபவத்தின் அடியாக அந்த சமூககத்துக்குப் பழக்கமான மொழிக்குறியீடுகள் வழியாக வருதல் வேண்டும். உயர் மரபை வெளிப்படுத்தும் அதே வேளையில் அது அடிவேரையும் மறந்திருத்தல் கூடாது.

கத்தோலிக்கத்தின் வழியாக வந்த தமிழ் மரபு தவறாத ஆக்க இலக்கியங்கள் தத்துவ போதகரின் பின்னர், அதே மதுரை மிசனிற் கடமையாற்றிய தைரிய நாதராகிய வீரமா முனிவர் எனக்குறிப்பிடப் பெற்ற வண. பிதா கொன்ஸ்ற்றான்ற ஜோசப் பெஸ்கியின் ஆக்கங்கள் முதலே தமிழிலே தோன்றத் தொடங்குகின்றன. பெஸ்கியின் தேம்பாவணியை பெரிதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழும் நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது. ஆனால் அதன் இலக்கியத் தன்மை பற்றி யேசுதாசன் தம்பதி கூறுவது கவனத் திற் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். ''தேம்பாவணி இது வரை தமிழில் தோன்றிய சிறந்த கிறித்தவ கவிதை ஆக்கங் களில் ஒன்றெனினும் தமிழர்களால் பெருமனதுடன் மொழியப் பெறும் நலவிசேடங்கள் எல்லாம் அதனை உயர்த்த கவிதை யாக்கம் ஆக்கிவிட முடியாது..................பெஸ்கி தனது சிற்றிலக் கியங்களிலே வரும் கவிதையிலும் பார்க்க குறைந்த அளவு கவிதையையே தேம்பாவணியில் தருகின்றார். (யேசுதாசன், ஹெப்ஸியா யேசுதாசன். A History of Tamil Literature, **Madras 1960**. பக்கம் 239.) உரைநடையாக்கம் என்ற வகையிலும் மாத்தி ரம் அல்லாது சமூக அங்கதம் என்னும் வகையிலும் பரமார்த்த குருவின் கதை தமிழ் இலக்கிய வரலாற்றிலே முக்கிய இடம் பெறுவதாகும்.

பெஸ்கியின் ஆக்கங்கள் தமிழ் இலக்கியத்தின் இன்னொரு வளர்ச்சியையும் சுட்டி நிற்கின்றன. பெஸ்கி மதுரையில் இருந்த காலத்தில் (17-11-1742) தரங்கம்பாடியில் லூதரன் திருச்சபை யினர் தம்மை நிறுவிக்கொண்டனர். பெஸ்கியின் எழுத்துக்கள் பல தரங்கம்பாடியினரைத் தாக்கத் தரங்கம்பாடியினர் பெஸ் கியை எதிர்த்து எழுதத் தொடங்கினர். தரங்கம்பாடியினரின் திருச்சபைப் போதகம் என்ற ஆக்கம், வீரமாமுனிவரின் வேத விளக்கம் என்னும் நூலுக்கான பதிலுரையாகும். சீகன்பால்கு செய்த பைபிள் மொழிபெயர்ப்பைக் கிண்டல் செய்தார் என்றும், சீகன்பால்குவின் மொழிநடையை (கொடுந்தமிழை) கண்டித் தார் என்றும் அறியக் கிடக்கிறது.

கத்தோலிக்கம் இவ்வாறாகத் தமிழ் இலக்கிய மரபுடன் இணைந்து பாரம்பரியத்தின் வழிசென்று புதியவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகம் செய்து தமக்கும் தமிழுக்கும் புதிய வளர்ச்சிப் பரிமாணங்களை ஏற்படுத்திக் கொண்டதெனினும் தமிழ் நாட்டின் சமூக நிறுவனங்களுள் ஒன்று என்ற வகையில் அதன் பலம் இந்த உயர் பாரம்பரியங்களிலே இருக்கவில்லை.

கத்தோலிக்கராக மாறிய மக்கள் சுலபத்தில் மதம் மாறுவதில்லை. தென்னிந்தியக் கிறித்தவ வரலாற்றில் வெகுசன இயக்கங்கள் எனக் குறிப்பிடுவதும் (Mass Movements) பெருந்தொகையான மக்களின் திடீர் மதமாற்றத்திற் சில கட்டங்களிற் கத்தோலிக்கரும் இடம் பெற்றுள்ளனர். எனினும் பொதுவில் கத்தோலிக்கர்கள் தமது மதத்தைக் கைவிடுவதில்லை. இலங்கையின் வரலாற்றில் இதனைக் காணலாம். கத்தோலிக்க மதமாற்றம் தனிப்பட்டவர்களின் மதமாற்றத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காது முழுக்குழுமத்தின் (Community) மாற்றத்துக்கு முக்கியத்துவம் கொடுத்ததால் அந்தக் குழுமங்கள் பிறதாக்கங்களுக்கிடையேயும் தமது மத நெறியைப் பாதுகாப்பது சுலபமாயிற்று. கத்தோலிக்கர்கள் முதலில் செய்த மதமாற்றங்கள் சாதியமைப்பில் உயர் இடம் பெறாத குழுமங்களிடையேதான் செய்யப்பட்டன வெனினும் பின்னர் இதுவே அவர்களின் தொடர்ச்சிக்கும் வன்மைக்கும் காரணமாயிற்று. இதனால் கத்தோலிக்கத் தமிழ் இலக்கியத்தின் இருகிளைப் பட்ட ஒரு நிலைமையை நாம் அவதானிக்கலாம். தேம்பாவணி போன்ற காப்பியங்களும், கலம்பகம் போன்ற சிற்றிலக்கியங்களும் கத்தோலிக்கத்தின் தமிழ் மரபு நிலைப்பாட்டை எடுத்துணர்த்தும் அதே வேளையில் அடிநிலைக் கிறித்தவர்கள் நிலையில் ஏறத்தாழக் கிராமிய இலக்கியங்கள் என்றே கொள்ளப்படத்தக்க நாடகங்கள் (கூத்துக்கள்), ஒப்பாரிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியன அவர்கள் மத உணர்ச்சிகளை வெளியிடுவதற்கு உதவியாக அமைந்தன.

இலங்கையின் கத்தோலிக்க தமிழ் இலக்கிய பாரம் பரியத்தை சிறிது ஆழமாக நோக்கும்பொழுது இவ்வுண்மை புலப்படும்.

5

கத்தோலிக்கத் திருச்சபை முதன் முதலில் தொடர்பு கொண்ட பொழுது (1543 அளவில் தென்னிந்தியாவில் நடந்த மத நடவடிக்கைகளின் விஸ்தரிப்பாக அவர்கள் நடவடிக்கை கள் தொடங்கின) எத்தகைய அரசியல் தொடர்புகளை வைத் திருந்தனர் என்பதும், சுதேசப்பண்பாட்டை எவ்வாறு அணு கினர் என்பதும் முக்கியமானவிடயங்களாகும். ''இலங்கைத் தமிழர் பற்றிய போர்த்துக்கேய மனப்பான்மைகள் சில (1550-1658)'' என்னும் கட்டுரையில் பேராசிரியர் சி.ஆர். பொக்ஸர், இவ்வாரம்ப காலக்கத்தோலிக்கர்கள் (போர்த்துக்கேயர்) சுதேசப் பண்பாட்டைச் சரிவர நோக்கவில்லையென்றும், கிறித் தவப் பிரசாரத்துக்காக மாத்திரமே தமிழைப் படிக்கும் ஒரு பண்பு காணப்பட்டதாகவும் கூறுகிறார். தமிழகத்தில் கூடத் தத் துவ போதக சுவாமிகள் (1577 - 1656) ஒருவரைத் தவிர மற்றைய கத்தோலிக்க குருமார் இத்தகைய மனப்பான்மையைக் கொண்டவர்களாகவே காணப்பட்டனர் என்று கூறுவர். பேராசிரியர் அரச ரத்தினம் அவர்களும் இக்கருத்தினை ஏற்றுக் கொள்வர்.

போர்த்துக்கேய ஆட்சிக்காலம் வரை (1658) இக்கூற்றுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்துவதாகவிருக்கலாம். ஆனால் இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சியில் கத்தோலிக்க மதம் பெருத்த ஆக்கினைகளுக்குட்படுத்தப்பட்ட பொழுது மக்கள் வாழ்க் கையிற் கத்தோலிக்கம் சுவறியிருந்த தன்மை காரணமாகவே அது அழியாமற் தப்பியது எனலாம். ஆங்கிலேய ஆட்சி வந்தபொழுது இறப்பிற் மாதுக் கிறித்தவர்கள் மதம் மாறியது போன்ற கத்தோலிக்கர் ஒல்லாந்தர் ஆட்சியின் கீழ் மதம் மாறவில்லை. கத்தோலிக்கரின் இம்மத ஈடுபாடு தொடர்ந்து பேணப்பட்டது, பேணப்படுகிறது.

இப்பேணுகைக்கும், பெருக்கத்துக்குமான காரணத்தை விளங்கிக் கொள்வதற்குக் கத்தோலிக்கச் சமூக அமைப்பை அறிந்து கொள்வது அத்தியாவசியமாகின்றது. அதிகாரப்பட்டு கால கட்டத்தில் நிற்கும் மட்டக்கிளப்புப் பிரதேசம் கண்டி மன்னரின் ஆட்சியின்கீழ் வந்தது. எனவே இலங்கையின், வடபகுதியில் கத்தோலிக்கத்தின் சமூக அடிப்படையையே அறிந்துகொள்ள வேண்டும்.

கத்தோலிக்கருக்குப் பின்வந்த புரட்டஸ்தாந்திகள் தனி மனிதர்கள் மதமாற்றம் செய்வதிலே அதிக ஈடுபாடு காட்டினார். ஆனால் முன்வந்த கத்தோலிக்கரோ முழுக் குடும்பங்களையே நமது மத மாற்றத்திற்கான கூறுகளாகக் கொண்டனர். 'குழுமம்' பிரதேச அடிப்படையிலும், சாதி அடிப்படையிலும் அமைந் தது. பல்வேறு சாதியினரும் மதம் மாற்றப்பட்டனரென்னும் பொழுது ஒரு சுற்று வட்டத்தினுள் சகல வெள்ளாளர்களும் மாற்றப்பட்டனர். மெதடிஸ்த, அமெரிக்கன் மிசனரிமார் இரண் டொரு குடும்பங்களையே மாற்றினர். மேலும் இந்தச் சாதிக் குழும மதமாற்றங்கள் பாரம்பரிய இந்துச் சமூகத்தில் முக்கியத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவம் வகிக்காத குழுமங்களிடையே வன்மையாக நிலை நிறுத்தப்பட்டது.

மேலும் மன்னார் போன்ற சில இடங்களில் பிரதேசத்தின் பெரும் பான்மையான பகுதி கத்தோலிக்கத்தினுட் கொண்டு வரப்பட்டது.

சமூக மேல்மட்டத்தினர் குறைவாகவும் நடுநிலைப்பட்டவர் களும் கீழ்மட்டத்தினருமே அதிகமாகவும் மதம் மாற்றப்பட்ட பொழுது, இப்புது மதம் தொடர்ச்சியாகத் தொழிற்படுவதற்கு வேண்டிய இலக்கியங்கள் மேல்மட்டத்தினரின் தேவையிலும் பார்க்க ஒரு கீழ் மட்டத்தினரின் தேவைகளை பூர்த்தி செய்வன வாக அமைதல் அத்தியாவசியமாகும்.

அதாவது ஈழத்துத் தமிழ் கத்தோலிக்கர்களின் சமூகப் பின்னணி அவர்களிடையே தோன்றிய இலக்கியங்களை எவ் வாறு நிர்ணயித்துள்ளது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

அடுத்து இம்மதக் குழுவினரிடத்தே இலக்கியக் கையளிப்பு (ஒரு தலைமுறை மற்றைய தலைமுறைக்கு இலக்கியத்தைக் கையளிக்கும் முறை) எவ்வாறு நிகழ்ந்தது என்பது பற்றியும் தெளிவாக அறிந்து கொள்வது அவசியமாகும்.

அச்சு முறைமையினைத் தமிழுக்கு அறிமுகம் செய்து வைத்தவர்கள் கத்தோலிக்கரே எனினும் அக்காலத்தில் அச்சு முறைமை நன்கு பரவவில்லை என்பதையும் இலங்கையில் போர்த்துக்கேயர் காலத்தில் கத்தோலிக்கர்கள் தமிழில் எந்த நூலையும் அச்சிட வில்லையென்பதையும் அவ்வாறு நூல்கள் அச்சிடப்பட்டிருப்பினும் மிகமிகப் பெரும்பான்மையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தோலிக்கர் எழுத்தறிவுப் பாரம்பரியமுடைய சாதிகளைச் சாராதவர்கள் என்பதையும் நாம் மனத்திருத்திக் கொள்ளுதல் அவசியம்.

இவ்விடயத்தில் சுவாமி ஞானப்பிரகாசர் தரும் தகவல்கள் மிக முக்கியமானவையாகும். வண. சுவாமி ஹென்றி யூலோன் (Dr. Henry Joulain O.M.I. Bishop of Jaffna 1898 - 1918) அவர்களின் கீழ் யாழ்ப்பாணத்தின் கத்தோலிக்கம் வளர்ந்த வரலாற்றைக்கூறும் XXV years of Catholic Progress எனும் தமது நூலில் (1925) சுவாமி ஞானப் பிரகாசர் 1870க்கு பின்னரே யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்கர் அச்சு முறைமையை வன்மை யாகப் பயன்படுத்தினர் என்றும், 1843-இல் கத்தோலிக்கர்கள் புரட்டஸ்தாந்திகளின் அச்சியந்திர சாலைகளையே பயன் படுத்த வேண்டியிருந்ததென்றும் அதற்கு முன்னர் புத்தகங்கள் எழுதப்பட்டதும், பிரதியெடுப்போரால் கையெழுத்துப் பிரதி கள் எழுதியெடுக்கப்பட்டது என்றும் கூறுகின்றனர். அச்சுயந் திர வசதியில்லாமை காரணமாக தம்மை விட அமெரிக்க மிசனரிமார் அதிக முன்னேற்றத்தைப் பெறக்கூடிய நிலை யிலுள்ளரென யாழ்ப்பாணத்தின் உயர் கத்தோலிக்கக் குருமார் கூறியுள்ளார். இந்து மதத்தை எதிர்த்து வெளியீடுகளை விடு வதில் இவர்களிடையே ஓர் ஒற்றுமை காணப்பட்டது. அதனாலேதான் அமெரிக்க மிசன் அச்சகத்திற் கத்தோலிக்க நூல்களும் அச்சிடப்பெற அனுபவிக்கமுடியாத கூட்டத் தினரிடையே கத்தோலிக்கம் பரவியிருந்தமையும். அந்தக் கூட்டத்தினரின் எழுத்தறிவு வளர்ச்சி வேகம் பெரிதாகவிருக்க வில்லையென்பதும் மிகமுக்கியமான வரலாற்றுத் தரவுகளாகும்.

எனவே அத்தகைய நிலையினோரின் நிலைக்கு ஏற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்கள் அத்தியாவசியமாகின்றன.

இக்கூட்டத்தில் இலக்கியங்கள் என்பன எழுத்து வடிவத்தினதாகவே இருக்க வேண்டியதில்லை என்பதையும், வாய்மொழி இலக்கியங்களும் மேலே குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் என்பதையும் குறிப்பிடுதல் அவசியமாகும். இப்பகைப்புலத்தின் பின்னணியிலேயே ஈழத்துத் தமிழ்க் கத்தோலிக்க இலக்கியங்களின் 'தொகை' பற்றியும், 'மரபு' பற்றியும் ஆராய்தல் வேண்டும்.

ஈழத்துத் தமிழ் இலக்கிய வளத்தை ஒன்றுதிரட்ட முனைந்தவர்கள் தந்துள்ள ஆசிரியர் பெயர்களிலும் நூற் பெயர்களிலும் இலங்கைத் தமிழிலக்கியத்தில் இடம் பெறவேண்டிய கத்தோலிக்கப் புலவர் களினதும் ஆக்கங்களினதும் தொகையளவு வேறுபட்டேயிருந்து வந்துள்ளது. 'ஈழத்துப் பூதன்றேவனார் காலந்தொடக்கம் கலாநிதி நடேசபிள்ளை காலம்வரையும் இலங்கையில் வாழ்ந்த சிறந்த தமிழ்ப்புலவர்களின் கவிதைக் களஞ்சியம்' என்ற விவரணத்துடனும் 'இந்நூலை ஈழத்துக் கவிதைகளின் களஞ்சியமாக மட்டுமன்றி ஈழத்துச் செய்யுளிலக்கிய வரலாற்று நூலாகவும் விளங்க வேண்டுமென்னும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டது என்ற பதிப்பாசிரிய முகவுரையையும் கொண்டு வெளியிடப்பட்டுள்ள ஈழத்து தமிழ்க் கவிதைக் களஞ்சியம் (1966) என்னும் நூலில் இடம் பெற்றுள்ள 143 புலவர்களுள் கத்தோலிக்கப் புலவர்கள் பத்துப்பேருக்குக் குறைந்த தொகையினரே இடம் பெற்றுள்ளனர். அத்தொகுதியில் வந்துள்ள கத்தோலிக்க இலக்கியப் பாடல்களுட் பெரும்பாலானவை தொல்சீர் பிரபந்த வடிவிலே அமைந்துள்ளவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நூலில் நிலைமை இதுவாக, ஒருபிரதேசத்தின் தமிழ்ப் புலவர்களின் சரித்திரத்தைத் தொகுத்துத் தந்துள்ள திரு. ம. பெஞ்சமின் செல்வத்தின் மன்னார் மாதோட்டத் தமிழ்ப் புலவர் சரித்திரம் 1769 - 1976 என்னும் நூலில் தரப்பட்டுள்ள 51 புலவர்களுள் 43 புலவர்கள் கத்தோலிக்கர்களாகும்.

யாழ் கத்தோலிக்க அச்சகத்திலும், கொழும்புத்துறைக் கைத்தொழிற் பாடசாலை அச்சகத்திலும், மாதகல் தைரிய நாத அச் சகத்திலும் 1925 வரை வெளிவந்துள்ள கத்தோலிக்க ஆக்க இலக்கிய நூல்களின் பட்டியலைச் சுவாமி ஞானப்பிரகாசர் முன் குறிப்பிட்டுள்ள நூலிலே தந்துள்ளார். நூல்களின் தொகை 131 ஆகும்.

கத்தோலிக்க மேலாண்மையுடைய பகுதிகளின் பிரதேச இலக்கிய வரலாற்றை நுணுகி ஆராயும் பொழுது இன்னும் அதிகமான நூல்களை அறிய வரலாம். குருநகர், சில்லாலை போன்ற இடங்களில் இதற்கான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

கத்தோலிக்கர்களால் எழுதப்பெற்ற சமய நிலைப்பட்ட ஆக்க இலக்கியங்களை ஆராயப்புகும் பொழுது, அவ்விலக் கியங்களுள் நாடகம், புலம்பல் போன்றவையே பெரும்பான் மையாக இருப்பதை அவதானிக்கலாம். பென்சமின் செல்வம் தந்துள்ள பட்டியலிலும் சுவாமி ஞானப்பிரகாசர் தந்துள்ள பட்டியலிலும் இவ்வுண்மையை நிரூபிக்கின்றனர். ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் காவிய, பிரபந்த மரபுக்கே அதிக அழுத்தம் கொடுத்துச் செல்கின்றது. மன்னார் மாதோட்டப் பகுதியில் புலவர் வரலாற்றைத் தொகுத்த பெஞ்சமின் செல்வத்துக்குத் தமது ஆய்வு வட்டத்துள் வரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர்கள் கூற்றையே பெரிதும் 'எழுதுவது' முக்கிய விடய மாகின்றது.

''நூலில் குறிப்பிடப்பட்டுள்ள புலவர்கள் புராணம், காப்பியம் போன்ற விருத்தப்பா வகைகளுட் செல்லாது தனித்த நாடகங்களை மாத்திரமேன் யாத்தார்களென்றோர் ஆசங்கை வினா எழுப்பப்படுவது உண்மையே. புராணாதி காவியங்கட்கு நாடகம் எத்தகைமையிலும் பிற்பட்டதல்ல.''

மற்றொரு வகையிற் பார்ப்போமாயின் உயர்ந்த பொருளாழ முள்ள புராண காவிய வகைகள் கற்றுத்தேறிய பேரறிஞர்க்கே யன்றிக் கல்லாதாரும் கண்டுகளிக்கும் வாய்ப்புடைமை நாடகங் கட்கேயன்றி உயர் காவியங்கட்கில்லை.

இராம சரிதையைக் கம்பர் காவியமாகப் பாட அதே சரிதையை அருணாசலக் கவியராயர், கீர்த்தனை நாடகமாக வும், திருச்செல்வர் சரிதையை அருளப்ப நாவலர் காவிய மாகவும், குரு குல நாட்டுத்தேவர் நாடகமாகப் பாடியதையும் சிந்திக்குக.

மேலும் மன்னர் புலவர்களின் நடவடிக்கைகளை நோக்கு மிடத்துச் சிலரேயன்றி ஏனையோர் ஆசிரிய மாணவ முறையிற் கற்றவர்களல்ல. கற்கக்கூடிய சூழலும் அவர்கட்கிருக்க வில்லை. தான் தாமே தமக்கெட்டியவரை கற்றுக் கொண்ட துடன் அறிவுக்கெட்டாத சந்தேகங்களை மட்டுமே கற்றோ ரிடம் கேட்டறியும் பெற்றியுடையவர்களாகக் காணக்கிடக் கிறது. (பக் ii & iii)

தொல்சீர் இலக்கிய மரபு பேணப்படாதற்கு அமைதி காணும் பெஞ்சமின் செல்வம் அவர்களின் கூற்று நடந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுக்கு விளக்கம் கொடுக்கும் தொனியில் அமைய வேண்டியதில்லை. ஏனெனில் ஈழத்துக் கத்தோலிக்கத் தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தின் ஆணிவேரே இதுதான். பெரும் பான்மையான கத்தோலிக்க மக்களின் வாழ்க்கை நிலை காரணமாக அவர்கள் நாடகம் போன்ற அவைக் காற்றுக் கலையையும், வாய்மொழிப் பாடல் மரபையும் கொண்டே தங்கள் மத இலக்கியத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றனர். இது அப்பாரம்பரியத்தின் பலமேயன்றிப் பலவீனமன்று.

இந்நிலைமையை மனத்திற்கொண்டு சைவப் பாரம்பரி யத்தை நோக்கும் பொழுது சைவத்தின் தனித்துவத்தைப் பேணு வதற்குத் தோன்றிய இலக்கிய இயக்கம் வாய்மொழி இலக்கியப் பாரம்பரியத்தைப் புறக்கணித்து வைதீக உயர் இலக்கியப் பாரம் பரியத்துக்கே இடம் கொடுத்தமை தெரியவரும். அந்த இயக்கம் எழுத்தறிவுடைய நிலவுடைமையாளரையே தனது களமாகக் கொண்டிருந்தது.

ஒரே மொழிப் பண்பாட்டிலுள்ள ஒரு மதக் கூட்டத்தினருள் ஒரு சிலர் தொல்சீர் இலக்கிய மரபையும், மற்றோர் வாய் மொழிப் பாரம்பரிய இலக்கிய மரபையும் பேண முனையும் பொழுது அச்சமுகத்தில் நிலவும் சமனற்ற வளர்ச்சி நன்கு தெரிய வரும்.

கத்தோலிக்க ஆக்க இலக்கியங்களைப் புரட்டஸ்தாந்த ஆக்க இலக்கியங்களுடன் ஒப்பு நோக்கும் பொழுது அவற்றுக் கிடையேயுள்ள வேறுபாட்டுக்குச் சமூக அடிப்படை வேறு பாடே காரணம் என்பது புலனாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6

பதினெட்டாம் நூற்றாண்டு முதல் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் புரட்டஸ்தாந்தக் கிறித்தவம் பரவத் தொடங்குகின்றது. இலக்கிய நடவடிக்கைகளில் நிலவிய மேலாண்மையைக் கொண்டு நோக்கும் பொழுது, பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுக் கிறித்தவத் தமிழ் இலக்கியத்தில் புரட்டஸ்தாந்தமே முக்கிய இடம் பெறுதல் வேண்டும். அவ்வாறு புரட்டஸ்தாந்தம் முக்கியம் பெறத் தொடங்கியதனாற் சில சுவாரசியமான இலக்கிய நிகழ்வுகளும் ஏற்பட்டன. கத்தோலிக்கர்களுக்கும் புரட்டஸ்தாந்தினருக்குமிருந்த துண்டுப் பிரசுரப்போரே இங்குக் குறிப்பிடப் பெறுகின்றது. கிறித்தவத் தமிழ் இலக்கிய பாரம்பரியத்தைக் காலவரன்முறைப்படி தொட்டுக் காட்டுவதானால் இக்கட்டத்தில் புரட்டஸ்தாந்த இலக்கிய முயற்சிகளையே குறிப்பிடுதல் வேண்டும். இக்கட்டுரை அத்தகைய ஒரு நீண்ட ஆய்வாக அமையாததனாலும், இக்கட்டுரையின் அடிப்படை அணுகுநெறிக்கு அம்முறைமை அத்தியாவசியமற்றதாகையினாலும், இக்கட்டத்தில், கத்தோலிக்கத் தமிழ் இலக்கியச் செல்நெறி 18-ஆம், 19-ஆம் நூற்றாண்டுகளிலும் எத்தகையதாக இருந்தது என்பதனைப் பருவரைவாகப் பார்த்து மேற்செல்லல் பொருத்தமுடையதாகவிருக்கும்.

பதினெட்டாம் நூற்றாண்டு முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டு நடுக்கூறுவரை கத்தோலிக்கம் தென்னிந்தியாவில் பல வகையான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றது.

மிகமுக்கியமாக போத்துக்கேய ஆட்சி முடிவுடன் அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலவரை அதற்கிருந்த 'பொன்றாத்துணை'யான அரச பலத்தை இழந்தது. இது அதன் தேவ ஊழியச் சேவையைப் பாதிக்கவே செய்தது.

அத்துடன், குறிப்பாகப் பதினெட்டாம் நூற்றாண்டில் யேசு சபையினருக்கு மதப்பணி உரிமை வழங்குவது சம்பந்தமாகப் பாப்பரசர் மட்டத்தில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக அடி நிலையிலே மதப்பணிகளில் ஈடுபடக்கூடிய ஒரு மதப்பணிப் பிரிவினரைக் க்த்தோலிக்கம் இந்தியச் சூழலில் இழந்திருந்த தென்றே கூறுதல் வேண்டும். மீண்டும் 1814க்குப் பின்னரே அவர்கள் இந்தியாவிலே தேவ ஊழியம் செய்வதற்கான பாப் பரச அங்கீகாரத்தைப் பெறுகின்றனர்.

இக்காலகட்டத்திற் காணப்பட்ட திருமண்டலப் பிரிவுகளும் மதப் பணியில் செயற்றிறனை வற்புறுத்துவனவாக அமைய வில்லை. கொச்சித் திருமண்டலத்தின்கீழ் இலங்கை தென் தமிழ் நாடு, மலையாளக் கரையோரப் பகுதி ஆகியனவும் மைலாப்பூர் திரு மண்டலத்தின்கீழ் வட தமிழ்நாடு முதல் ஒரிஸ்ஸா, வங் காளம் வரையும், மிஞ்சிய இந்தியப் பிரதேசங்கள் பெயரளவில் கோவாவின் கீழும் வந்தன. போத்துக்கேயப் பத்றுஆடோ (Padroado) ஒழுங்கு முறையின்படி இவற்றுள் சில போத்துக் கேயக் குருமார்களது ஆதிக்கத்தின் கீழும், மேலதிக மண்டலங் களாகப் பிரகடனப்படுத்தப்பட்ட மண்டலங்கள் (Vicariates) பாப்பரசரின் அதிகாரத்தின்கீழும் வந்தன. இந்தியக் கத்தோ லிக்க நடவடிக்கைகளில் மேலாண்மை யாருக்குரியது (போத்துக்கேயக் குருமாருக்கா பாப்பரசருக்கா) என்ற பிரச்சினை தீர்க்கப்படும் வரை கத்தோலிக்கம் ஆழமான, அகலமான மதப் பணிகளில் ஈடுபட முடியாதிருந்தமை இன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வரலாற்றுண்மையாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இப்பிரச்சினை 1886 வரை நிலவிற்று எனலாம். ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் கத்தோலிக்கத் தாக்கம். 1838 முதல் (பிரெஞ்சு யேசு சபையினரின் வருகையுடன்) தொடங்குகின்றதெனலாம். அவர்கள் முன்னர் நொபிலியின் மதுரை மிஷன் தொழிற்பட்ட பிரதேசங்களிலே தம்மை நிறுவிக் கொண்டனர்.

கத்தோலிக்கக் குருத்துவ அமைப்பில் ஏற்பட்ட மாற்றம் பற்றியும் இங்குக் குறிப்பிடல் அவசியம். போத்துக்கேய ஆட்சிக் காலத்திலும் அங்கொருவர் இங்கொருவர் எனத்தக்க அளவில் இடைக்கிடை இந்தியர்கள் மதகுருமார்களாகக் காணப்பட்டன ரெனினும் 1886-இன் பின்னரே, முற்றுமுழுதான இந்திய மத குருமாரை வளர்த்தெடுக்கும் முறைமை தொடங்கு கின்றதெனக் கிறிஸ்தவத்தின் இந்திய வரலாற்றாசிரியர்கள் கூறுவர். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலும் யேசு சபையினரின் அடிப்படைச் சமயப் போதகர்களாகச் சிலரை வைத்திருந்தன ரெனினும் இந்தியக் குருத்துவ மரபொன்றினை வளர்த்தெடுத்திருக்கவில்லை. இந்தியக் குருமார் எனவிருந் தோர் பெரும்பாலும் கோவானியர்களே. இந்நிலைமை மாறிச் சுதேசக் குருமார் வரத் தொடங்கியதும் நிலைமை மாறத் தொடங்கிற்று. அவர்கள் தமது பாரம்பரியத்துடன் யேசுவை இணைத்துக் கொண்டனர். அத்துடன் குருமாருக்கும் அவர்தம் கூட்டத்தினருக்குமிருந்த தொடர்பும் (Communication) வளரவும் இறுகவும் தொடங்கிற்று. இலக்கிய வளர்ச்சிக்கு இத்தகைய பண்பாட்டிறுக்கம் அத்தியாவசியமான தாகும். இந்த விடயத்தில் புரட்டஸ்தாந்த மதங்கள் முன்மாதிரியாக நடந்து கொண்டனவெனலாம். அவர்கள் தமது தொழிற்பாடுகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப நிலைகளிலேயே சுதேச மிசனரிமார்களைப் பயிற்று விப்பதில் அக்கறை காட்டினர். குறிப்பாக மெதடிஸ்த சபையின் முயற்சியை இங்கு உதாரணமாகக் காட்டலாம். 1750 முதல் 1798 வரை தமிழகத்திற் கடமையாற்றிய கிறிஸ்தியன் ஷ்வாட்ஸி னால் (Christian Schwartz) மதமாற்றம் செய்யப்பட்டவரும் பின்னர் குருத்துவப் பட்டம் பெற்றவருமாகிய கிறிஸ்தியன் தவீது (Christian David) என்ற தமிழ்ப் போதகரே வட இலங்கையில் மெதடிஸ்த நடவடிக்கைகளுக்குதவியராவர். மேலும் இலங்கை மெதடிஸ்த மிஷனின் குருவாகச் சேர்ந்த ஜோன் பிலிப் சண்முகமும் (1825) றிச்சாட் வாட்சன் வைர முத்துவும் (1848) மிக்முக்கியமானவர்கள். ஆறுமுக நாவலரால் தொடங்கப் பெற்ற சைவமீட்பு இயக்கம் றிச்சாட் வாட்சன் வைரமுத்துப் போன்றோர் யாழ்ப்பாணச் சமூகத்தில் ஏற்படுத் திய தாக்கத்தின் காரணமாகவே தோன்றியதென்றும் வைர முத்து போன்றோரின் சமூக முன்னேற்றத்தை எதிர்த்த பழைமைவாதிகளின் எதிர்ப்பே சைவமீட்பு இயக்கமாக வளர்ந்தது என்றும் கிறித்தவச் சார்புடைய வரலாற்றாசிரியர் எழுதியுள்ளார். இலங்கையின் கத்தோலிக்கத்தின் நிலைமை சிறிது வேறுபட்டது. ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழ் (1658 - 1796) கத்தோலிக்கம் அடக்கு முறைக்கு ஆட்பட்டது. ஆயினும் அத்துன்பங்களுக்கிடையிலேயும் முன்னர் குறிப்பிடப் பெற்ற அடிநிலை விசுவாசம் காரணமாகக் கத்தோலிக்கம் நின்று நிலைத்தது. ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்துத் தோன்றிய கத்தோலிக்கத் தமிழ் இலக்கியங்களே இதற்குச் சான்று. ஆங்கிலேய ஆட்சி நிறுவப்பெற்றதன் பின்னரே வழிபாட்டுரிமை நிலை நிறுத்தப் பெறுகின்றது. 1846 வரை பொதுவான இந்துமத எதிர்ப்புக்கு புரட்டஸ்தாந்த் அச்சகங்களைப் பயன்படுத்துமளவிற்கு ஓர் ஒருமைப்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவரிடையே இருந்ததெனினும், புரட்டஸ்தாந்திகளுக்கு முக்கியமாக ஆங்கிலத் திருசபைக் கிருந்த அதிகார மேலாண்மையையும் கத்தோலிக்கர் வெறுத்தனர் என்பதும் சுவாமி ஞானப்பிரகாசரின் நூலொன்று (xxv years Catholic Progress-1925) மூலம் தெரிய வருகின்றது. கல்வித்துறையில் இவர்களுக்கிருந்த வாய்ப்பின்மை காரணமாக இவர்களது சமயக்கிளைகள் ஒவ்வொன்றும் பாடசாலைகளை அமைக்கும் முறைமைக்காக (Denominationa Schools) பாடுபட்டன. இதன் காரணமாக ஆறுமுக நாவலர் சைவ ஆங்கிலப் பாடசாலையை 1872-இல் வண்ணார்பண்ணையில் நிறுவிய பொழுது, அதனை வரவேற்று கத்தோலிக்க ஆங்கிலப் பத்திரிகை (Catholic Messenger) குறிப்பொன்று வெளியிட்டது (தை-1872).

கத்தோலிக்க மறுமலர்ச்சி பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்தே இலங்கையிலும் தொடங்குவதை நாம் அவதானிக்கலாம். ''கத்தோலிக்கப் பாதுகாவலன்'' பத்திரிகையின் ஆசிரியப் பதவியை ஏற்றிருந்த காரைக்கால் அருளப்ப முதலியார், சைமன் காசிச் செட்டியார், சுவாமி ஞானபிரகாசன் முதலியோரின் இலக்கிய முயற்சிகளும் சூசையப்பர் அச்சகத்தில் அச்சிடப் பெற்ற இலக்கிய மத நூல்களின் தொகையும் இவ்வுண்மையை நிரூபிக்கின்றன.

இந்த நடவடிக்கைகளின் தொடர்ச்சியை தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் இருபதாம் நூற்றாண்டிலும் காணலாம். இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் இந்திய கிறித்தவத்தில் ஏற்படும் மாற்றங்களை மிகச்சிறப்புடன் உள்வாங்கியும், முன்னணியில் நின்று அதற்காகப் பாடுபட்டும் வருகின்ற கத்தோலிக்கர்கள் தம்மைத் தமிழினத் தனித்துவ உணர்ச்சியுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைத்துக் கொண்டுள்ள முறைமை சிறப்பாக ஆராயப்பட வேண்டியது. இப்பண்பு புரட்டஸ்தாந்தரிடமும் காணப்படுவதால், இறுதியில் இது பற்றி சிறிது விரிவாகக் குறிப்பிடப்படும்.

இன்று கத்தோலிக்கம் தன்னைத் தமிழ்ப் பண்பாட்டுடன் இணைத்துக் கொண்டுள்ள முறைமையினை எடுத்து விளக்குவதற்குப் பொருத்தமான உதாரணமாக விளங்குபவர்கள் கத்தோலிக்கப் பின்னணியில் தோன்றிய நவீன தமிழ் இலக்கிய எழுத்தாளர்களே. இவர்களிற் சிலர் மதச்சார்பற்ற நோக்கினையேயுடையவர்களெனினும், கத்தோலிக்கப் பண்பாட்டுப் பின்னணி இவர்களின் முகிழ்ச்சிக்கும் அடிப்படையான மனிதாபிமான உணர்வுக்கும் உதவியுள்ளது என்பதை மறந்துவிடுதல் கூடாது.

7

தமிழிற் புரட்டஸ்தாந்த ஈடுபாடு இருமட்டங்களில் ஏற்பட்டது. முதலாவது அரசியல் வழிவந்த ஈடுபாடாகும். ஒல்லாந்தர் குடியேற்றங்களும் (பழவேற்காடு 1609, நாகப்பட்டினம் 1660) ஒல்லாந்தர் ஆட்சியும் (இலங்கை கடற்கரைப் பகுதிகளில் 1658 - 1796) பின்னர் வரும் பிரித்தானிய அதிகார வலயங்களும் தொடர்ந்து வந்த பிரித்தானிய ஆட்சியும் இந்தத் தொடர்பினை ஏற்படுத்தின. போத்துக்கேய ஆட்சி முதல் தொடங்கும் ஒரு பண்பு காரணமாக, இந்த மேனாட்டாட்சிகளில் நிருவாக உத்தியோகங்களிலிருந்தோர் பெரும்பாலும், புறநடையெதுவுமின்றி, ஆட்சியிலிருப்பவர்களின் மதநெறியை ஏற்றுக்கொள்ளும் (அல்லது ஏற்றுக் கொள்ளுவதாக காட்டிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளும்) ஒரு பண்பு நிலவிற்று. தத்தம் சமூக மட்டத்தில் தங்கள் அதிகாரத்தைப் பேணிக்கொள்வதற்கு அவர்களுக்கு இது அத்தியாவசியமாய் இருந்தது. இத்தகைய ஒரு நிலையினால் பாரம்பரிய நிலவுடைமை மரபு, அந்த அடிநிலைகளிற் பேணப்பட்டு வந்தது. (சுதந்திரத்திற்குப் பின்னர் நிலவுடைமைச் சக்திகளுடனும் பணித்துறை ஆட்சி-beauracracy சேர்ந்து கொண்டுள்ளது) ஆங்கிலேய ஆட்சி இந்த மதமாற்றத்தில் அத்துணை சிரத்தை காட்டவில்லை. ஒல்லாந்தர் காட்டினர்.

ஒல்லாந்தர் ஆட்சியினதும் ஒல்லாந்தர் ஆட்சியின் வீசுகரமாக அமைந்த ''இறப்பிறமாதுச் சபை'' யினதும் (Dutch Reformed Church) ஆதிக்கமும் தாக்கமும் இலங்கையிலேயே வன்மையாகக் காணப் பட்டது. ஆனால் புரட்டஸ்தாந்தப்பிரிவு என்னும் வகையில் இத்திருச்சபையும் தென்னிந்தியாவின் லூதரன் சபைகளுடன் தொடர்பு கொண்டிருந்தது.

> *''......ஒல்லாந்த அரசினர் தென்னிந்தியாவில் மிஷனாரி ஊழியம் புரிந்த தரங்கை.....மிஷனாரிமாரிடம் இலங்கையிற் குரு ஊழியஞ் செய்யத் தக்க வாலிபரைப் படிப்பிக்க உதவி செய்யவும் அவரிட முள்ள அநுபவம் பெற்ற ஓர் மிஷனாரி இலங்கையைச் சந்தித்து விசேஷ ஊழியம் செய்து போகவும் கேட்டனர். அவர்கள் கேள்விக்கு தரங்கை மிஷனாரிமார் சந்தித்து அக்காலத்தில் மிஷனாரிமாருள் மிகப் பிரசித்தி பெற்றிருந்த கனம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவார்ச் ஐயரை **(Rev Schwartz)** *அனுப்ப அவர் 1760-ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாணத்திலும் இலங்கையிலும் ஐந்து மாசங்கள் தரித்து நின்று பல இடங்களைச் சந்தித்துச் சுவிசேசத்தைப் பிரசிங்கித்து நற் கருணை ஆராதனை நடத்தி 400 பேருக்கு நற்கருணை பரிமாறினார்.'' (சி.டி. வேலுப்பிள்ளைப் போதகர். அமெரிக்க மிஷன் சரித்திரம். 1922 பக்கம் 25.)*

தமிழ் நாட்டின் கிறித்தவ வரலாற்றில் மிகமுக்கிய இடம் பெறும் இன்னொருவர் (முதலாமவர் நொபிலி என்பதை ஏற்கெனவே பார்த்தோம்) யாழ்ப்பாண வரலாற்றுடன் சம்பந்தப்பட்டுள்ள முறைமையை நோக்கும் பொழுது தமிழகத்துக்கும் வட இலங்கைக்குமுள்ள புவியியல் அண்மைப்பாடு இதிலும் நெருக்கமான உறவுகளுக்கு வழி கோலியமை மிகவும் புலனாகிறது. ஒல்லாந்தர் ஆட்சி முறையின் தன்மை காரணமாக மதம் மாறியவர்கள் பலர் மதப் பொய்ம்மையாளராக இருந்தமை தவிர்க்க முடியாத ஒன்றாகும். ஆனால் இறப்பிறமாதுத் திருச்சபையினர் தமது தொழிற்பாட்டிற்கு வரன்முறையான கல்வியை வற்புறுத்திற்று. இதனால் உயர் கல்வி நிறுவனங்கள் தொடங்கப் பெற்றன. நல்லூரில் 1690-இல் நிறுவப்பட்ட செமினரியின் முக்கியத்துவத்தையும் வரலாற்றினையும் பேராசிரியர் அரசரத்தினத்தின், முன்னர் குறிப்பிட்ட நூலிற் கண்டு கொள்ளலாம். (பக். 26, 27) 1703-இல் நல்லூர் செமினரி கொழும்புச் செமினரியுடன் இணைக்கப்பட்டது. பின்னர் அதுவே அவர்கள் ஆட்சிக் காலத்தில் இலங்கையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரேயொரு உயர் கல்வி நிலையமாக இருந்தது.

வரன்முறையான கல்வியிற் கவனம் செலுத்துதல் புரட்டஸ்தாந்த பயில் நெறியாகும். இப்பயில் நெறி இவர்களது உருவாக்கத்தில் முக்கிய இடம் பெறுவதால் அதன் வரலாற்று வழிமுறையை வற்புறுத்திக் கூறுவது அவசியமாகும்.

பிரித்தானிய ஆட்சிக் காலத்தைப் பொறுத்தவரையில் மதத் துறையில் இலங்கையில் உடனடியான நெகிழ்ச்சி காணப் பெற்றது. அதனைப் பிரித்தானிய ஆட்சியின் ஆரம்ப கட்டத் திலேயே காணலாம். ஆனால் தமிழ் நாட்டில் இத்தாராண்மை உடனடியாகத் தெரியவில்லை. காரணம் இந்திய ஆட்சி ஆரம்பத்தில் ஆங்கிலக்கிழக்கிந்திய கம்பெனியாலேயே நடத்தப் பெற்று வந்தது. அவர்கள் 1813க்கு முன்னர் மிசனரி இயக்கங்களுக்கு ஊக்கம் அளிக்கவில்லை எனலாம். 1813இல் பட்டயம் (Charter) பாராளுமன்றத்தால் புதுப்பிக்கப்பட்ட பொழுது மிஷனரி இயக்கங்களுக்குக் கட்டுப்பாடற்ற சுதந்திரம் இருத்தல் வேண்டும் என்று கூறப்பட்டது. அதன் பின்னரே இந்தியாவில் புரட்டஸ்தாந்த மிஷனரி இயக்கங்கள் வன்மை யுடன் இயங்கத் தொடங்கின.

ஆனால் புரட்டஸ்தாந்து மிஷனரி இயக்கத்திற்கு ஆங்கில ஆட்சிக்கு முற்பட்ட ஒரு வரலாறு உண்டு.

ஆசியாவின் முதல் புரட்டஸ்தாந்த மிஷனரிமார்கள் எனக்குறிப்பிடப்படும் பார்த்தலோமியோ சீகன்பால்கும் ஹென்றி பிலோஸ் கோவும் (Bartholomew Zicganbalg Henry Pluetschau) தென்மார்க்கின் ஆட்சிக்குட்பட்டுக் கிடந்த தரங்கம்பாடிக்கு அனுப்பப்பட்டனர். இவர்கள் 1906-ஆம் ஆண்டு வந்து சேர்ந்தனர்.

புரட்டஸ்தாந்த மிஷனரி இயக்கத்தின் தன்மையையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் வழியாக அவர்கள் தோற்றுவித்த இலக்கியங்களின் தன்மையையும் விளங்கிக் கொள்வதற்கு சீகன்பால்குவையும் பிளேட்சோவையும் அனுப்பி வைத்த இயக்கத்தின் அறிவு நிலைப் பின்னணியை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

உண்மையான கிறித்தவ நெறியை மீட்டெடுப்பதற்கென தங்களை அர்ப்பணித்துக் கொண்ட செருமானிய லூதரியவாதி கள் பக்தி இயக்கம் (Pietism) எனப் பெயரிய இயக்கத்தை ஆரம்பித்து ''ஆண்டவனின் நற்செய்தியை'' பரப்ப விரும் பினர். விவிலியத்தை நன்கு ஆழமாகப் படிப்பதனையும் குழுமநிலை வழிபாட்டையும் வற்புறுத்திய இவ்வியக்கத்தினர் பாடசாலைகளையும் அனாதைவிடுதி ஒன்றையும் விவிலியக் கழகம் (Bible Society) ஒன்றையும் நிறுவினர். இந்த நடவடிக்கை களின் விஸ்தரிப்பாகவே மிஷனரி வேலைக்காக ஆட் களையும் பயிற்றவும் தொடங்கினர். இந்த இயக்கத்தின் நடவடிக்கை களில் ஆர்வம் காட்டிய தேனிஷ் மன்னன் மேலே குறிப் பிட்ட இருவரையும் இந்தியாவிற்கு அனுப்பி வைத்தான்.

எனவே இவர்களின் நடவடிக்கைகளில் விவிலியத்தை ஆழமாகப் பயில்வதும் கல்வியில் கவனம் செலுத்துவ்தும் முக்கிய இடம் பெறல் இயல்பாகும். மேலும் சூழலை அறிந்து அச்சூழலில் இப்பணியை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்ற அறிவுத் துணிவு முறையிலும் இவர்களுக்கு நம்பிக்கை இருந்தது: மதத்தை வெறுமனே சடங்குகளின் தொகுதியாக நோக்காது அறிவும் உணர்வும் ஒருங்கே அர்ப்பணிக்கப்படும் நிலையாகவே இவர்கள் கொண்டனர். சீகன் பால்கு தமிழ் நாட்டில் மேற்கொண்ட இலக்கிய முயற்சிகளின் ஊற்றுக்காலும். இலக்கும் இப்பொழுது புலனாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவிலியத்துக்கு நல்லதொரு தமிழ் மொழிபெயர்ப்பு வேண்டும் என்பதும் அவ்வாறு மொழிபெயர்க்கப்பட்ட திரு மறை விசுவாசிகளானவர்கள் எல்லோரிடத்தும் இருப்பதும் அத்தியாவசியமாயிற்று. இதனால் விளக்கமும் தெளிவும் இவரது மொழிபெயர்ப் பிலிருக்க வேண்டுவது அத்தியாவசிய மாகிறது. 30-03-1711 அன்று நிறைவேற்றப் பெற்ற இரண்டு பாகங்களாக 1714-இல் முதலாவதும் 1715-இல் இரண்டாவது மாக வெளியிடப் பெற்ற இம்மொழி பெயர்ப்பின் ஒருபகுதி பின்வருமாறு:

> *''அதென்னென்றால் சருவேசுரன் லோகத்தை யித்தனை சினேகித்திருந்த படியினாலே தமக்கொண்ணான குமாரனைத் தந்து அவரை விசுவாசிக் கிற பேர்களெல்லாம் கெட்டுப்போகா மல் நித்திய சீவனைப் பெற வேணு மென்றிருந்தார்''*

(திரு. டி. பாக்கியமுத்துவின் கட்டுரையில் தரப்பட்டிருந்த பகுதி வாசிப்புக்கேற்ற வகையிலே தரப்பட்டுள்ளது. மூலத்தில் ஒற்றுக்குரிய புள்ளிகளும் ஏகார உயிர்மெய் வடிவங்கள் எகார மாகவே ''லோ'' ''லொ'' என தரப்பட்டுள்ளன.

இந்த மொழிபெயர்ப்பும் வீரமாமுனிவர் எழுத்து மாற்றங் களைச் செய்வதற்கு முன்னரே செய்யப்பட்டன. யேசுசபை அடிகள்மார் பலர் இம்மொழிபெயர்ப்பினைப் பாராட்டியுள்ள னர் என்றும் ஆனால் வீரமாமுனிவர் இதனை வன்மையாகக் கண்டித்தார் என்றும் பாக்கியமுத்து அவர்கள் மேற்கூறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

சீகன்பால்கு தமிழ்நாட்டில் வணங்கப் பெற்ற தெய்வங்களின் விபரங்கள் அடங்கிய ஒரு நூலையும் (Genealogy of the malabar Gods - மலபார் என்பது இங்கு தமிழ் என்ற கருத்துடையது) நீதிவெண்பா பற்றிய ஒரு அறிமுக நூலையும் தமிழ் இலக்கண நூல் ஒன்றினையும் (இது இலத்தீனில் எழுதப் பெற்றிருந்தது) எழுதிய இவர் தமிழ் அகராதியொன்றினையும் எழுதி இவையாவற்றிற்கும் மேலாகதான் படித்த தமிழ் நூல்களின் பட்டியல் ஒன்றினையும் வெளியிட்டார். அந்த நூற்பட்டியலில் தொல்காப்பியம், நன்னூல், திருக்குறள், திருவாசகம் ஆகியன காணப்படுகிறதென்பர்.

சீகன்பால்குவின் தமிழிலக்கிய முயற்சிகள் புரட்டஸ்தாந்திகள் தமிழின்பாற் கொண்டிருந்த ஈடுபாட்டினை முற்றிலும் பிரதிபலிப் பதாகவுள்ளன. இவர் 1719-இல் காலமானார். தரங்கம்பாடி மிஷனரிமார் தரங்கம்பாடியைத் தொடர்ந்து சென்னை, திருச்சி முதலாம் இடங்களிலிருந்தும் தங்கள் பணியைத் தொடங்கினர். தரங்கம்பாடி மிசன் சீர்குலையத் தொடங்கிய பின்னர் ஆங்கிலத் திருச்சபையினருடன் தொடர்பு கொண்டிருந்த கிறிஸ்துவ அறிவுப் பிரசாரச் சங்கமும் (Society for the Propagation of Christian Knowledge) ஆங்கிலத் திருச்சபையின் ஆசியுடன் தொடங்கப் பெற்ற சுவிசேஷப் பிரசாரச் சங்கமும் (Society for the Propogation of the Gospel) தமிழ் நாட்டில் பணியாற்றத் தொடங்கின. பப்பிறிஸ்ற் சபையினர் 1792-லும் லண்டன் மிஷனரிச் சங்கத்தினர் 1799-லுமாக தமிழ் நாட்டில் இங்கிலாந்து சார்ந்த சில மிஷனரிச் சங்கங்களுடனும் பணியாற்றி வந்தனரெனினும், முன்னர் குறிப்பிட்டது போன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1813-க்குப் பின்னரே மிஷனரிச் சங்கங்கள் தடையெதுவுமின்றி தொழிற்படத் தொடங்குகின்றன. 1813க்கு முற்பட்ட முக்கிய புரட்டஸ்தாந்து மிஷனரிகளில் ஒருவர் ஜொஹான் ஃபிலிப் ஃபப்பிறிசியஸ் (Johann Philip Fabricius) ஆவர். இவர் தயாரித்த அகராதியும், இவரது விவிலிய மொழிபெயர்ப்பும் இவருக்குக் கிறித்தவ தமிழ் இலக்கிய வரலாற்றில் முக்கியமான இடத்தை வழங்குகின்றன. இன்னொருவர் கிறிஸ்யன் தி ஃப்ரடெரிக் ஷ்வார்ட்ஸ் (C.F. Schwarz) ஆவர். 1750 தமிழ்நாடு வந்தடைந்து 1798 வரை வாழ்ந்து தமிழ்நாட்டிலேயே புகழுடம் பெய்திய இவர் அக்காலத் தமிழ்நாட்டின் அரசியலிலும் முக்கிய இடம் பெற்றுள்ளவர் ஆவர். இவரது தேவ ஊழியக் கருமங்கள் உரோமச் சிலிர்ப்பூட்டுவனவாகும். இவரது தேவ ஊழியக் கருமங்களுடன் தொடர்புற்றிருந்த இருவரை (கிளாரிந்தா, சத்தியநாதன்) ஆதாரமாகக் கொண்டு மாதவையா எழுதிய இரண்டு ஆங்கில நாவல்கள் இப்பொழுது திருமதி பாக்கியமுத்துவினால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இந்த இரு நாவல்களுமே 18-ம் நூற்றாண்டின் தென்தமிழ் நாட்டின் சமூக வரலாற்று ஆவணங்களாகும். ஷ்வாட்ஸின் மறைவின் பின்னரே தரங்கம்பாடி மிஷன் சீர்குலையத் தொடங்குகிறது. இலங்கையைப் பொறுத்த வரையில் மேற்குறிப்பிட்டவை போன்ற புரட்டஸ்தாந்த இலக்கியங்கள் பிரித்தானிய ஆட்சி தொடங்கிய பின்னரே இலங்கை வர அனுமதிக்கப்படுகின்றன. லண்டன் மிஷனரிச் சங்கமும் 1845லும், பப்றிஸ்ற் சபையினர் 1812லும் வெஸ்ஸியன் தெடிஸ்த சபையினர் 1814-15லும் அமெரிக்க மிசன் சங்கத்தினர் 1817லும் திருச்சபை மிஷனரி சங்கத்தினர் 1818லும் வந்தடைகின்றனர். தமிழ்நாட்டிற் கம்பனியரால் ஏற்பட்டது போன்ற இடர்ப்பாடு எதுவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் நடைபெறவில்லை. இலங்கையின் பிரதான தமிழ் பிரதேசங்களான கிழக்கு வடக்கு மாநிலங்களிற் பப்பிறிஸ்ற் சபையினர் மிஷனரி நடவடிக்கையில் ஈடுபடவில்லை.

தென்னிந்தியாலும் இலங்கையிலும் இக்காலகட்டத்தில் புரட்டஸ்தாந்த மிஷனரி இயக்கங்கள் பல தொழிற்பட்டன வெனினும் அவை அவ்வப் பகுதியில் தொழிற்படத் தொடங்கிய நாள் முதல் அவற்றிடையே பரஸ்பர நல்லுறவு நிலவியமையை குறிப்பிடுதல் அவசியமாகும். இந்த நல்லுறவு காரணமாக இந்நிறுவனங்களிடையே பண்பின்பாற்பட்ட ஒழுங்கமைவு (Comity) பேண்பபடடதனை நாம அவதானிக்கத் தவற முடியாது. இந்த ஒழுங்கமைவு காரணமாக ஒவ்வொரு நிறுவனத்தினரும் தாம் தாம் பணியாற்றிய பிரதேச எல்லைகளைப் பேணுதல், ஊழியர்களை மாற்றுதல், இடப் பரிமாற்றம் செய்தல், மதம் மாறியோரையும் திருக்கூட்டத்தாரையும் ஒன்றில் இருந்து மற்றொன்றுக்கு மாற்றிக் கொள்ளுதல் ஆகிய கருமங்களைச் செய்து கொள்ளக்கூடியதாக இருந்தது. கிறித்தவ வணக்க முறையிலும் திருச்சபை அமைப்பிலும் காணப்பட்ட வேறுபாடுகளை பிரக்ஞை பூர்வமாக குறைத்துக் கொள்வதற்கு இவ்ஒழுங்கமைவு உதவி புரிந்தது. ஒரே மதத்தின் பல்வேறு உட்பிரிவுகள் பல்வேறு வழிமுறைகளில் வணங்கிக் கொள்வது கிறித்தவர் அல்லாதாரிடையே கிறித்தவம் பற்றிக் கருத்து மயக்கங்கள் ஏற்பட இடமளித்தது. இந்த ஒழுங்கு அத்தகைய நிலைக்கு இடமளிக்கவில்லை. மேலும் இந்த ஒழுங்கமைவு காரணமாக ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் தாம் நற்செய்தி பரப்பலை செய்ய முடியவில்லை யெனில் மற்றையோருக்கு அப்பிரதேசத்தில் இடமளிக்கும் தன்மையும் காணப்பட்டது. 1820 முதல் இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கு முறை நிலவியதெனினும் 1888 லண்டனில் நடை பெற்ற மிஷனரி சேவை நூற்றாண்டு மகாநாட்டுக்குப் பின்னரே, ''ஒழுங்கமைவு'' என்னும் இப்பதம் இவ்வமைப்பினைக் குறிக்க வழங்கப் பெற்றதென்று சுந்தர ராஜமாணிக்கம் கூறுவர். (Sunderaraj Manikkam-The Social Setring of Christan Conversing' in South India-Wilsbaden 1977. பக். 40-1) பல்வேறு புரட்டஸ்தாந்த இலக்கியங்கள் தொழிற்பட்ட தேவ ஊழியக் கருமத்தில் இத்தகைய ஓர் உடன்பாடு இருந்தமை கிறித்தவ விஸ்தரிப்புக்கு பெரிதும் உதவியது. அந்த நிறுவனங் களிடையே ஓர் ஒருமைப்பாட்டையும் நல்லுறவையும் இது வளர்த்தது. புரட்டஸ்தாந்த தமிழ் இலக்கிய வளர்ச்சி யில் இது ஒரு முக்கிய காரணியாக அமைந்தது. ஒரு புரட்டஸ்தாந்து பிரிவினர் எழுதிய இலக்கியங்களையே அல்லது செய்த மொழி பெயர்ப்பினையே மற்றப் பிரிவினர்கள் பயன்படுத்துவதற் கான வாய்ப்பு இதனால் ஏற்பட்டது. இலங்கையில் புரட்டஸ் தாந்த பிரிவுகளின் பத்தொன்பதாம் நூற்றாண்டு வளர்ச்சியில் இந்நிலைமையை நாம் காணலாம்.

இந்த ஒழுங்கமைவு முற்று முழுதாகப் புரட்டஸ்தாந்தப் பிரிவுகளிடையே மாத்திரமே நிலவியது என்பதையும், இதில் கத்தோலிக்கர்கள் எவ்வகையிலும் பங்கு பற்றவில்லையென் பதையும் ஐயந்திரிபற அறிந்து கொள்ளல் வேண்டும். அக் காலத்திலே நிலவிய கத்தோலிக்க-புரட்டஸ்தாந்த மனவொதுக் கத்துக்கு வீர மாமுனிவரது எழுத்துக்களே தக்கசான்று. ஆனால் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் கத்தோலிக் கர்களும் சிலகாலம் அமெரிக்க மிஷனரிமாரின் அச்சகத் தையே பயன்படுத்தினர். சில வேளைகளில் கத்தோலிக்கர் புரட்டஸ்தாந்தினருக்கெதிராக எழுதியவையே: அமெரிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிஷன் அச்சுக்கூடத்தில் அச்சடிக்கப்பட்டுள்ளதென சுவாமி ஞானப்பிரகாசர் முன்னர் மேற்கோள் காட்டப்பெற்ற அவரது நூலிற் குறிப்பிட்டுள்ளார். (பக். 206-7).

இந்த அடிப்படையான ஒழுங்கமைவு காரணமாகத் தென்னிந்தியா கிறித்தவ ஐக்கியத்தை ஏற்படுத்துவதில் முன்னோடியாக விளங்கியுள்ளது. இத்தகைய தேவைகள், முயற்சிகள் காரணமாக 1908-இல் கொங்கிறிஷேஷனலிற் சபையினரும் (Congregationalists) பிறைஸ்பிற்றீறியன்சும் (Presbyterians) இணைந்து தென்னிந்திய ஐக்கிய திருச்சபை உருவாகிற்று. இதில் யாழ்ப்பாணத்தின் கொங்கிறிகேஷனி லிற்றுகளாகிய அமெரிக்க மிஷனும் சேர்ந்து கொண்டது. பின்னர் 1947-இல், தென்னிந்திய ஐக்கிய திருச்சபையில், ஏற்கெனவே இடம் பெற்றிருந்த இருபகுதியினரும், தென்னிந்திய இங்கிலாந்துத் திருச்சபையினரும், தென்னிந்திய திருச்சபை (The Church of South India) எனும் ஐக்கிய திருச்சபையைத் தோற்றுவித்தனர். இந்த ஐக்கியப்பாடு காரணமாக மறையியற் பயிற்சி இலக்கியப்பிரசுரம் ஆகிய வற்றில் ஒருமுகப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதைக் காணலாம். இத்தகைய ஒருமைப்பாட்டு முயற்சியால் புரட்டஸ்தாந்த மதம் தமிழ் மக்களிடையே நிலை பேறுடையதாகுவதற்கும் மேலும் பரவுவதற்கும் பெருவாய்ப்பு ஏற்படுகின்றது.

இலங்கையில் இத்தகைய ஒரு ஐக்கிய திருச்சபை இன்னும் தோன்றவில்லையெனினும், தென்னிந்தியாவில் தோன்றி யுள்ள ஐக்கியப்பாடு இலங்கையின் தமிழ்ப்புரட்டஸ்தாந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிடையே தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளமையை உணரலாம். (யாழ்ப்பாணத்தில்) அமெரிக்க மிஷன் சபை தென்னிந்தியத் திருச்சபையில் இடம் வகிப்பதனால் அம்மாற்றங்கள் இலங்கைத் தமிழ் மக்களிடையே தாக்கத்தை ஏற்படுத்துவது சுலபமாகின்றது.

புரட்டஸ்தாந்தத் திருச்சபைகள் தமிழ்ச்சூழலில் ஒன்றிணைந்து தொழிற்பட்டமையாலும், இவை யாவும் (அல்லது இவற்றுட் பெரும்பாலானவை) பிரித்தானிய ஆட்சி நிலைநிறுத்தப்படும் பொழுதோ அதற்குப் பின்னரோ வந்து சேர்ந்தனவாதலாலும், இவை ஒவ்வொன்றும் கல்வி நிறுவனங் கள் மூலம் தமது மதக்கோட்பாடுகளைப் பரப்ப முயன்றுள்ள தாலும் இவை பிரித்தானிய ஆட்சியின் ஆரம்பகாலப் பண் பாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வனவாக அமைந்தன என்று கூறுதல் தவறாகாது.

நவீனமயப்பாட்டை வேண்டி நிற்கும் இன்றைய சூழ்நிலை யில், இப் புரட்டஸ்தாந்தப் பிரிவுகள் சில, தமது மதநெறியை மேற்கொண்ட மக்கள் குழுமத்தின் (அல்லது மக்கள் குழுமங் களின்) சமூக மேம்பாட்டுக்கு உதவியுள்ள முறைமை மிக முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்ச் சூழலிலே புரட்டஸ்தாந்த மதப்பிரிவுகள் கூடச்சாதியமைப்பை முற்றிலும் புறக்கணிக்கவில்லையெனினும், கத்தோலிக்கம் சாதியமைப் பினைப் போற்றிய அளவுக்கு இவை போற்றவில்லையென் பதை நாம் மனங்கொள்ளல் வேண்டும். மேலும் குறிப்பிட்ட ஒரு சாதியினர் ஒரு குறிப்பிட்ட புரட்டஸ்தாந்தப் பிரிவில் இருந்தால் அந்தப் பிரிவு அவர்களின் முன்னேற்றத்திற்கு வேண்டிய ஊக்கங்களையும், இலட்சியங்களையும் முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து உழைத்துள்ளது. தமிழ் நாட்டு நாடார் குழுமத்தின் சமூக முன்னேற்றதிற் புரட்டஸ்தாந்தம் வகித்த இடத்தினை நோக்குதல் வேண்டும். இப்பணியில் டபிள்ரி. றிங்கல்ரௌப் சாள்ஸ் மீட் போன்றோர் முக்கிய இடம் பெறுவர்.

இவ்வாறாக புரட்டஸ்தாந்திகள் தமிழ்ச் சமூகத்திலுள்ள பல்வேறு குழுமங்களின் முன்னேற்றத்தோடு இயைபுற்று நிற்ப தற்கு அடிப்படைக் காரணமாக அமைவது புரட்டஸ்தாந்தி களின் கல்விக் கொள்கையே.

இதனைச் சிறிது விரிவாகவே நோக்குதல் வேண்டும். ஏனெனில் இப்பண்பு புரட்டஸ்தாந்தத் தமிழ் இலக்கியங்களின் சில முக்கியமான சார்பு நிலைகளைத் தீர்மானித்துள்ளன.

புரட்டஸ்தாந்தம், கத்தோலிக்கம் போன்று சடங்காசாரங் களுக்கு அதிக அழுத்தம் கொடுப்பதில்லை. அறிவுக்குவிவும், உணர்வுக்குவிவும் இறைவழியைக் காட்டவேண்டும் என்பது இவர்கள் அடிப்படை. அதற்கு விவிலியத்தை நன்கு கற்றுத் தெளிதல் வேண்டுமென்பர். கத்தோலிக்கர்கள் கொள்ளும் விவிலியப் பாடாந்தரத்துக்கும் இவர்கள் கொள்ளும் பாடாந் தரத்துக்கும் வேறுபாடுண்டு. கத்தோலிக்கம் விவிலிய வாசிப்பை அத்தியாவசிய நெறியாக வற்புறுத்தவில்லை. புரட்டஸ் தாந்தமோ விவிலிய வாசிப்பைக் கிறித்தவ வாழ்க்கைக்கு இன்றியமையா நெறியாக்கிற்று. இதனால் எழுத்தறிவுடைய வர்களே புரட்டஸ்தாந்திகள் ஆகலாம் (உண்மையில் இந்துக் களுக்கு, அவர்கள் ஆத்ம விமோசனத்திற்கு எழுத்தறிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையில்லை. எனவே புரட்டஸ்தாந்திகளாகுபவர்களை எழுத்தறிவுடையவர்களாக்குவது அத்தியாவசியமாகும். வரன் முறையான கல்வியின் மூலமே ஒருவன் நல்ல கிறிஸ்தவன் ஆகலாம் என்பது இதன் அடிப்படையாகின்றது. அதற்கான கல்வியை இந்தப் புரட்டஸ்தாந்த நிறுவனங்கள் தர முன்வந்தன. அந்தக் கல்வி தமிழில் அப்பொழுது இருக்கவில்லையாதலால் அக்கல்விச் செல்வத்தைத் தமிழின்பாற்படுத்துவதற்கு மொழி பெயர்ப்பு அவசியமாயிற்று.

கல்வி வழியாக வரும் தெய்வ உணர்வுதான் இங்கு முக்கியம் எனவே தமிழை அந்த நிலைக்கு வழிபடுத்த வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தனர். புரட்டஸ்தாந்த சித்தாந்தத்தின் அடிப்படைச் சிற்பிகளான மாட்டின் லூதரின தும், ஜோன் கல்வினதும் மதநோக்கு இந்தக் கல்வியை நெறியை ஆதாரமாகக் கொண்டதே.

கருத்து, புரட்டஸ்தாந்தக் கருத்துநிலை **(Ideology)**யின் சமூக அடிப்படையையும் தெளிவாக உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

புரட்டஸ்தாந்த வரலாற்றையும் ஐரோப்பிய சமூக பொருளா தார வளர்ச்சியையும் இணைத்து நோக்கி ஆய்வு செய்து மக்ஸ் வெபர் என்பவர் **(Maxweber)**. தாம் எழுதிய "புரட்டஸ்தாந்த ஒழுக்க நெறியும் முதலாளித்துவத்தின் உயிர்ப்பு நிலையும்" என்னும் நூலில் (இது முதலிற் செருமானிய மொழியிற் எழுதப்பெற்றது. இதன் ஆங்கில மொழிவளர்ப்பின் (1930)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு **The Protestantethic and the rise of Capitalism** என்பதாகும்). முதலாளித்துவ முயற்சிகள் வளர்வதற்குச் சாதகமாக அற அரசியல் நிலைமைகளைத் தோற்றுவிப்பதில் கல்வினீயம் -சிறப்பாக ஆங்கில பூயறிற்றனினம் **(Puritanism)-** பெரும்படியான முக்கியத்துவமுடைய இடத்தினைப் பெற்றிருந்தது எனும் கருத்தை முன்வைத்துள்ளார். புரட்டஸ்தாந்த மதத்தின் சமூகவியல் முக்கியத்துவத்தை வற்புறுத்தும் இக்கோட்பாட்டை பல அறிஞர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். இவ்விடயம் பற்றி உலகப்பிரசித்தமான 'மதமும் முதலாளித்துவத்தின் எழுச்சியும்'(Religion and the rise of Capitalism)என்னும் நூலை எழுதியுள்ளார். ஆர்.எச். ரோணி **(R.H. Tawney)** அவரின் கருத்தினை முற்று முழுதாக ஏற்றுக் கொள்ளத் தயங்கினாரெனினும், பதினெழாம் நூற்றாண்டில் இங்கிலாந்திலிருந்த வணிகத்தினர் சமூக நல வாய்ப்புடைமை பற்றிய ஒரு குறிப்பிட்ட எண்ணக் கருவினை முன்கொண்டு செல்பவர்களாக இருந்தார்கள் என்பதையும், அந்த எண்ணக் கரு மதத்திலும், அரசியலிலும் அவற்றுடன், சமூக பொருளாதார நடத்துகைகளிலும் கொள்கையிலும் கூடக் காணப்பட்டது என்பதையும் மறுக்க முடியாது என்று ரோணி கூறியுள்ளார்.

முதலாளித்துவம் என்னும் பொருளாதார வளர்ச்சி நிலை தோன்றுவதற்கான உடனடி வரலாற்றுச் சூழ்நிலையில்லாதிருந்த தமிழ் நாட்டுச் சூழலில் அந்நாட்களில் இந்த புரட்டஸ்தாந்த ஒழுக்க அறம் (Protestant Ethic) எத்தகைய சமூக மாற்றத்தை ஏற்படுத்திற்று என்பதை அவதானித்தல் வேண்டும். முதலாவதாகத் தனி மனித முக்கியத்துவத்துக்கு இடமளித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவதாக புரட்டஸ்தாந்த மதங்கள் அளித்த கல்வி காரண மாக, அக்காலத்திருந்த அரசாங்கத்திற் சேவை செய்வதற்கான ஒரு வாய்ப்பினை அளித்தது. அந்த அரசாங்கம் தனது அடிப் படை நடவடிக்கைகளாகக் கொண்ட உயர் தொழில்முறை உத்தி யோகங்களுக்கு (மருத்துவர், நிருவாகி, ஆசிரியர், பொறியிய லாளர், வழக்கறிஞர் போன்ற உத்தியோகங்களுக்கு) இத்தகைய கல்வியுடையோரையே எதிர்பார்த்து நின்றது. ஏகாதிபத்திய கொலோனியலகச் சூழ்நிலையில் உண்மையான மத்திய தரவர்க்கத்தின் எழுச்சிக்கு இந்த. உத்தியோகங்களும், இந்த உத்தியோகங்களுக்கு வேண்டிய கல்வியுமே காலாகவிருந்தன. இவ்வாறு நோக்கும் பொழுது தமிழ் மக்களிடையே மத்தியதரவர்க்கத் தோற்றத்துக்குக் காலாக விருந்த பல்வேறு காரணிகளுள் புரட்டஸ்தாந்த நிறுவனங்கள் தொடக்கி வைத்த கல்வி முறையும் ஒன்றாகும். புரட்டஸ்தாந்தம் தமிழ்ச் சூழ் நிலையிற் பெற்ற சமூகவியல் முக்கியத்துவம் இதுவேயாகும். அந்தக் கல்வி அளிக்கப்பட்ட மொழி (ஆங்கிலம்) அந்தக் கல்வி நிர்ப்பந்தித்த பண்பாட்டு நடைமுறைகள், அந்த நடைமுறைகளின் அடியாகத் தோன்றிய சமூகப்பண்பாட்டுப் பெறுமானங்கள் தமிழ்நாட்டில் ''பூர்ஷுவா'' நிலை வளர்ச்சி யின் ஆரம்பக் கட்டங்களில் மிக முக்கிய இடம் வகித்தன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்னர் புத்தூக்கம் பெற்ற கத்தோலிக்க தேவ ஊழியமும் தனக்குச் சார்பான ஆனால் இந்த-மத்தியதரவர்க்கத்தின் தேவை கட்கியைந்த கல்வியைப் போதிக்கத் தொடங்கிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்டஸ்தாந்த முக்கிய நடவடிக்கைகளில் ஒன்று அவர்கள் நிறுவன ரீதியாக மேற்கொண்ட வைத்திய ஊழியமும், அளித்த தொழில் நுட்பக் கல்வியுமாகும். தமிழ் நாட்டிலும், இலங்கை யிலும் இதனை வரன்முறையான ஊழியத் தொண்டாக அறி முகப்படுத்தியோர் அமெரிக்க மிஷனரிமாரே எனக் கூறப்படுகின்றது. (C.B. Firth. An Introduction to Indian Church History 1976 - பக்.205) அவ்வாறு முதல் முதலில் தமிழ் நாடு சென்ற வைத்திய மிஷனரி ஜோன்ஸ்கடர் யாழ்ப்பாணத்தி லிருந்தே தமிழ் நாடு சென்றார். அவர் 1820 - 1836 வரை (அதாவது தமிழ் நாடு செல்லுவரை) யாழ்ப்பாணத்தில் இருந்தார். அவர் தம் வாசஸ்தானத்தில் ஓர் வைத்தியசாலையைத் ஸ்தாபித்து அநேகருக்கு வைத்திய சகாயம் செய்து சுவிசேசத் தையும் வாஞ்சையாய்க் கூறி வந்தனர். சில மாணாக்கர்களுக்கு வைத்தியக் கல்வியும் கற்பித்தனர். (பக். 59). எனவும் ''டக்றர் ஸ்கடர் ஐயர் வைத்திய மிஷனரியாக யாழ்ப்பாணம் வந்த பொழுது உலகத்தில் ஓர் வைத்திய மிஷனரியும் இல்லை. முதல் வைத்திய மிஷனரியைப் பெரும் சலாக்கியம் சின்ன யாழ்ப் பாணத்திற்கே கிடைத்தது.'' (பக். 123-4) எனவும் சி.டி. வேலுப் பிள்ளைப் போதகர் கூறுவர். இந்தப் பணி காரணமாக யாழ்ப் பாணத்தில் வரன்முறையான வைத்தியப் பணி தமிழிலே தொடங்கியது. இத்துறையில் நேதன் வாட் (Nathan Wart), ஜி.எஃப். கிறீன் (G.F. Green) ஆகிய வைத்திய தேவ ஊழியர் களது பெயர்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தனவாகும்.

பல்வேறு புரட்டஸ்தாந்த மதப் பிரிவினர்களதும் இலக்கிய ''பங்களிப்பு'' மேற்கூறிய பின்னணியில் வைத்தே மதிப்பிடப் படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்டஸ்தாந்திகளின் தமிழ் இலக்கிய முயற்சிகளைப் பற்றிய மிக நுணுக்கமான விபரங்களுக்குச் செல்லாது அவர்களின் இலக்கிய சேவையை வகுத்து நோக்க வேண்டுமெனிற் பின்வரும் தலைப்புக்களின் கீழ் அப்பணியைச் செய்யலாம்.

1. மத அநுட்டான காரியங்களுக்காக செய்யப்பட்ட மொழி பெயர்ப்புக்கள்.

2. தமிழ்ச்சூழலில் கடமையாற்றவிருக்கும் மிஷனரிமார் தமிழ்ப் பாரம்பரியம் பற்றி அறிவதற்கு இயற்றப்பட்ட இலக்கிய, இலக்கண ஆக்கங்கள். (அகராதிகளும் அடங்கும்)

3. கல்வித்துறைத் தேவைகட்காக எழுதப் பெற்றப் பாடப் புத்தகங்கள், செய்யப்பெற்ற பாடப் புத்தக மொழி பெயர்ப்புக் கள்.

4. ஆக்க இலக்கியங்கள்.

இந்த நூல்கள் பற்றிய விரிவான தகவல்களை மயிலை சீனி. வேங்கடசாமியின் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் (1962) ''கிறித்தவமும் தமிழும்'' (1955) ஆகிய நூல் களிலும், பொ. பூலோகசிங்கம் நான்காவது அனைத்துலகத் தமிழ் மாநாட்டில் வாசித்த ''பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் வளர்ச்சிக்கு இலங்கையர் செய்த பங்களிப்புகள். (The Contributions of Ceylonese to the development of Tamil in the Nineteenth Century I.A.T.R. 1980) எனும் கட்டுரையில் காணலாம்.

புரட்டஸ்தாந்த இலக்கியப் பாரம்பரியத்தைப் பொறுத்த மட்டில் இலங்கைக்கும் தமிழ்நாட்டிற்கும் முக்கியமான ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபாடு உண்டு. இலங்கைப் புரட்டஸ்தாந்த் தமிழ் இலக்கியங் களில் ஆக்க இலக்கியங்களின் தொகை மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. பின்னர் சைவத்துக்கு மாறிய பாவலர் துரையப்பா பிள்ளை ஆங்கில அறநெறி நாடக மரபில் **(Morality Play)** எழுதிய ''சகல குணசம்பன்னன்'' என்னும் நாடகமும், அவர் பாடிய சில பாடல்கள் ஆகியனவற்றைத் தவிர விதந்தோதப்பட ஆக்க இலக்கியங்கள் புரட்டஸ்தாந்தர் வழியாக இலங்கையில் தோன்றி உள்ளனவா என்பதனை ஊன்றிக் கவனிக்க வேண்டியுள்ளது.

ஆனால் இந்த ஆக்க இலக்கியக் குறைபாடு இலங்கைத் தமிழரிடையே புரட்டஸ்தாந்தம் பெற்றிருந்த சமூகவியல் நிலைப் பாட்டுடன் இயைந்தே காணப்படுகிறது. ஆங்கில ஆட்சி வழங்கிய மதஅநுட்டான சுதந்திரத்தைப் பயன்படுத்தி தாம் படிக்கும் பொழுது புரட்டஸ்தாந்த கிறித்தவர்களான நிலை மையிலிருந்து பின்னர் தம்மை விடுவித்துக் கொண்டவர்கள் பலர். ஆறுமுக நாவலரின் இயக்கமும் அதற்கு உதவியிருக்கும். ஆனால் பெரும்பாலானவர்கள் ''பஞ்சத்துக்கு ஆண்டி களே'' மிஷனரிப் பாடசாலைகள் வழங்கிய கல்வி வாய்ப்பைப் பயன்படுத்தி மேல்நிலை எய்திய பின்னர் மீண்டும் தமது சமயத் துக்குத் திரும்பினர். ஒல்லாந்தர் சட்ட நிர்ப்பந்தம் மூலம் இரகசியமாக மேற்கொள்ளப்படும். சைவமத அநுட்டானங் களைத் தடுக்க முயன்றனர். ஆக்க இலக்கியம் என்பது மனிதர் களின் சமூக உறவுகளை மனித உணர்வுப் பகைப்புலத்தில் மொழிக் குறியீடுகள் கொண்டு வெளி வருவது என்ற வரை விலக்கணத்தை ஏற்றுக்கொண்டால், இந்த உணர்வுப் பிணைப்புப் புரட்டஸ்தாந்தம் சம்பந்தப்பட்ட வரையிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பான்மையான இலங்கைத் தமிழ் புரட்டஸ்தாந்தி களிடையே இருக்கவில்லை என்பதும், அவர்கள் சி.டி. வேலுப் பிள்ளை குறிப்பிடு வது போன்று பெரும்பான்மையும் "மாரீசக் கிறித்தவர்களாக" இருந்தனர் என்பதும் வரலாற்று உண்மை யாகும். உண்மையான விஸ்வாசிகளாக விருந்தவர்க்ள். அந்த மதத்தின் மன ஒறுப்பு நிலைக் கேற்பத் தம்மைத்தாமே மிகை நிலைப்பட்ட புனைநிலைகளுக்குத் தள்ள விரும்பாதிருக்கலாம் என்றும் கொள்ளலாம். ஆயினும் அவர்களது மத-உணர் வினைப் போஷிப்பதற்கு வேண்டிய ஓர் இலக்கிய அடிப்படை இருந்திருத்தலே வேண்டும். அத்தகைய இலக்கியங்கள் பேணப்பட்டிருக்காமல் போகலாம். அல்லது முன்னர் குறிப் பிட்ட மத-உணர்வுப் போஷிப்புக்கு தென்னிந்திய இலக்கி யங்கள் உதவி யிருத்தல் வேண்டும். கடைசியாகக் கூறப்பட்ட சாத்தியப்பாடு உண்மையில் நடந்தேறியதற்கான வரலாற்றுச் சான்றுகள் இல்லையாதலால் அந்தப் போஷிப்பிற்கேற்ற ஆக்க இலக்கியங்கள் யாவை என்பது பற்றி ஆராய்தல் வேண்டும்.

தமிழ் நாட்டில் இந்த ஐயுறவு நிலை இருக்கவேயில்லை. அங்கு புரட்டஸ்தாந்தப் பிரிவினரின் ஆக்க இலக்கியங்கள் பற்றிய குறிப்புகள் உள்ளன. இரட்சண்ய யாத்திரீகம் போன்ற நன்கு தெரிந்த ஆக்கங்கள் உள்ளன. இவற்றைவிட 1968-இல் வெளிவந்த 'டி' யேசுதாஸ் அவர்களால் எழுதப்பெற்ற "தெரியப்படாத-சிறிதே தெரியப்பட்ட தமிழக் கிறித்தவ இலக்கியங்கள்" (**Unknown or Little Known Christian Ltiteratures in Tamil**) எனும் சிறுநூலிற் காணப்படும் தரவுகள் ஆக்க இலக்கியங்கள் பல நிலவியமையை எடுத்துக்காட்டு கின்றன. ஆயினும் நன்கு பேணப்படாத படியினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கொழிந்து போயுள்ளன போலத் தெரிகின்றது. அச்சிடப் பட்ட ஆனால் இலக்கிய வரலாறுகளிற் குறிப்பிடப்படாத முப்பதைந்து நூல்களின் பெயர்களையும் பிற குறிப்புகளால் தெரியப்பட்ட ஆனால் தான் கண்டெடுக்க முடியாத இருபத் தொன்பது நூல்களின் பெயர்களையும். ஈஸ்வரபாக்கியம் ஈகாக்கு என்பவரால் எழுதப்பெற்றுக் கையெழுத்துப் பிரதி களாகவுள்ள பதினொரு நூல்கள் பற்றியும், சிலுவை மேஸ்திரி (இவர் ஒரு கத்தோலிக்கர்) என்பவர் எழுதிய ஒன்பது நூல்கள் பற்றியும் யேசுதாஸ் அவர்கள் இச்சிறுநூலிற் குறிப்பிட்டுள்ளார். இவற்றுள் முதலாவதாகக் குறிப்பிடப்பட்டவற்றுள் பெரும் பாலானவை புரட்டஸ்தாந்திகளின் இலக்கிய ஆக்கங்களாகவே காணப்படுகின்றன. ''கிறிஸ்தாயணம்'', ''சுவிசேசபுராணம்'' என்ற பேரிலக்கியங்களும் மில்ற்றனின் ''பறடைஸ் லொஸ்ற்''இ ''பறடைஸ்றி கெயிண்ட்'' (Paradise lost Paradise Regained) ஆகியவற்றின் மொழிபெயர்ப்புக்களான ''ஆதிநந்த வனப்பிரளயம்.'' ''ஆதிநந்தவன மீட்சி'' என்ற ஆக்கங்களும் நாட்டார் இலக்கிய வடிவங்களில் அமைந்துள்ள ''மது கண்டனமாலை'', ''செல்லத்தம்பிப் பாடல்'', ''ஆதி காலக்கும்பி'', ''ஆதவர் கும்மி'', ''மாதவர் கும்மி, ''யேசு நாதரின் ஜீவிய கும்பி'' என்னும் நூல்களும் இங்கு விதந்து கூறப்பட வேண்டியனவாகும்.

புரட்டஸ்தாந்திகள் பெற்ற கல்வி முறையும் வகித்த பதவி களும் அவர்களை நவீன தமிழ் இலக்கிய வடிவங்களினதும், சிந்தனைகளினதும் முன்னோடிகளாக்கியுள்ளமைக்கு முன்சீப் ச. வேதநாயகம் பிள்ளை அவர்களது (1826 - 1889) இலக்கிய வாழ்வே தக்க உதாரணமாகும். முதலாவது தமிழ் நாவலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதியவர் என்ற பெருமைக்குச் சமமாக' அதனிலும் பார்க்க முக்கியமானதாகக் கூடக் கருதப்படத்தக்கது அவர் ''பெண் கல்வி'', ''பெண்மதி மாலை'', ''பெண் மானம்'' என்பன வற்றின் ஆசிரியர் என்பதாகும்.

புரட்டஸ்தாந்திகளின் தமிழ் இலக்கிய முயற்சிகளுக்கும் அவர்களது சமூக-மத நோக்குமுள்ள இயைபு இப்பொழுது ஓரளவு புலனாகின்றதெனலாம்.

8

இறுதியாகத் தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் கிறித்தவப் பங்களிப்புப் பெறும் இடத்தினை நோக்குதல் அத்தியாவசிய மாகின்றது.

இப்பங்களிப்பினை மதிப்பிடுவதற்கு முன்னர், இவ்விலக் கியப் பங்களிப்பினை கிறித்தவர்கள் தமிழுக்காற்றிய ''தொண்டு'' எனக் கொள்ளும் அறியாமையைவிட்டு விடுதல் வேண்டும். தமிழரிடையே கிறித்தவம் பரவுவதற்குத் தமிழ் தேவையாக இருந்தது. தமிழ் இல்லாது தமிழரைக் கிறித்தவ ராக்க முடியாது. எனவே தமிழிலேயே அவையாவும் செய்யப் பட வேண்டியிருந்ததென்பதை இவ்விடத்தில் மீண்டும் வலியுறுத்தல் அத்தியாவசியமாகிறது.

கிறித்தவர்கள் அகராதிகளை அறிமுகம் செய்து வைத் தனர். பாடப் புத்தகத்தினைப் புகுத்தினர். உரைநடையை வளர்த் தனர். சஞ்சிகைகள், பத்திரிகைகளை அறிமுகம் செய்து வைத் தனர் என்று கூறி இவற்றையே கிறித்தவப் பங்களிப்பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமிசங்களாகக் கொள்ள முனைதல், இலக்கியத்தையும், வரலாற்றையும் ஒரே நேரத்தில் மலினப்படுத்தும் ஒரு முயற்சியாகும். கிறித்தவர்கள்-முக்கியமாக கிறித்தவத்தைப் பரப்பிய மேனாட்டுக் கிறித்தவ மிஷனரிமார் மேனாடுகளில் அல்லது இந்தியாவிற்குத் தாங்கள் வருவதற்கு முன்னர் சென்றிருந்த நாடுகளிற் செய்யாத ஒன்றினைத் தமிழ் நாட்டிற் காகக் கண்டுபிடித்துப் பயன்படுத்தினர் என்றும் சொல்வதற் கில்லை. கிறித்தவம் வந்த முறைமைக்கும் பரப்பப்பட்ட முறை மைக்கும் இவை அத்தியாவசியமான தேவைகளாகும்.

உதாரணமாக அச்சுமுறைமைக்கும் கிறித்தவத்துக்கு முள்ள தொடர்பினை நோக்குவோம். சிலர் இதனை மேனாட்ட வரின் தொண்டு என்றும் வேறு சிலர் கிறித்தவத்தின் பங்களிப் பென்றும் கூறுவர். ஆனால் அச்சுமுறைமை மேனாட்டவரிடத் தேயும், கிறித்தவரிடத்தேயும் மாத்திரம் இருந்த காலத்தில் (1835 வரை) பழைய தமிழ் இலக்கியங்கள் எதுவும் அச்சிடப்பட வில்லை. அவர்கள் முழுக்க முழுக்க கிறித்தவ மதச்சார்பான நூல்களையே வெளியிட்டனர். இது சம்பந்தமாக மயிலை சீனி. வெங்கடசாமி கூறுவதை அழுத்தமாக எடுத்துக் கூறுதல் வேண்டும். "..........மேலே கூறிய இவை யெல்லாம் ஐரோப்பியப் பாதிரிமாராலே நிறுவப்பட்ட அச்சுக் கூடங்கள். இந்த அச்சுக் கூடங்களில் கிறிஸ்தவ மதச்சார்பான புஸ்தகங்கள் அச்சிடப் பட்டன. "பழைய தமிழ் இலக்கிய நூல்கள் அச்சிடப்படாமல் ஏட்டுச் சுவடிகளாகவே இருந்தன.

19-ஆம் நூற்றாண்டிலே 1835-ஆம் ஆண்டிலே நமது நாட்டவரும் அச்சியந்திர சாலைகள் வைக்கலாம் என்னும் சட்டம் ஏற்பட்ட பிறகுதான் நம்மவர்கள் அச்சியந்திர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலைகளை நிறுவினார்கள். இதன் பிறகுதான் ஓலைச்சுவடி களாக இருந்த பழைய தமிழ் நூல்கள் அச்சுப் புத்தகங்களாக **வெளிவந்தன.''** (மயிலை சீனி வெங்கடசாமி-பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்-சென்னை 1962. பக். 91-92) காமில் ஸ்வெலபிலுக்கும் இக்கருத்து ஏற்புடைத்தே. அச்சியந் திரமோ உரைநடையோ புதிய சட்டம் வழங்கிய வாய்ப்பின்கீழ் தமிழ்நிலைப் படுத்தப்பட்ட பொழுதே தமிழ் மறுமலர்ச்சி புதிய உருவம், புதிய வேகம் கொண்டது.

எனவே இத்தகைய கயிற்றைவிட்டு வாலைப் பிடித்த நிலைக்கு ஆட்படுகின்ற ''பங்களிப்புகளை'' முனைப்புப் படுத்தாது கிறித்தவம் எனும் சர்வதேசிய மதத்தின் தாக்கம் தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் எத்தகைய புதிய வளர்ச்சிப் பரிணாமங்களை ஏற்படுத்திற்றென்பதை நோக்குதல் வேண்டும். அந்நிய ஆட்சி காரணமாகவே முதலில் எமக்குப் பலநவீன சாதனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன என்பதற்காக, அந்த ஆட்சியில்லாதிருந்தால் அவை வந்திருக்காது என்று கூறிவிட முடியாது.

கிறித்தவத்தின் வருகையும் அதன் பரம்பலும் தமிழ்ப் பண் பாட்டில் எற்படுத்திய தாக்கங்களினை முற்று முழுதாக ஆராய் வது அத்தியா வசியமாகும். இங்கு இலக்கியப் பாரம்பரியத்தில் ஏற்பட்ட மாற்றத்தையே நோக்குதல் வேண்டும்.

முதலாவதும், மிகமுக்கியமானதும், இலக்கியம் பற்றிய எண்ணக்கருவில் ஏற்பட்ட மாற்றமாகும். தமிழ்இலக்கியப் பாரம்பரியத்தில் இலக்கியத்தின் ''பெறுநர்'' வட்டம் மிகக் குறுகியதே. உயர் இலக்கியத்தின் ''பெறுநர்'' வட்டமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிநிலை இலக்கியத்தின் பெறுநர் வட்டமும் வெவ்வேறாக ஒன்றுடன் ஒன்று தொடர்பற்றன வாகக் கூட இருந்தன. நவீன தமிழ் இலக்கியத்தில் இந்த இருகிளைப் பாடு சனநாயக வர்க்கம் (Democratization) காரணமாக கருத்து நிலையில் அகற்றப் பெறுகிறது. கிறித்தவம் முன்னர் நிலவிய பெறுநர் வட்ட இறுக் கத்தைத் தளர்த்தியது. இது ஒரு பெருஞ் சாதனையாகும். மதக் கோட்பாடுகள், முறைமைகள் அம்மதத்தைப் பின்பற்றுவோர் யாவராலும், முழு திருக்கூட்டத்தாலும் (Congregation) விளங்கிக்கொள்ளப்பட வேண்டுமென்பது கிறித்தவ வாதம். அது விவிலியத்தை வாசிக்கின்ற எழுத்தறிவுள்ள (புரட்டஸ் தாந்திகள்) கூட்டமாக இருக்கலாம் அல்லது அதனை வாசிப்பதை அத்தியாவசியமாக்காத (கத்தோலிக்கக்) கூட்டமாக இருக்கலாம். ஆனால் இருநிலைகளிலும் "கூட்டம்" முக்கியமாகிறது. சமய விளக்கம் கூட்டம் நோக்கியதாக இருத்தல் வேண்டும் என்பது இங்கு முக்கியமாகிறது. இது இந்து மதத்திற்கு முக்கிய மாகச் சைவ மதத்திற்குப் புறம்பான ஒரு கோட்பாடாகும். விமோசனமார்க்கம் தனிநிலைப்பட்ட தென்பது ஒரு புறமிருக்க வழிபடுவோர் எல்லோரையும் ஒரு கூட்டமாகக் கருதும் வழக்கம் சைவத்தில் ஒருகாலமிருந்த தெனினும் பின்னர் வற்புறுத்தப்படவில்லை.

கிறித்தவத்தினை எதிர்த்த ஆறுமுகநாவலர் போன்றோரே, தாம் கிறித்தவத்தை எதிர்த்து எழுதியவற்றைப் பொதுநிலைப் படுத்தி அப்பொதுமக்கள் விளக்கத்துக்காக எளிய உரை நடையில் எழுத வேண்டிய தேவையேற்பட்டது. இங்கு உரை நடையல்ல முக்கியப்படுவது. உரைநடையின் தொழிற் பாட்டிற்கு காரணமாகவிருந்த எண்ணக்கருவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாத்திலும் இத்தகைய ஒரு பொதுமை இருந்ததுதான். ஆனால் தமிழ் நாட்டில் இஸ்லாம் வளர்ந்த முறைமையினையும் இஸ்லாமிய சமூகம் தன் மதத்தனித்துவத்தைப் பேணுவதற்கு (தமிழையே அறபுவில் எழுதும் முறைமையை) மேற்கொண்ட முறைமையினையும் நோக்கும் பொழுது தமிழ்நாட்டில் இஸ்லாம் கூட்டும் சமத்துவம் கிறித்தவம் சுட்டும் சமத்துவ மளவு சுவறவில்லை மேலும் இஸ்லாம் வழிபாட்டு மொழியில் (அறபு) மாற்றமெதனையும் ஏற்படுத்தவில்லை. கிறித்தவத்தின் சில பிரிவுகளாவது அதனை ஏற்றுக்கொண்டன.

இலக்கியம் பற்றிய இக்கருத்துநிலை மாற்றம் (ideological change) படிப்படியாக நவீன இலக்கியத்திற்கு எம்மை இட்டுச்செல்கிறது. இவையே நவீன இலக்கியங்களாகிவிட வில்லை. நவீன இலக்கியத்தின் வருகைக்கான தயார்நிலை தமிழில் ஏற்பட்டுவிடுகின்றது.

கிறித்தவம் வழிவந்த இலக்கிய நடவடிக்கையினை இத்தகைய ஒரு நோக்கிற் பார்க்கும் பொழுதுதான் பாரம் பரியத்தின் தொடர்ச்சியும் மாற்றங்கள் நிர்ப்பந்திக்கும் புத்தாக்கமும் ஒன்றுடன் ஒன்று இணைந்து செல்லும் முறைமையும் தெளிவாகிறது.

மற்றது கிறித்தவத்தின் வருகை ஏற்படுத்திய தன்னுணர் வாகும். முழுப்பாரம்பரியத்தையும் கிறித்தவத்தின் வழியாக வந்த கண்ணோட்டங்களிற் பார்த்துக் கிறித்தவத்தினை எதிர்க்கும் முறைமை கிளம்பிற்று. இது கிறித்தவ வியாப்தியை அடுத்து வரும் காலப்பகுதியின் இலக்கிய வரலாற்றின் முக்கிய உட்கிடக்கைகளில் ஒன்றாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழிலக்கிய வரலாற்றில் இஸ்லாமியத் தமிழிலக்கியங்கள்

உலகப் பெருமதங்களிலொன்றான இஸ்லாம் தமிழிலக்கியத்திற் பெறுமிடத்தின் முக்கியத்துவம் பற்றி ஆராயமுற்படும் இக்கட்டுரையில் முற்றிலும் அம்மதச்சார்பான தமிழ் இலக்கியங்களே எடுத்து நோக்கப்படவுள்ளன. தமிழ் பேசும் முஸ்லீம்களின் வாழ்க்கை முறைகள் சித்திரிக்கப்பட்டுள்ளனவும், முஸ்லீம்களால் எழுதப்பட்டுள்ளனவுமாகிய நவீன இலக்கியங்கள் இவ்வாய்வில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. எழுத்தின் அடிப்படைப் பண்புபற்றி முஸ்லீம் ஒருவர் எழுதியது என்பதற்காக ஓர் ஆக்கம் ''முஸ்லீம் இலக்கியம்'' ஆகிவிடாது என்பதை நாம் உணரல்வேண்டும். நவீன தமிழ் இலக்கிய வடிவங்களுட் கணிசமான முக்கியத்துவத்தைப் பெறும் நாவல், சிறுகதை, புதுக்கவிதை ஆகியன முற்றிலும் மதச்சார்பற்ற சூழலினடியாகவே தோன்றுகின்றன என்பதை மனங்கொளல் வேண்டும்.

தமிழிலக்கிய வரலாற்றில் இஸ்லாமிய இலக்கியங்கள் பெறும் இடம் பற்றிச் சிந்திக்கத் தொடங்கும் பொழுது முதன் முதலில் நாம் தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டிய விடயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விலக்கிய முயற்சி தோன்றுவதற்குக் காலாக அமையும் வரலாற்றுப் பின்னணியாகும். அதாவது தமிழ் நாட்டினுள் இஸ்லாம் வந்து சேர்ந்து இணைந்த வரலாற்றுப் பின்னணியைத் தெளிவுபடுத்திக் கொள்ளுதல் அவசியமாகும்.

இந்தியாவில் இஸ்லாத்தின் வரலாறு பற்றிய ஆராய்ச்சி யாளர்களுள் ஒருவரான எஸ்.ஏ.ஏ. றிஸ்வி அவர்கள் தரும் மிகச் சுருக்கமான ஆனால் தெளிவான குறிப்பை இங்கு தருவது பொருத்தமான தாகும்.

> *''முகம்மது நபியவர்கள் (570 - 632) பிறப்பதற்கு முன்னரே அறபு, ஈரானிய வர்த்தகர்களும், கடலோடிகளும் இந்தியக் கரையோரப் பகுதிகளிற் குடியேறியிருந்தனர். உள்ளூர் மக்களைத் தமது மதத்துக்கு மாற்றுவதற்கு இடமளிக்கப் பெற்றிருந்தனர். கி.பி. ஆறாம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் பைசான்ற்றயினுக்கும்* **(Byzantrine)**, *சசனித்துக்களின் ஈரானுக்கும் நடந்த போர்கள் காரணமாகச் சீனாவையும், இந்தியாவையும், மத்திய தரைப் பிரதேசத்துடன் இணைக்கும் யூப்ஃபிரட்டிஸ்-பாரசீகக் குடாவழி கைவிடப் பெற்று, அதிலும் பார்க்கச் சிரமம் மிக்கதான நைல் பள்ளத்தாக்கு, செங்கடல்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடாகச் செல்லும் வழி பயன் படுத்தப்படத் தொடங்கிற்று. கி.பி. 632க்கும் 647க்குமிடையில் சிரியா, எகிப்து, ஈரான், திரிப்பொலிற்றானா (Tripolitona) ஆகிய பிரதேசங்களை இஸ்லாம் மயப்படுத்தப் பெற்ற அறபியர் கைப்பற்றியதன் காரண மாக, ஈராக்கில் கூஃபா, பஸ்றா, எகிப்தில் ஃபுஸ்ராற் எனும் புதிய நகரங்கள் தோன்றின. அத்துடன் முன்னர் கைவிடப் பெற்றிருந்த யூப்ஃ பிரடிஸ்-பாரசீகக் குடா வழி மீண்டும் திறக்கப் பெற்றது. இதன் பயனாக பாரசீக-அறபு வணிகத்திலும், வர்த்த கத்திலும் ஏற்பட்ட திடீர் வளர்ச்சி சிந்து, குஜராத் முதல் வங்காளம், பர்மா வரையுள்ள கரையோரப் பகுதிகளிற் குடியேறிய இஸ்லாமிய மயப்படுத்தப்பட்ட அறபியரின் தொகையை அதிகரிக்கச் செய்தது. 'மாஅபார்' (பாதைகள் குறுக்கிடும் இடம்) என அறபியர்களாற் குறிப் பிடப் பெற்ற சோழ மண்டலக்கரை முக்கியமான வர்த்தக களஞ்சியப் பிரதேசமாகவிருந்தது. உள்ளூர் அரசர்கள், குறிப்பாகக் கள்ளிக் கோட்டைச் சமோரின், உள்ளூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுடன் திருமண உறவுகள் வைப்பதற்கும், அம்மக்களிடத்து இவர்கள் தம மதத்தைப் போதிப்பதற்கான உரிமையை அறபியருக்கு வழங்கியிருந்தார். இதன் காரணமாக, மலையாளக் கரையோரப்பகுதியைச் சேர்ந்த முஸ்லிம் குழுமத்தினர் (மாப்பிள்ளைச் சோனகர்) தாங்கள், உயர் சாதியைச் சேர்ந்த நாயர் குலப்பெண்களை மனைவியராகக் கொண்ட அறபியர்களின் வழி வந்தவர்கள் என்பர். ....மைசூரிலும், கிழக்குக் கரையோரப் பகுதியிலுமிருக்கும் லெவ்வைகள், தாம் தமது பிதாவழி அறபு ஹஷ் மைற்றுக்கள் வழி வந்தவர்கள் என்பர். இவர்களின் தாய்வழி முன்னோர் உள்ளூர் இந்துக்களே. திருமணத்தின் முன்னரே இஸ்லாம மயப்படுத்தப் பெற்ற இந்து மனைவியரால் பெற்றெடுக்கப்பட்டோர் முஸ்லீம்களாகவே வளர்த்தெடுக்கப்பட்டனர். இவ்வாறாக, முஸ்லீம்களின் எண்ணிக்கை படிப்படியாகப் பெருகத் தொடங்கிற்று. **(S.A.A. Rizuilslamic Proselytization (7th-16th Centuries-in Religion in South Asia (ed) G.A. Oddie London-***977 பக். 13-14).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்குக் கரையென றிஸ்ஜியாற் குறிப்பிடப் பெறுவது தமிழகத்தின் கிழக்குப் பகுதியாகவுள்ள பிரதேசமே யாகும். றிஸ்ஜியின் குறிப்பில், இப் பகுதியில் வாழும் மற்றைய பிரிவின ரான மரைக்காயர்கள் பற்றிய குறிப்பு இடம் பெறவில்லை. அக்குறிப்பினை நீலகண்ட சாஸ்திரியின் 'தமிழரின் பண்பாடும் வரலாறும்' (**The Culture and History The Tamils-Culcutta**-*1964* பக்.124) எனும் நூலிற் கண்டு கொள்ள லாம். மரைக்காயர் எனும் பெயர் வள்ளத்தைக் குறிக்கும். ''மர்க்காப்'' எனும் அறபுச் சொல் வழியாக வந்தது என்பர். (சிலர் இது மாக்கலம் எனும் தமிழ்ச் சொல் வழியாக வந்தது என்றும், அதற்குச் சான்றாக சிங்கள வழக்கில் முஸ்லிம்கள் ''மரக்க லயோ'' எனக் குறிப்பிடப் பெறு வதைச் சுட்டிக் காட்டுவர்) இந்த வரலாற்றுக் குறிப்புகளின் வழியாகத் தென்னிந்திய முஸ்லிம்கள் பற்றிய வரலாற்றுண்மைகள் தெளிவா கின்றன. தென்னிந்தியாவின் கரை யோரப் பகுதிகளில் வாழும் முஸ்லிம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் வணிகத் தொடர்பு காரணமாக வந்து தங்கிய அறபியர்களின் வழித் தோன்றல்கள் என்பதும், இங்கு நடந்தேறிய இஸ்லாமிய மதமாற்றம் அரசியற் பலத்தினடியாகத் தோன்றினதன்று என்பதும் முக்கிய மான உண்மைகளாகும். இதனால் இஸ்லாம் இப்பகுதியிற் பரந்துள்ள முறைமையும், ஏற்படுத்திய தாக்கமும் வட இந்தியாவிற் பரவிய முறைமை யினின்றும் வேறுபட்டது என்பது புலனாகின்றது. மாணிக்க வாசகர் காலத்திலிருந்தே தமிழ் நாட்டில் இவர்களின் பண்பாட்டுச் செல்வாக்கு உண்டு என்பது தெரிய வருகிறது. (மாணிக்கவாசகர் குதிரை வாங்கச் சென்றமை, குதிரை வர்த்தகம் அறபியரின் தனியுரிமையாக விருந்தமை)

இப்படிக் கூறும் பொழுது தென்னிந் தியாவின் முஸ்லீம் பரம்பலில் அரசி யற்றொழிற்பாடு சிறிதும் இருக்க வில்லை என்பதாகி விடாது. அரசியல் காரணமாக இஸ்லாம் பரவிய துண்மையே. ஆனால் அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினான்காம் நூற்றாண்டில், இரண்டாம் பாண்டியப் பேரரசின் பின்னரே ஏற்படுகிறது.

அந்த வரலாற்றையும் மிகச் சுருக்கமாக அறிந்து கொள்வது முக்கியமாகும். இஸ்லாமியத் தமிழிலக்கிய உருவாக்கம் பற்றிய ஒருண்மையை விளங்குவதற்கு அது பின்னர் உதவுகின்றது.

தில்லிச் சுல்தானின் ஆட்சியின் விஸ்தரிப்பாக, முதன் முதலில் கில்ஜிகள் காலத்தில் 1311இலும் 1314இலும் தமிழ் நாட்டின்மீது முஸ்லிம் தாக்குதல்கள் நடைபெறுகின்றன. இவை வெறும் படை நடவடிக்கைகளே. துக்ளக் சுல்தானாட்சியில் 1323-இல் தமிழ் நாடு கைப்பற்றப்பட்டது. முகமதுபின் துக்ளக்கின் இருபத்தி மூன்று மாவட்டங்களில் மாஅபாரும் ஒன்று. அதற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட ஜலாலுதீன் அஹ்சான்ஷா 1335களில் தனது தனியதிகாரத்தை நிறுவி மதுரையில் சுல்தான் ஆட்சியைத் தோற்றுவிக்கிறான். 1371இல் விஜய நகரத்துக் குமாரகம்பண்ணன் மதுரை சுல்தான் பக்றுதீன் முபாறக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷாவைத் தோற்கடித்து மதுரையை விஜயநகரப் பேரரசின் ஆட்சிக்கே கொண்டு வருகிறான். பின்னர் 1565இல் தளிக்கோட்டைப் போரின் பின்னர் தனியதிகாரத் தானங்களாகக் கிளம்பிய மதுரை, தஞ்சாவூர் நாயக்கத் தானங்களின் ஆட்சிக் காலத்தில் முஸ்லிம் செல்வாக்கு தமிழகத்தின் அரசியல் வரலாற்றின் முக்கிய சக்தி களுள் ஒன்றாகிறது. 1693-இல் மதுரையும், தஞ்சாவூரும் ஔரங்கசீப்புக்கு கப்பங் கட்டியாளும் பகுதி களாயின. 1736-இல் மதுரையை ஆண்ட மீனாட்சி எனும் அரசியை அவளுக்குதவ வந்த ஆர்க்காட்டு நவாப்பின் மருமகன் சந்தாசாகிபு ஆட்சியிலிருந்து அகற்றி மதுரையை தனதாக்கிக் கொண்டான். இறுதியில் ஆர்க்காட்டு நவாப்பின் ஆட்சியுரிமை களை 'நோட்டெழுதி' வாங்கிக் கொண்ட பிரித்தானியர் நவாப்பின் மேலாண்மைக்குள் வந்தவர்கள் யாவரையும் தங்களின் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்தனர். 17, 18-ஆம் நூற்றாண்டுத் தமிழகத்தின் அரசியற் பின்னல்கள் இழை இழை யாக விடுவிக்கப்படும் பொழுது தமிழ கத்தில் முஸ்லிம்களின் அரசியற் பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிசமாயிருந்தது என்பது தெரிய வரும். ஆனால் அக்கால அரசியலைக் கூர்ந்து கணிக்கும் பொழுது முற்றிலும் தமிழ் நாடு நிலைப்பட்ட முஸ்லிம்களாகத் தொழிற்பட்ட முஸ்லிம் சமூகத்தினர் தமிழ் நாட்டில் வாழ்ந்தனரென்பது புலனாகிறது.

எனவே தமிழ்நாட்டில் முஸ்லிம்கள் ஒரு புறத்தே வணிகர்களாகவும், மறு புறத்தே ஆட்சியாளராகவும், பரிண மித்துள்ளனர். அரசியல் வலுவுடன் வந்தோர் பிரதானமாக வடஇந்தியச் சார்பினரே. தமிழ்நிலைப்பட்டு நின்ற வர்கள் வணிகத் துறையினரே வணிகத் துறையினரானதால் அவர் கள் அவ்வாறு இருந்தமை பொருளி யல் நிலைப்பட்ட தேவையென் பதனையும் மறந்துவிடுதல் கூடாது. ஏனெனில் இவர்கள் தமது சமாதானச் சகவாழ்வுக்கோட்பாட்டினைத் தமது தனித்துவத்தைப் பாதிக்கக் கூடிய பண்பாட்டுக் கருமங்கள் வரை கொண்டு செல்லத் தயாராக இருக்க வில்லை என்பது பின்னர் தெரிய வரும். எனினும் இவர்கள் கிறிஸ்தவர் கள் ஆரம்பத்திலிருந்தது போன்று ''திணிக்கப்பட்டவர்''களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழாமல் முதலிலிருந்தே ''இணைந் தவர்''களாக வாழ்ந்தனரென்பது மனத்தே நிறுத்தப்பட வேண்டிய உண்மையாகும். இந்த வரலாற்றுண் மையை எஸ். கிருஷ்ண சாமி ஐயங் கார் முதல் எம்.எம். உவைஸ் வரை பலர் வற்புறுத்தியுள்ளனர். அண்மை யில் ஆயிஷா பேகம் என்பவர் தந்துள்ள மேலதிகத் தரவுகள் இவ் வுண்மையை மேலும் நிலை நிறுத்து கின்றன. டாக்டர் இரா. நாகசாமி அவர்கள் பதிப்பித் துள்ள ''தமிழ்நாடு வரலாற்றுக் கருத்தரங்கு'' என்னும் தொகுதியில் (சென்னை 1979) எம்.எஸ். ஆயிஷா பேகம் அவர்கள் ''வியா பாரத்தில் சிறந்து முன்னேறிய இஸ்லா மியர்கள் பல நிலங்களுக்கு உரிமை யாளராகவும் இருந்தனர். அதனால் குறிப்பிட்ட சில ஊர்களிலுள்ள நிலத்தைக் கோவிலுக்கு அளித்தனர். வணிகத் துறையிலும் நல்ல வருவாய் ஈட்டினர் என்பதால் ஏற்றுமதி, இறக்குமதி வரிகளைக் கோயிலுக்கு அளித்தனர்'' என்றும் நிலக்கிழார் களாக இருந்ததால் அப்பகுதி யிலுள்ள இந்துக் கோயில்களுக்கு ஏராளமான நிலங்களையும் அளித்துப் பொதுப் பணித் துறைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவினர் என்ற சுவையான செய்தியும் தெரிய வருகிறது என்றும் (பக். 297) கூறியுள்ளனர். திருநெல்வேலி, தென்காசி வட்டத்துப் பைம்பொழில் ஊரின் திருமலை இராம சுவாமி கோவிலிலுள்ள மூன்று செப் பேடுகளில் ஒன்று முஸ்லிம்கள் குறித்த கோயிலுக்கும் நெல்லைக் காந்தியம்மன் கோயிலுக்கும் நன் கொடை வழங்கியுள்ளமையைக் குறிப்பிடுகின்றன என்பதை ஆயுஷா பேகம் கூறியுள்ளார். குறித்த செப் பேடு 1788 டிசம்பர் 6-ஆம் திகதியன்று எழுதப் பெற்றது. அதே போன்று பள்ளி வாசல்களுக்கு இந்துக்களின் கொடைகள் பற்றிய குறிப்புகளும் உள்ளன. மங்கம்மாள், மீனாட்சி ஆகியோர் இத்தகைய கொடைகளை வழங்கியுள்ளனர்.

இஸ்லாமியத் தமிழிலக்கிய மலர் வுக்கே காரணமாகவுள்ள இலங்கை யில் முஸ்லிம்கள், அறபு வணிகர் களின் சந்ததியினராகவும் தமிழகத்து முஸ்லிம்களின் தொடர்புடையவர் களாகவுமிருந்துள்ளனர் என்பது வரலாற்றில் நிறுவப்பட்டுள்ளது. போத்துக்கேய காலத்துக்கு (1505)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்பட்ட இலங்கை முஸ்லிம்கள் பற்றிக் காலஞ் சென்ற அறிஞர் எ.எம்.எ. அஜீஸ் கூறியுள்ள வரலாற்றுக் குறிப்பு முக்கியமான தாகும்.

''இலங்கை முஸ்லிம்களும் தமது வணிக உறவுக்கும், கலாசாரத் தலைமைக்கும் இந்தியாவையே எதிர் நோக்கி நின்றனர். இதனால் இலங்கைச் சோனகர் வாழ்வில் இந்தியப் பண்புகள் இடம் பெற லாயின. இனக்கலப்பு, பழக்க வழக்க மாற்றங்கள் ஏற்பட்டனவெனினும் அவர்களது சமூகத்தின் தனித்துவம் அழியாது போற்றப்பட்டது.''

(இலங்கையில் இஸ்லாம், யாழ்ப்பாணம் 1963. பக். 59)

இலங்கை முஸ்லிம்கள் தமிழையே தமது தாய்மொழியாகக் கொண்டிருந்தனரென்பதாலும், தென்னிந்திய முஸ்லிம் களுடன் உறவுகளைக் கொண்டிருந்தனர் என்பதாலும், இது வரை விவரிக்கப்பட்ட பொதுவான வரலாற்றுப் பின்னணிக் குள்ளேயே இலங்கை முஸ்லிம்களும் உள்ளடங்குவர் என்பது தெளிவாகின்றது.

இவ்வாறு பார்க்கும் பொழுது, தமிழ் நாட்டில் முஸ்லிம்கள் ஏறத்தாழ கி.பி. 9-ஆம் நூற்றாண்டு முதலே வாழ்ந்து வந்துள்ளனர் என்பதும், இவர்கள் மற்றவர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்தே வாழ்ந்து வந்துள்ளனரென்பதும் தெரிய வருகின்றன. அப்படியாயின் இஸ்லாமியத் தமிழிலக்கியங்கள் குறைந்தது பத்தாம், பதினோராம் நூற்றாண்டுகளிலிருந்தே தமிழிலிருந்திருக்க வேண்டுமென்பது தவறாகாது. எமக்குக் கிடைத்துள்ள முதலாவது இஸ்லாமிய இலக்கியம் எந்தக் காலத்தைச் சேர்ந்தது?

இக்கட்டத்தில், இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாறு பற்றியெழுதப் படும் நூல்களிலும், ஆய்வுக் கட்டுரைகளிலும் காணப்படும் ஒரு முக்கிய குறைபாட்டைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. இவற்றுட் பெரும்பாலானவை, ஏறத்தாழ எல்லாமே, இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாறு பற்றி எழுதத்தொடங்கும் பொழுது சீறாப்புராணம் முதல் வரும் முஸ்லிம் காப்பியங்களிலே தொடங்கி படைப்போர் முனாஜாத்துக்கள் வரை எடுத்துக் கூறிச் சென்றுள்ளனவேயன்றி அந்நூல்களின் கால அடைவினை வரன்முறையாக ஆராய்ந்து நிலைநிறுத்தவில்லை. இதனால் இன்றுள்ள இஸ்லாமியத் தமிழிலக்கியங்களுட் காலத்தால் முந்தியது எது என்பது திட்டவட்டமாகத் தெரியாதுள்ளது. இன்னொரு நோக்கிற் பார்க்கப்படும் பொழுது இக்குறைபாடு தவிர்க்க முடியாததாகவுமிருந்துள்ளது. காரணம், இஸ்லாமியத் தமிழிலக்கியங்கள் முழுவதும் திருப்திகரமான அளவுக்கு வெளிக் கொணரப்படாத நிலையில் அவற்றின் கால அடைவினைப் பற்றிப் பேசுவதும் பொருத்தமற்றவொன்றாக இருக்கலாம் என்பது உண்மையே. ஆனால் இன்று நிலைமை மாறியுள்ளது என்பதை மறுக்கமுடியாது. பல்கலைக் கழக மட்டத்தில் இஸ்லாமியத் தமிழிலக்கியம் தனியொரு பேராசிரியத்தரிசினைப் பெற்றுள்ள இன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வணுகு முறை மேலும் பின்போடப்படுமேல், இஸ்லாமியத் தமிழிலக்கியம் பற்றிய வளர்ச்சி பின்னணியை விளங்கிக் கொள்வது சிரமமாகவேயிருக்கும்.

காலத்தால் முந்திய தமிழிலக்கிய ஆக்கம் யாது என்பது பற்றி இவ்வாசிரியர் பெற்றுள்ள தகவல்களுள் முக்கியமானது நான்காம் இஸ்லாமியத் தமிழிலக்கிய மகாநாட்டின் போது வெளியிடப் பெற்ற பிறைப்பூக்கள் (1979) எனும் சிறுகதைத் தொகுதியில் அதன் பதிப்பாசிரியர் அ.ஸ. அப்துல்ஸமது எழுதியுள்ள 'முன்னீட்'டில் வரும் குறிப்பாகும். "16-ஆம் நூற்றாண்டின் மின்னானூறுத்தீன் புலவரின் பொன்னரிய மாலை முதல் முஸ்லிம்களின் தமிழிலக்கியப் பங்களிப்பு தொடங்கு கிறது" என்கின்றது அக்குறிப்பு. (பக்கம். 6-7)

அப்படியாயின் ஏறத்தாழ ஐந்நூறு வருட காலம் தமிழ் பேசிய இஸ்லாமியர்களின் மதப்பண்பாட்டுப் போஷிப்பிற்கு' பயன்பட்ட தாய்மொழி இலக்கியங்கள் எங்கே என்ற வினாவை எழுப்புதல் அத்தியாவசியமாகிறது.

இந்நிலைமை இரண்டு காரணிகளால் தோன்றியிருக்கலாம். முதலாவது அத்தகைய இலக்கியங்கள் பேணப்படாது போயிருக்கலாம். அக்காலத்தில் மேலாண்மையுடன் விளங்கிய சமூக-பண்பாட்டுச் சக்திகள் அவ்விலக்கியங்களின் பேணு கைக்கு எதிராகத் தொழிற்பட்டிருக்கலாம். இரண்டாவது, இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் தம்மையுமறியாமல், இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்றுக்குரியனவாக, தமிழி லக்கியப் பாரம்பரியத்தில் உயர் இலக்கிய மரபிற் போற்றப்படும் இலக்கிய வடிவங்களையே (காப்பியம், புராணம், கலம்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவை) முதனிலைப்படுத்தி நோக்குவதாகவுமிருக்கலாம். இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாறு 'இஸ்லாமியர் தமிழுக் காற்றிய தொண்டு' எனப் பேசப் பட்ட காலத்தில் இத்தகைய ஒரு பண்பு காணப்பட்டதென்பதை மறுத்தலும் முடியாது.

இவை இரண்டையும் தவிர இன்னொரு காரணியையும் மனங்கொளல் வேண்டும்.

இலங்கைத் தமிழிலக்கிய வரலாற்றில் இதுபோன்ற ஒரு பிரச்சினையுண்டு. இலங்கையில் தமிழர்கள் நீண்ட காலமாக (கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்து) வாழ்ந்து வருகின்ற ரெனினும். அவருடைய இலக்கியங்களென்று போற்றப்படத் தக்கவை. கி.பி. 14-ஆம் நூற்றாண்டிலிருந்து அதுவும் இலங்கையில் தமிழரசு ஒன்று நிறுவப்பெற்ற யாழ்ப்பாணத் திலேயே பேணப்படத் தொடங்குகிறது. வர்க்க உருவாக்கத்துக் கும். அரசு உருவாக்கத்துக்கும் (Class & State Formation) இலக்கிய உருவாக்கத்துக்கும் பேணுகைக்கும் தொடர்புண்டு. அதிகார பலமுடைய ஒரு வர்க்கம் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள இலக்கியத்தைப் பயன் படுத்துவது வழக்கம். அந்த வர்க்கத்துக்கு அரசு உதவிகளோ அல்லது அதுவே அரசாக இருந்தாலோ இலக்கியம் பேணப்படத் தொடங்கும். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் முஸ்லிம்களுக்கு அரசு உதவி கிடைப்பதும். அவர்களே அரசை நிறுவுவதும் 14-ஆம் நூற்றாண்டிலிருந்தே ஆரம்பமாகின்றன. எனவே இஸ்லாமியத் தமிழிலக்கியமும் அக்காலத்தையொட்டியே பேணப்படத் தொடங்கப் பெற்றிருக்கலாம். உமறுப்புலவருக்கு உதவி புரிந்த சீதக்காதி மரைக்காயரின் சமூக பொருளாதாரப் பின்னணி மிக முக்கியமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழிலக்கிய வரலாற்றில் இஸ்லாமியத் தமிழிலக்கியம் பெறுமிடத்தை ஆராயப் புகும்பொழுது இரு முக்கிய விடயங் களை மனத்திருத்துதல் அவசியம்.

முதலாவது, தமிழ்ப் பண்பாட்டுடன் இணைந்த இந்தியப் பண்பாடு சாராத முதல் மதம் இஸ்லாமேயாகும். கிறிஸ்தவம் இஸ்லாத்தின் பின்னரே தமிழுடன் இணைகிறது.

இரண்டாவது, இஸ்லாமியரின் சமய மீதுணர்வுடைமை (Religiostly)யாகும்.

முதலாவது அம்சத்தைச் சிறிது விரிவாக நோக்கல் வேண் டும். தமிழ்ப் பண்பாட்டுடனிணைந்த இந்தியப் பண்பாடு சாராத முதல் மதம் என்பதனால் இஸ்லாம் அதன் பின்னர் வந்த கிறிஸ் தவத்திலும் பார்க்கப் பண்பாட்டிணைவு முறையில் (Process of Accultaration) பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. அதுவும் வடஇந்தியாவிலிருந்தது போலத் தமிழ்நாட்டில் அரசியல் வலுவோ அரசு உதவியோ இல்லாத தால் இந்த இணைவு மேலும் சிரமமாகப் பட்டது.

மேலும் இஸ்லாம் தமிழ்நாட்டில் திட்டமிடப்பெற்ற மத மாற்ற முயற்சிகளில் இறங்கவுமில்லை. கிறிஸ்தவத்திற் காணப் பட்டது போன்ற மதமாற்ற முயற்சிகள் இஸ்லாத்திலிருக்கவில்லை.

இந்நிலையிலே இரண்டாவதாகக் குறிப்பிடப் பெற்றது முக்கியமாகிறது. சமய மீதுணர்வுடைமை காரணமாக, சமய அடிப்படைகளையும் அதன் காரணமாக கிரியைகளையும், தத்துவங்களையும், நெகிழ்ச்சியற்ற முறையில் மிக இறுக்க மாகப் போற்றி வந்தனர். அதுவும் பிறிதொரு மதப் பண்பாடு சமூக மேலாண்மையுடனிருக்குஞ் சூழ்நிலையில் அவற்றின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுக்கமான கடைப்பிடிப்பு ஒன்றே தனித்துவத்திற்கான உத்தர வாதமாக அமைந்திருந்தது.

இக்கட்டத்தில் இஸ்லாத்தின் மதப்பண்பாட்டு அடிப்படை அமிசங்களை அறிந்து கொள்ளல் அவசியம். கேம்பிரிட்ஜ் இந்தியாவின் வரலாறு (The Cambridge History of India. Vol II-1976) இரண்டாவது தொகுதியில் ''இஸ்லாமியச் சமூகமும் நாகரிகமும்'' என்ற பிரிவின் கீழ் 'மதமும் பண்பாடும்' எனும் தொகுதியிற் பேராசிரியர் லூயி காடே (Louis Gardet) தருவன (பக். 569-603) மிகமுக்கியமானவையாகும். இஸ்லாமியரின் சமயமீதுணர்வு முகிழ்ப்பின் பண்பாட்டு அடிப்படைகளை இவ்விடயத்திலே தெளிவுபடுத்திக் கொள்வோம்.

இஸ்லாம் எனும் மதத்தின் பண்பாடு முற்று முழுதாக குர் ஆனையும், அதன் மொழியாம் அறபையும் அடிப்படையாகக் கொண்டது. அறபு ஒன்றுதான் இஸ்லாத்தின் சடங்காசார மொழி யாகும். இஸ்லாம் மயப்பாடில்லாத அறபு மயப்பாடு இருக்க லாம். ஆனால் அறபு மயப்பாடில்லாத இஸ்லாம் மயப்பாடு இருக்க முடியாது. இஸ்லாமியச் சிந்தனைகள் குர்ஆனிலிருந்தே முகிழ்கின்றன. குர்ஆனின் மொழிபெயர்ப்பு என்பது ஒரு விளக்க நூலாக அமையுமேயன்றி, எந்த ஒரு முஸ்லிமும் தனது தொழுகைக்கும், சிந்தனைக்கும் அந்தப் பெருநூலை அதன் அறபு மொழிப்படாந்தரத்தையே அணுகுவான். எனவே தான் மசூதியும், மதரஸாவும் இஸ்லாத்தின் அடிக்கற்களாயின. குர்ஆன் என்னும் தளத்திலிருந்தே மதஅறிவியற்றுறைகளும், அவற்றின் உபபிரிவுகளும் வளர்ந்தன. இந்த அடிப்படைகளில் ஒவ்வொரு முஸ்லிமும் பங்கு பெறுவதாலேயே ''தாருல் இஸ் லாம் (இஸ்லாமிய 'இல்லம்' அல்லது 'உலகு') தொடர்கின்றது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அடிப்படைகளுக்கு ஊறு செய்யாத வகையில் இஸ்லாம் அது இயங்கும் மொழி, பண்பாடுகளுடன் உறவுகளை வைத்துக் கொள்ளும்.

இஸ்லாமியத் தமிழிலக்கியம் பற்றி ஆராயத் தொடங்கும் பொழுது இப்பண்புகளை மனதிருத்திக் கொள்ளல் வேண்டும். ஏனெனில் இஸ்லாமியத் தமிழிலக்கியத்தின் பண்புகளை தீர்மானிப்பவையே இவைதான்.

இந்நோக்கிற் பார்க்கும்போது இஸ்லாமியத் தமிழிலக்கியம் இரு நிலைப்பட்டது என்பது தெரியவரும்.

I *அறபுத் தமிழ் ஆக்கங்கள்.*

II *தமிழ் மரபுவழி ஆக்கங்கள்.*

அறபுத்தமிழ் ஆக்கங்கள் என்பன அரபு லிபியில்-வரி வடிவத்தில்-எழுதப்பெற்ற தமிழ் ஆக்கங்களேயாகும். இவ்வறபுத் தமிழ் நூல்கள் பெரும்பாலும் உரைநூல்களே.

இவ்வறபுத் தமிழிலக்கியம் பற்றிய விவரங்களை முதலில் நோக்குவோம்.

எம்.எச். அஹமத் பனீவ் ஜமாலி என்பவர் நான்காவது இஸ்லாமியத் தமிழிலக்கிய மகாநாட்டில் (1979) சமர்ப்பிக்கப் பெற்ற 'அறபுத் தமிழின் செல்வாக்கு' எனும் கட்டுரையிற் பின்வருமாறு கூறுகிறார்.

> *''...தமிழைத் தாய்ப் பாஷையாகக் கொண்ட நம்மவர்களுக்கு 'அறபுத் தமிழ்' நமது சத்திய வேதத்தைப் பற்றி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியவும், அதன் சட்டதிட்டங்கள், போதனைகள், சரித்திர வரலாறு களை விளங்கிக் கொள்வதற்கும், முஸ்லீம் சமுதாய உட்பிரிவுக் கொள் கைகளைத் தெரிந்து கொள்ளவும் மிகப்பிரயோசனப்படுவதாயிருந்தது. ஏனெனில் ஹிஜ்ரி பத்தாம், பதினோ ராம் (கி.பி. பதினேழாம், பதினெட் டாம்) நூற்றாண்டுகளில் வாழ்ந்த நமது கௌரவத்துக்குரிய உத்தமப் பெரியார்கள், உண்மையான உலமாக் கள், மார்க்க மேதைகளாயுள்ளோர் பரிசுத்த குர்ஆன் மொழி பெயர்ப்பு களையும் (தர்ஜுமதுல் குர்ஆன்) பரிசுத்த ஹதீஸ் ஷரீபுகள், சன்மார்க்க சட்டதிட்டங்களான விதிமுறைகள், சரித்திர வரலாறுகள், திருநபி (ஸல்) அவர்கள் வாழ்க்கை (ஸீறத்துன்ன பவிய்ய) இன்னோரன்ன பலப்பல நூல்களை அறபுத் தமிழிலே அச்சிட்டு அளப்பரிய சேவைகள் புரிந்துள்ளார்கள்.''

''அறபு லிபியில் தமிழ் ஒலியை எழுது வதற்கு முன் இந்த முயற்சி வங்காளத் தில்தான் ஆரம்பமாயிற்று. அடுத்துத் தமிழ்நாட்டு அறிஞர்கள் தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலியை அறபு லிபியில் உருவாக்கி, இஸ்லாமிய இலக்கியத்தில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தினார்கள். இதன் பின்னர்தான் மலையாளத்தில் அறபு-மலையாளம் உருவானதாகக் கருதப்படுகிறது'' எனச் சாரணாகை யூம் என்பவர் அதே மகா நாட்டிற்குச் சமர்பித்த 'அறபுத் தமிழ் தோற்றம், வளர்ச்சி, தளர்ச்சி, என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

நூற்றுக்கணக்கான அறபுத் தமிழ் நூல் களுநுள்ளன என்று இஸ்லாமியத் தமிழறிஞர்கள் கூறுவர்.

அறபுத் தமிழின் தோற்றத்துக்கான காரணங்களை அறிந்து கொள்வது அத்தியாவசியமாகும்.

இஸ்லாமியத் தமிழிலக்கியப் பேரா சிரியர் எம்.எம். உவைஸ் அவர்களின் கருத்துப் பின்வருமாறு :

''அறபிலும், தமிழிலும் வல்ல முஸ்லீம் அறிஞர் இஸ்லாமிய சமயக் கொள்கைகளைச் சிறப்பாக - நுணுக்க மான இஸ்லாமிய சட்டங்களை - அறபு லிபியை உபயோகித்துத் தமிழில் எழுதுவது எளிதெனக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிருக்கலாம். இஸ்லாம் சமய சம்பந்தமான கலைச் சொற்களைத் தமிழில் உள்ள எழுத்துக்களில் எழுதினால் அச்சொற்களின் மூலக் கருத் துக்கள் வேறுபட்டிருக்கும். அவற்றைத் தமிழில் மொழிப்பெயர்ப்பது கடினத்திலும் கடினமாகும். அத்தோடு அவ்வாறு மொழிபெயர்த்தாலுங்கூட அக்கலைச் சொற்கள் உண்மையான கருத்துக்களை உணர்த்தியிருக்கும் என்று கூற முடியாது.''

(இஸ்லாமியத் தென்றல்-பதுளை-1961-பக். 118)

அறபுத் தமிழின் தோற்றமும், தொழிற்பாடும் பற்றி மொழியியல் நோக்கில் ஆராய்ந்த எம்.ஏ. நுஃமான் (யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக் கருத்தரங்கிற் சமர்ப் பித்த கட்டுரையொன்றில்) அறபுத் தமிழின் தோற்றத்துக்கு எடுத்துச் சொல்லும் காரணங்களில் மூன்று முக்கியமானவை என்று கூறி அவற்றை எடுத்துக் கூறியுள்ளார். அவை பின்வருமாறு :

I ''தமிழ் எழுத்தறிவில்லாத பெரும் பாலான பாமர முஸ்லீம்களுக்குச் சமய அறிவை ஊட்டுவதற்கு அது வாய்ப்பாக இருந்தது..... மதக்கடமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக அறபு எழுத்துக்களை வாசிக்கப் பலரும் அறிந்திருந்தனர். அவர்களுக்கு அறபு மொழி தெரியாது. ஆனால் அறபு எழுத்துத் தெரியும். தமிழ் தெரியும். ஆனால் தமிழ் எழுத்துத் தெரியாது. ஆகவே தெரிந்த மொழியை, தெரிந்த எழுத்துக்களைக் கொண்டு வாசிக்கப் பயிற்றுதல் எளிதானது."

II "குர்ஆன் விளக்கவுரைகள் (தப்ஸீக்கள்) அறபு எழுத்தில் மாத்திரமே எழுதப்பட வேண்டும் என்ற கருத்து சமய அறிஞர்கள் மத்தியில் நெடுங்காலம் நிலவி வந்தது.

III "அறபுச் சொற்களை ஒலிச்சிதைவும், பொருட் சிதைவுமின்றி எழுதுவதற்கு அறபுத்தமிழ் வாய்ப்பாக அமைந்தது.

இந்த மூன்று அம்சங்களுடன் பின்வரும் காரணிகளும் தொழிற்பட்டிருக்கலாம். தமிழ்மொழி இஸ்லாத்தின் அடிப் படைக் கோட்பாடுகள் பலவற்றை ஏற்றுக்கொள்ளாத மதங் களால் தென்னிந்தியச் சூழலில் பயன்படுத்தப்பட்டு வந்ததால், தமது கோட்பாட்டு விடயங்களை அறபுத் தமிழில் எழுதுவதன் மூலம் பிறவற்றை விலக்கிய தமது தனித்துவம் பூரணமாக பேணப்படுகிறது என்ற உளநிலை முஸ்லீம்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டிருக்கலாம். முன்னர் கூறப்பட்டுள்ளது போன்று தமது சமய உணர்வில் அதிக கவனம் செலுத்தும் ஒரு மதக்குழு வினரிடத்து இது முக்கிய உளநிலைப்பாடாகத் தொழிற் பட்டிருக்கலாம்.

மேலும் அச்சு வசதி இல்லாதும், பின்னர் அச்சுப்புழக்கம் அதிகம் இல்லாதுமிருந்த அக்காலச் சூழ்நிலையில் எழுத் தோவியக் கலையை (Calligraphy) ஓர் உயர்கலையாகப் போற்றி வந்தவர்கள் தங்கள் மதத் தொடர்புக்கான விசேஷத் தொடர்பு முறைமை (Special from of Religious Communication)யாக இதனைக் கொண்டிருக்கலாம்.

ஆனால் "1937-க்குப் பின்னர் அறபுத் தமிழில் ஒரு தளர்ச்சி ஏற்பட்டுள்ளது" என்று கூறும் காரணாகையூம் அதற்கான காரணத்தையும் பின்வருமாறு கூறுகின்றார். "தமிழில் அதிக மான இஸ்லாமிய சட்ட, சமய, கலாச்சார நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அறபுத் தமிழில் சாதிக்கக் கூடியனவை களை தமிழாற் சாதிக்க முடியுமென்ற காரணத்தாலும், தமிழறிவு முஸ்லீம்கள் மத்தியில் சிறந்த நிலைமையை ஏற்படுத்தியதாலும் இந்நிலை ஏற்பட்டிருக்கலாம்."

தமிழ்ப்பண்பாடு என்ற பெருவட்டத்தினுள் தமிழ் இஸ்லாமிய உபபண்பாட்டுக்கு எத்தகைய ஊறும் இனி ஏற்பட முடியாதென்ற உணர்வு அறபுத் தமிழின் தளர்ச்சியில் தொழிற் பட்டுள்ளது எனலாம்.

இவ்விடத்தில், அறபுத் தமிழ் பற்றி எ.எம்.எ. அஸீஸ் கொண்டிருந்த கருத்து மொழிநிலையிலோ, பொருள் நிலை யிலோ ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதன்று என்பதனைக் கூறுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். அறபுத் தமிழினை அவர் பின்வருமாறு விளக்க முனைந்தனர்.

"இலங்கை முஸ்லிம்கள் பேச்சு வழக்கிலும், தென்னிந்திய முஸ்லிம்கள் பேச்சு வழக்கிலும் பல அறபுச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றிற்கான தமிழ்ச் சொற்களிலிருந்தும் அவ்வறபுச் சொற்களே கையாளப்படுவது கவனிக்கற்பாலது. எனவே முஸ்லிம்களின் தமிழ் வழக்கினைக் குறிப்பதற்கு அறபுத் தமிழ் என்ற தொடர்பு கையாளப்பட்டு வருகின்றது. முன்னர் அறபுத் தமிழை அறபிலேயே எழுதினர். அறபுமொழியில் இல்லாத ட, ச, ஞ, ப தமிழ் ஒலிகளைக் குறிப்பதற்கு அறபு எழுத்துக்களோடு விசேச புள்ளிகளைச் சேர்த்து எழுதுவர். இக்காலத்தில் அறபுத்தமிழ் அதிகமாக தமிழிலேயே எழுதப்படுகிறது." (இலங்கையில்-இஸ்லாம் பக். 15). இக்கருத்தினை உவைஸ் முதல் நுஃமான் வரையுள்ள முஸ்லிம் தமிழிலக்கிய ஆராய்ச்சியாளர்களும், மொழியியலா ராய்ச்சி யாளர்களும் மறுத்துள்ளனர். அறபுத் தமிழின் தன்மை அதன் வரலாற்றுப் பின்னணி ஆகியவற்றைப் பார்த்த நாம் மேலே தரப்பட்டுள்ள இவ்விவரணம் அறபுத் தமிழுக்குப் பொருந்தாது என்றே கொள்ள வேண்டும்.

இஸ்லாமியத் தமிழிலக்கியத்தினை மற்றைய பரிணமிப்பு மரபு வழித் தமிழிலக்கிய ஆக்கங்களாகும். உண்மையில் இஸ்லாமியரின் தமிழிலக்கியப் பங்களிப்பு என்று பேசப்படும் பொழுது இதுவே கருதப்படுகின்றது.

இஸ்லாமியத் தமிழிலக்கியங்களை வெளிக்கொணரும் பணியில்லீடுபட்டோருள் பேராசிரியர் ம.மு. உவைஸ் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கிய மானவர். முஸ்லிம்களிடையே காணப்பெறும் பல்வேறு இஸ்லாமியத் தமிழிலக்கியங்களை வெளிக்கொணர்ந்தும், அவற்றை அவற்றின் இலக்கிய உருவும் பொருளும் தெளிவுற அறிமுகம் செய்தும் வைத்த பெரும் பணி அவருடையது. இலங்கைப் பல்கலைக் கழகத்தின் அந்நாட்டு தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் க. கணபதிப் பிள்ளையின் அகண்ட ஆராய்ச்சி நோக்கும், அசாதாரணமான கருத்தோட்டமும் உவைஸ் அவர்களை ஊக்குவித்தது எனலாம். இஸ்லாமியத் தமிழிலக்கிய வளம் பற்றித் தமது கவனத்தைச் செலுத்திய முஸ்லிம்களல்லாத தமிழறிஞர்களுள் முக்கியமாக எடுத்துக் கூறப்பட வேண்டியவர்கள் பேராசிரியர்கள் வி.ஐ. சுப்பிர மணியம் சு. வித்தியானந்தன் ஆகியோராவர். பேராசிரியர் வி.ஐ. சுப்பிரமணியம் 1955-ஆம் ஆண்டில் **Tamil Culture (Vol IV No. I)** இதழில் எழுதிய **Muslim Literature in Tamil** எனும் கட்டுரை இன்று பின்னோக்காகக் பார்க்கப்படும் பொழுது அணுகுமுறைச் செம்மையும் பொருட்செறிவும் கொண்டதென்பது தெரிகிறது. பேராசிரியர் வித்தியானந்தன் இலக்கியத் தென்றல் (1953) என்ற நூலில் ஒரு கட்டுரையையும், கலையும் பண்பும் எனும் நூலில் இரு அத்தியாயங்களையும் இதுபற்றி எழுதியுள்ளார். இலங்கைத் தமிழர்களிடையே இஸ்லாமியத் தமிழிலக்கியம் பற்றிய ஆர்வத்தை வளர்ப்பதற்கு இவை உதவின.

இஸ்லாமியத் தமிழறிஞர்களுள் ஆர்.பி.எம். கனி, பேரா சிரியர் நயினா முகம்மது, அப்துர் றஹீம் ஆகியோர் இத்துறை யில் முக்கிய பங்களிப்புச் செய்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமியத் தமிழிலக்கியப் பாரம்பரியத்தினை வற்புறுத்தும் தமிழ்ப் புலமைப் போக்குக்கும் தமிழ் முஸ்லிம் களின் அரசியல் நிலைப்பட்ட இனஉணர்வுகளுக்கும் தொடர்பு உண்டு.

இஸ்லாமியத் தமிழிலக்கிய ஆய்வு வளர்ந்துள்ள தெனினும், அவ்வாய்வு முறைகளில் குறிப்பிட்ட செல்நெறியை அவதானிக்கலாம். இஸ்லாமியத் தமிழிலக்கியங்களைப் பற்றிப் பேசும் பொழுது இன்ன இன்ன இலக்கிய வகைகள் முஸ்லிம் களிடையே காணப்படுகின்றன என்றும், அவை தமிழ்ப் பெரும் பாரம்பரியத்தில் வரும் இன்னஇன்ன நூல்களுக்கு இணை யானவை என்று கூறும் மரபு ஒன்று உண்டு. உமறுப் புலவரை யும் கம்பரையும் இவ்வாறு ஒன்றிணைத்து நோக்கும் மரபு உண்டு.

எனவே இவ்வாய்வில் அவ்வணுகு முறையே மீட்டும் கையாண்டு இஸ்லாமியத் தமிழிலக்கியத்தின் உருவ, பொருள் அறிமுகத்தையே முக்கிய நோக்கமாகக் கொள்ளாது. அவ் விலக்கியங்களின் அடிப்படைப் பண்புகள் தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட முஸ்லிம்களினது மத, பண்பாட்டுத் தேவைகள் சிலவற்றை இவை எவ்வாறு பூர்த்தி செய்கின்றன என்று பார்ப்பதிலேயே கவனம் செலுத்தப்படும். இலக்கியங் களின் பெயர், பரப்புப் பற்றிய தகவல்களை மேற்குறிப்பிட்ட ஆசிரியர்களின் சம்பந்தப்பட்ட நூல்களிற் கண்டு கொள்ளலாம்.

இஸ்லாமிய இலக்கியத்தின் வடிவம், பொருள் பற்றிய தகவல்களை ஒருங்கு சேர்த்து நோக்கும்போது பளிங்கெனப் புலனாகும் முக்கிய இயல்பு, இவ்விலக்கியப் பரப்பில், உயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய மரபில் வருவனவும், முற்றிலும் நாட்டார் நிலைப் பட்டனவுமாகிய ஆக்கங்கள் இருப்பதைக் காப்பியம் போன்ற பேரிலக்கிய வடிவங்களும், ஆற்றுப்படை, பிள்ளைத் தமிழ், கலம்பகம், கோவை போன்ற சிற்றிலக்கியப் பிரபந்தங்களும் ஒருபுறமாக, மறுபுறத்தில் நாட்டார் நிலைப்பட்ட இலக்கியங் களும் இருப்பதைக் காணலாம். படைப்போர் இலக்கிய வகை யின் பாடல் மரபும், மாலை என்னும் வடிவத்தில் இயற்றப் பெற்ற பாடல்களும், இந்துத் தமிழ் மக்களிடையே நாட்டார் நிலையிற் படிக்கப் பெறும் அல்லியரசாணி மாலை, மயில் ராவணன் கதை போன்றவற்றை ஒத்திருப்பதைக் காணலாம்.

பேராசிரியர் உவைஸ் அவர்களின், ‘‘இஸ்லாமும் இன்பத் தமிழும்’’ (சென்னை 1976) என்ற நூலிற் படைப்போர் எனும் இலக்கிய வடிவத்தில் எழுதப் பெற்ற பல பாடல்களைத் தந்துள்ளார். அவற்றை வாசிக்கும் பொழுது கிராம மக்களிடையே இன்றும் நிலவும் பெரிய எழுத்து ‘‘தேசிங்கு ராஜன்’’ ‘‘நல்லதங்காள் கதை’’ போன்றவற்றை ஒத்திருப்பதை அவதானிக்கலாம்.

அக்காலத்துத் தமிழ் முஸ்லீம்களிற் பெரும்பாலானோர் எழுத்தறிவற்றவர்கள் என்று அழுத்தத்துடன் முஸ்லீம் அறிஞர்களாலே எடுத்துரைக்கப்படும் கூற்றின் பின்னணியில் நோக்கும் பொழுது, நாட்டாரிலக்கிய வடிவங்களிலமைந்துள்ள கிராமியப் பாடல்கள், உயரிலக்கியங்களுக்கில்லாத முக்கியத்து வத்தைப் பெறுகின்றன. தமிழகத்திலும், இலங்கையிலுமுள்ள சாதாரண இந்துக் கிராமவாசிகள் தங்களது ஓய்வு வேலைகளில் எவ்வாறு சுற்றி வர இருந்து ஒருவர் பாட மற்றவர் கேட்டுக் கொண்டிருப்பார்களோ, அதே போன்று தமிழ் முஸ்லிம் கிராம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிகளும் கேட்பதற்குத் தோன்றிய இலக்கியங்களாகவே இவற்றைக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறாயின் இவ்விலக்கியங்கள் சாதாரண முஸ்லிம்களின் மத உணர்வுப் போதனைக்கு பெரிதும் உதவியுள்ளன என்பது தெரியவரும்.

இத்தகைய உண்மைகள் வெளிக்கிளம்பும் பொழுதுதான். நாம் மத்திய கால இலக்கியங்களிற் சமூகப் பயன்பாடு பற்றிச் சிந்திக்க வேண்டுவது அத்தியாவசியமென்பது தெரியவரும். கம்பராமாயணம் தமிழின் தலைசிறந்த இலக்கியமாகவிருக்கும் அதே வேளையில் வைணவக் கோயிற்களிற் படிக்கப்படுவதற்கான இலக்கியமாகவுமிருந்தது என்பதையும் நாம் மறந்துவிடுதல் கூடாது. அதே போன்று பெரியபுராணம், கந்தபுராணம் ஆகியன இலக்கியங்கள் என்ற வகையிலும் பார்க்க, மத நூல்கள் என்ற வகையிற் போற்றப்பட்டமை எமக்குத் தெரியவரும்.

அப்படியானின் இஸ்லாமியத் தமிழிலக்கியங்களும் அன்றாட வாழ்க்கையில் மத உணர்வுப் போஷிப்புக்காகப் பயன்படுத்தப்பட்டனவா என்ற ஆராய்தல் அத்தியாவசியமாகிறது. ''இஸ்லாமும், இன்பத்தமிழும்'' என்ற நூலில் ''ஒசியத்து மாலை, இராஜமணிமாலை'' ஆகிய நூல்களின் சிறப்பு எனும் அத்தியாயத்தில் (பக் 70-75) சில இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் ஒருவர் மறைவின் பின்னர் துக்கம் காக்கும் மூன்று இரவுகளிலும் படிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன எனும் உண்மையை உவைஸ் எடுத்துக் கூறுகின்றார்.

மேலும் இவையன்றி சீறாப்புராணம் முதலிய நூல்களும் படிக்கப்படுகின்றன. ஒருவர் சீறாப்புராணச் செய்யுள்களைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்க இன்னொருவர் அச்செய்யுள்களுக்கு உரை கூறி விளங்கப்படுத்துவார். சிற்சில வேளைகளில் இவ்வாறு உரை கூறுதல் போட்டியிலும் முடிகிறது. இப்போட்டிகளில் உரை கூறி விளங்கப்படுத்தியவர்களுள் சிறந்தவர் கூடியிருந்தவர்களால் தெரிவு செய்யப்படுவார் என்றும் கூறியுள்ளார்.

ஆறுமுகநாவலர் இதனை அறிந்திருப்பின் மிக்க மகிழ்ச்சியடைந்திருப்பார். ஏனெனில் இத்தகைய ஒரு மதப்போதனை மரபைத்தான் அவர் மீண்டும் நிலைநாட்ட விரும்பினார். சைவ மரபில் இதனைப் புராணப்படனம் என்பர். கந்தபுராணம், பெரிய புராணம், திருவிளையாடற்புராணம் போன்ற நூல்களுக்கு இவ்வாறு "பயன்" சொல்வது சாதாரண சம்பிரதாயமாகும். சைவர்களிடையே புராணப்படனம் கோயில்களிலே நடைபெறும். அதனால் மேற் குறிப்பிட்டது போன்ற போட்டிகள் நடைபெறுவதில்லை.

நிலவுடைமையமைப்பின் கீழ் வரும் விவசாய நிலையில் புராணப்படனம் மிகச்சிறந்த ஒரு மதத் தொடர்பு முறைமை **(Form of Religion Communication)** ஆகும். அடிநிலை மக்களை விசுவாசிகளாகக் கொண்டிருந்த இஸ்லாமும் தமிழ் நாட்டில் இத்தகையதொரு தொடர்பு முறைமையைப் பேணி வந்துள்ளமை அதன் சமூகவியற் பண்புகளை வெளிக் கொணருகின்றதெனலாம்.

நோன்பு நோற்கப் பெறும் மாதமாகிய றமளான் மாதத்தில் குர்ஆன் ஓதிக்கொடுக்கும் மாணவர்களுடன் ஆசிரியர்கள், மாணவர்கள் ஒவ்வொருவரினது வீட்டுக்குச் சென்று "அறபுச் சொற்கள் கலக்கப்பட்ட தமிழ் பாக்களைப் பாடுவர். பாடித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது ஆசிரியர்களுக்குக் கையுறைகளைப் பெற்றுக் கொடுப்பர்'' என்றும் உவைஸ் அவர்கள் எடுத்துக் கூறி (பக். 89) அத்தகைய வேளைகளிற் படிக்கப் பெறுவது ''றமளான் மாலை'' என்ற உண்மைய்ய எடுத்துக் கூறுகின்றார்.

மேலும் இஸ்லாமியத் தமிழிலக்கியங்கள் பல பக்கீர்களால் பாடிக் கொண்டு செல்லப் பெறுவன எனும் உண்மையை நாம் மறந்து விடுதல் கூடாது.

இவ்வாறு நோக்கும்பொழுது இவ்விலக்கியங்கள் அன்றாட வாழ்வில் எத்தகைய முக்கியமான சமயப்பணியினை நிறைவேற்றுகின்றன என்பது தெரியவருகிறது.

இஸ்லாமியத் தமிழிலக்கியம் பற்றி ஆராய்ந்துள்ள பலர் தமிழிலக்கியத்துக்கு இஸ்லாம் செய்த பங்களிப்புகள் என்ற தலைப்பின்கீழ் இஸ்லாத்தின் வழியாக வந்த புதுப் பிரபந்தங் கள் பற்றிக் குறிப்பிடுவர். படைப்போர், முனாஜாத் கிஸ்ஸா, மசலா, நாமா என்ற பிரபந்த வகைகள் இவ்வாறு குறிப்பிடப் படுதுண்டு. ஆனால் உவைஸ் அவர்கள் குறிப்பிடுவது போன்று ''இப்பிரபந்தங்கள் முஸ்லிம்களுக்கே உரியனவாகத் திகழ் கின்றன.'' இஸ்லாம் வழியாக வந்து, தமிழிலக்கியப் பாரம் பரியத்துனுட் புகுந்து அதன் பின்னர் இஸ்லாத்துக்கு மாத்திரமே உரியதாகக் கொள்ளப்படாது. தமிழிலக்கியத்தின் இன்றியமை யாத ஒரு இலக்கிய வடிவமாக அமையும்பொழுதுதான் அதனை நாம் பங்களிப்பு என்று கூறுவது பொருந்தும். உதாரண மாக முற்றிலும் கிறிஸ்தவத்தின் வழியாகவே வந்த வினாவிடை முறைமை ஆறுமுகநாவலராற் சைவத்தைப் போதிப்பதற்கான பாட வடிவமாக்கப்படும் பொழுது அதனை நாம் தமிழுக்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்ட பங்களிப்பு எனக்கொள்ளலாம். ஆனால் அவ்வாறில்லாது முற்றிலும் இஸ்லாத்தைப் பற்றிப் பாடு வதற்கோ எழுதுவதற்கோ மாத்திரமே பயன்படும் ஓர் இலக்கிய வடிவத்தையோ, இலக்கிய நெறியையோ தமிழுக்கான பங்களிப்பு எனக்கொள்வது பொருத்தமுடையதோ எனும் வினா எழ இடமுண்டெனினும் தமிழிலக்கியப் பரப்பில் இவ் விலக்கிய வடிவங்கள் இருக்கின்றமையொன்றே தமிழின் பொதுமையை எடுத்துக்காட்டுகின்றதெனலாம். அந்த அளவில் இது பெரும் பங்களிப்புத்தான் என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மேலே கூறிய இஸ்லாமியத் தனித்துவ இலக்கியத் தன்மை களும் புற நடையாக அமைகின்றது. ''நொண்டி நாடகம்'' எனும் வடிவம் ''முஸ்லிம் தமிழர் தமிழில் புதிதாக அமைத்துச் செய்த இலக்கியம் நொண்டி நாடகம் என்பது'' என மயிலை சீனி.வேங்கடசாமி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (பத்தொன் பதாம் நூற்றாண்டில் தமிழிலக்கியம்-சென்னை 1962. பக். 158) நொண்டி நாடகம் எனும் நாடக வடிவம் தமிழ் நாடக வடிவங் களுள் ஒன்றாக இன்று அமைந்துள்ளது. இலங்கையில் அது நாட்டார் நிலை (Folk) நாடகமாகவே கொள்ளப்படுகிறது. நொண்டி நாடக வடிவமூலம் இந்துக் கடவுளரைப் போற்றும் இலக்கிய முறைமையுண்டு. ஊதாரித்தனமாகவும் பிறர்க்கு இன்னல் தரும் முறையிலும் வாழ்ந்த ஒருவன் தன்னுடைய காலொன்றை இழந்தவனாக வருதலும், வந்து அத்தகைய செய்கைகளைச் செய்வதும், பின்னர் கடவுளை மனமுருகி வேண்டுவதின் மூலம் இழந்த காலைப் பெறுவதும் இந்த நாடகத்தின் அமைவுநெறி (motif)யாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொண்டி நாடகம் உண்மையில் தென்னிந்தியப் பாரம்பரியத்தின் வழி வந்த ஒன்றா அன்றேல், அறபு, பாரசீக அல்லது உருது மொழிப் பாரம்பரியங்கள் வழிவந்த ஒன்றா என்பது பற்றி ஆராய்தல் அத்தியாவசியமாகின்றது. அவ்வாறு இஸ்லாமிய மரபு வழியாக வருவதெனின் அதன் மூலம் எம்மொழியிலுள்ள நாடக வடிவத்திலுள்ளது என்பது பற்றிய தெளிவு இருத்தல் வேண்டும். பேராசிரியர் பறோவும் எமனோவும் "நொண்டி" எனும் சொல் "நொண்டு" எனும் தமிழ்ச்சொல்லின் அடியாக வந்தது என்றும், நொண்டி என்பது "பொய்க்காலால் நடிப்போன்" என்பதையும் குறிக்கும் என்றும் கூறுவர். (Dravidian Etymological Dictionary 3138) நொண்டி நாடகம் எனும் வடிவம் மலையாளத்திலும் உள்ள தெனும் குறிப்பு தமிழ் லெக்கிகனால் தெளிவாகிறது. தமிழி லுள்ள நொண்டி நாடகங்களுள் சீதக்காதி நொண்டி நாடகமும் ஒன்று என்பார். நொண்டிச் சிந்து என்பது நொண்டி நாடகத்திற் பயிலப்படும் சிந்துவாகும். மஹாராஷ்டிரத்திலிருந்து தஞ்சாவூர் வழியாகத் தமிழுக்குட் செறிந்துள்ள முக்கிய நாட்டார் (folk) கலை வடிவம் லாவணி ஆகும். "வீரர்களின் ஆற்றலையும் புராண தத்துவ இதிகாசங்களையும் இராவேளையில் பாமர மக்களுக்குக் கானம் மூலமாக வழங்கும் சுவைமிக்ககலை லாவணி என்பது. துக்கன்கீர் எனும் துறவியின் மூலம் தஞ்சைக்கு வந்த இக்கலையைப் பிரபலப்படுத்தியவர் ஸையத் உமர் என்பார்" எனப் பி.எம். சுந்தரம் கூறியுள்ளமை கவனிக்கப்பட வேண்டியது.

இக்கட்டத்தில் தமிழ் முஸ்லிம்களின் நாடகப் பயில்வு பற்றிய ஒரு குறிப்பு அத்தியாவசியமாகிறது. இஸ்லாத்தில் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலினர் இன்னொரு பாலராய் வேடமிட்டு நடிப்பது தடை செய்யப்பட்டுள்ளது காரணமாக நாடகத்தை மார்க்கத்துக்கு அப்பாலாகக் கொள்ளும் ஒரு மரபுண்டு. ஆயினும் தமிழ் நாட்டின் அடிநிலை மக்களிடத்தே சுவறியிருந்த இஸ்லாம் அந்நிலையின் மத, பண்பாட்டுப் போஷிப்பிற்காகக் கிறிஸ் தவம், இந்துமதம் நாடகங்களைப் பயன்படுத்துவது போன்று தானும் பயன்படுத்தியுள்ளது என்பதை நிரூபிப்பதாக அமைந் துள்ளது டாக்டர் ஏ.என். பெருமாள் அவர்களது கட்டுரை. நான்காவது இஸ்லாமிய தமிழ் இலக்கிய மகாநாட்டிற்குத் தாம் சமர்ப்பித்த ''முஸ்லிம் ஆசிரியர்கள் படைத்த தமிழ் நாடகங்கள்'' எனும் கட்டுரையில் அப்பாசு நாடகம், அலாவு தீன் நாடகம், அலிபாதுஷா நாடகம், கபுகரகு நாடகம், சாந்தரூபி நாடகம், தையார் சுல்தான் நாடகம், லால்கௌகுஹர் நாடகம் ஆகிய முஸ்லிம்களால் இயற்றப்பெற்ற நாடகங்களின் கதையமைப்பு, நாடகத்தன்மை ஆகியவற்றை அவர் ஆராய்ந் துள்ளார். இந்நாடகங்கள் பற்றிய ஆய்வின் இறுதியில் ''நாடக ஆசிரியர்கள் இஸ்லாத்தில் நம்பிக்கையும், திருக்குர்ஆனில் நல்ல பயிற்சியும் உடையவர்கள் என்பதை ஐயத்துக்கிட மின்றித் தங்கள் படைப்புகளிற் காட்டியுள்ளனர். தமிழ்ப் பின்னணியிற் சமய உண்மைகளைத் தூவி உலகியற் கருத்துக் களைப் பரப்பி நாட்டார் நாடக உருவில் அரங்கில் காணவும், அச்சில் படிக்கவும், தகுதியான நிலையில் நாடக இலக்கியங் களைச் சுவைபட முஸ்லிம் ஆசிரியர்கள் படைத்துத் தமிழ் அன்னையின் நாடகத்தைப் பெருக்கியுள்ளார்கள் என்று கூறி மகிழலாம்'' எனக் கூறியுள்ளார். இலங்கையில் முஸ்லிம்களின் நாட்டார் நிலை நாடக ஈடுபாட்டிற்கான உதாரணங்களை மன்னார்ப்பகுதி முஸ்லிம்களிடையே காணலாம். இஸ்லாமியத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழிலக்கிய முயற்சிகளுள் ஒன்றான நாடகம் அதிகம் விதந்தோதப் பெறுவதில்லை என்பதைக் கூறவேண்டியுள்ளது.

இஸ்லாத்தால் ஏற்பட்ட தமிழ் அறபு மொழித் தொடர்பின் தன்மை பற்றியும் குறிப்பொன்றினைக் கூறுதல் அத்தியாவசிய மாகின்றது. அறபு மொழி முற்றிலும் இஸ்லாமிய மொழியாகவே தமிழில் அறிமுகமானதாலும், அறபினைத் தங்கள் மதச் சிந்தனைகள், காரணங்களின், தாய் மொழியாகக் கொண்ட தனாலும், அறபு மொழியின் இலக்கியச் சீர்மையும், சிறப்பும் தமிழில் அறிமுகப்படுத்தப்படவில்லையென்றே கூறுதல் வேண்டும். ஆங்கிலத்தை படிப்பதற்கிருந்த அரசியற் சமூகத் தூண்டுதல்கள் அறபு சம்பந்தமாக அக்காலத்திலே தொழிற் பட்டிருந்தமையால் அறபு இலக்கியத்தின் செம்மைசேர் படைப்புகள் தமிழின் பாற்படுத்தப்படவில்லையெனலாம். இப்பொழுது காணப்படும் மத்திய கிழக்கு தொழிற்றொடர்பு அறபு இலக்கியத்தின் அறிமுகத்துக்கு வழிவகுக்க இடமுண்டு.

'அறபிக்கதை'கள் தமிழிற் பயிலப்படுவது பற்றிக் குறிப்பிடுவது அத்தியாவசியமாகின்றது. மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் ''பாரசீக மொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட அரபுக் கதைகள் பேர் போனவை'' என முன்னர் குறிப்பிடப் பெற்ற நூலிலே (பக். 158) குறிப் பிட்டுள்ளார். அவர் சுட்டும் நூல் 'அராபிக் கதை' என்று பத்தொன்பதாம் நூற்றாண்டில் அச்சிடப்பட்டுள்ளது. சென்னை வேலயரஞ்சனி அச்சுக் கூடத்தில் 1887-இல் அச்சிடப்பெற்ற அராபிக் கதை இரண்டாம் பாகத்தைப் பார்க்கும் பொழுது அது, பாரசீக மொழி வழியாக வந்ததா அன்றேல் ஆங்கில மொழி வழியாக வந்ததா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பதினோராம் பக்கத்தில் வரும் உறுதி மொழிப் பத்திரிகை என்னும், பகுதியிற் பின்வரும் வாசகங்கள் காணப்படுகின்றன.

> ''மாட்சிமை தங்கிய ஜீவரட்சாமிந்தக் கலாசாலைத் தலைவராகிய சோடாவ தானம் சொக்கலிங்கம் முதலியாருக்கு பெரும்பாலும் விண்ணப்பம் தாங்கள் அச்சிட்டுக் கொண்டு வருகின்ற முன்னம் சீர்மை இங்கிலாந்து இப்படிப்பட்ட தீவாந்தரங்களில் அரபுப் பாஷையிலும், பிந்தி பாரீஸ் பிரேஞ்சிலும் அச்சிட்ட இங்கிலீசு மொழியைத் தமிழில் அச்சிட்ட பாஷையைக் கொண்டும் இன்னும் சிலர் அச்சிட்ட பாஷையைக் கொண்டும் பாக்குப் பேட்டை முதலி யார் அவர்கள் அச்சிட்ட அபுல்காசன் கதையையும் உடனாகச் சேர்ப்பித்து பிரம க்ஷத்திரிய-வைசிய சூத்திர இந்த நான்கு மதத்தோறும் முசலீமான் கொண்ட காரணத்தோர்க்கும் அருந் தமிழாயிருந்த காதையை என் போலும் புல்லறிவுடைய சிறியோர்க் கெல்லாம் தடமாட்டமின்றி நட மாட்டமோங்கவும் செந்தமிழாயச் சிட்ட எனதையனுக்கு கைமாறின்றி கொடையளிப்பதற்கு பாத்திரனல்லவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிசேடனாலும் சுட்டுரை யில்லையே எனதன்பர் இம்மூன்று வாலப்பிரணங்களிற் கூறிய அற்புத விற்பனக் காதைதயை அச்சிடத் துணிவு கொண்ட எனதாசிரியருக்கு அன்போடு வந்தனம், இன்போடு தந்தனம்.

இப்படிக்கு

தங்கள் மாணாக்கன்

சீர்காழி இராஜலிங்க பண்டிதன்

இதனைக் கொண்டு நோக்கும். பொழுது ஆங்கிலமொழி வாயிலாகவே அராபிக் கதை வந்துள்ளது தெரியவரும். நூலின் முகப்புப் படத்தில் ஆங்கிலத்தில்.

Arabian History Thousandnight

என்று எழுதப் பெற்றுள்ளது.

இஸ்லாத்தின் பங்களிப்பு என்றும், அறபு பாரசீக இலக்கியங் களின் உணர்வோட்ட, சிந்தனா நெறி விஸ்தரிப்பு என்றும், சந்தேகத்துக்கிடமின்றிக் ''கூறத்தக்கதாய்த் தமிழிலக்கியத்தில் இடம் பெற்றிருப்பது குணங்குடிமஸ்தான் சாகிபு அவர்களின் சூஃபிநிலைச் சரிதையாகும். தமிழிலக்கியம் சுட்டும் ஆன்ம அனுபவ வெளிப்பாடுகளிற் குணங்குடியார் பாடல்களுக்கும், தாயுமானவர் பாடல்களுக்குமுள்ள ஒற்றுமைகள் பற்றிப் பலர் கூறியுள்ளனர். வெளிப்படையாகத் தெரியும் நந்தீஸ்வரக் கண்ணி, மனோன்மணிக்கண்ணி, ஆதத்துப் பத்துப் போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றில் தாயுமானவருக்கும், குணங்குடியாருக்கும் காணப்படும் ஒற்றுமைகளை எடுத்து காட்டியோர் பலர் சைவப் பாரம்பரியத்தில் வரும் படிமங்களையும், குறியீடுகளையும் குணங்குடியார் பயன்படுத்தியுள்ளமை காரணமாகவும், அவரின் பாடல்கள் சிலவற்றின் பொருள் காரணமாகவும் அவரை உண்மையான சூஃபிய மரபினர் எனக்கொள்ளுதல் முடியுமோ என்ற ஐயுறவு கிளப்பப் பெற்றதுண்டு. பேராசிரியர் அப்துல் றகுமானின் பதிப்பாக வந்துள்ள குணங்குடியார் பாடற்கோவையில் (அகராப்-1980) பதிப்பாசியர் 'அறிமுக'க் கட்டுரையிற் குணங்குடியார் சூஃபிய மரபைச் சார்ந்தவரேயென்றும், குணங்குடியார் பயன்படுத்தும் சிவம், சக்தி, உமை, மனோன்மணி, அம்பிகை, வாலை, பரை, கேசரி, சாம்பசி, தட்சணாமூர்த்தி போன்ற சொற்கள் புராண சமயச் சொற்கள் அல்ல என்றும், அவை யோக பரிபாஷைச் சொற்கள் என்றும் நிறுவியுள்ளார்.

உண்மையில் தமிழிலுள்ள சித்தர் பாடல்கள் மிக ஆழமாக அவற்றின் மறைஞானப் பண்பும், மெய்யியல் அடிப்படையும் துலங்கும் வகையில் ஆராயப்படும் பொழுதுதான் இப்பிரச்சனை தெரிவுறும். எனினும் இன்றைய நிலையில் முற்றிலும் இலக்கிய நிலைப்பட்ட ஒரு வரலாற்றுண்மையைக் கூறலாம். இஸ்லாத்தின் ஏகத்துவ இறைக் கொள்கைக்கும் வேறுபாடுண்டு. ஆனால் பல்வேறு தெய்வ மூர்த்தங்களுக்கு அப்பால் நிற்கும் பேரிறையைக் காணும் மெய்யியற்றேடல்கள், சைவ சித்தாந்தத்திலும், சித்தர் பாடல்களிலும் சொல்லப்பட்டதற்குப் பின்னரே தமிழில் இஸ்லாத்தின் ஏக இறைக் கோட்பாட்டைத் தமிழில் வெளிப்படுத்துவதற்கு வேண்டிய ஓர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியத் தயார் நிலையை முந்திய முயற்சிகள் ஏற்படுத்தின என்று கொள்வதில் எவ்விதத் தவறும் இருத்தல் முடியாது. குணங்குடியாரின் பாடல்கள் தமிழிலக்கியதிற் பெறும் இடத் தினைப் பற்றிய ஆய்வின் குவிமுகம் சற்று அகட்டப் பெறு மானால், அனைத்திந்திய மட்டத்தில் பக்தி நெறிக்கும், சூஃபி நெறிக்கும் இயைபும், இணைவும் ஏற்படுவதனைக் கபீர், நானக் ஆகியோரிடத்துக் காணலாம். குணங்குடியாரின் பாடல்கள் இச்செயல்நெறியின் தமிழ் நிலை என்றே கொள்ளப்படல் வேண்டும். இத்தகைய ஞானியரை ஆகம பண்டிதரும், உலமாக்களும் தத்தமது கண்ணோட்டத்தில் நின்று கொண்டு கண்டித்துள்ளனரெனினும், இவர்கள் அடிநிலை மக்களிடை யே இஸ்லாமும், இந்து மதமும் ஏற்படுத்திய உணர் வொற்றுமை யின் தத்துவ இலக்கியப் பிரதிபலிப்புகள் ஆகக்கொள்ளப்படல் வேண்டும்.

தென்னிந்தியப் பண்பாட்டில் இஸ்லாத்தின் மிக முக்கிய மான தாக்கம் எனக் குறிப்பிடத் தக்கது வீர சைவ இயக்கமாகும். சாதி யமைப்பைச் சாடி சைவ மக்களின் சைவ மீதுணர்வை (Religiosity) வற்புறுத்திய இவ்வியக்கம் கன்னடப் பிரதேசத்தில் ஏற்படுத்தியது போன்ற ஒரு தாக்கத்தினைத் தமிழில் ஏற்படுத்த வில்லை என்றே கூறவேண்டும். மேலும் தமிழ்ச் சூழலில் வீர சைவ மரபு இஸ்லாத்தை எதிர் நோக்கித் தொழிற்பட்ட ஒன்றாகவுமிருக்கவில்லை.

தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் இஸ்லாத்துக்கும் சைவத் துக்குமுள்ள உறவு ஒன்று மற்றொன்றை உள்வாங்கப்படாத இணைவு (Acculturation Without Assinulation) நிலைப்பட்ட தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழிலக்கிய வரலாற்றில் இஸ்லாமியத் தமிழிலக்கியத்தின் இடத்தையும், பங்கையும் நிர்ணயிப்பதற்கான இலக்கிய இயக்கத்தில் இலங்கை முஸ்லிம்களின் பங்கு கணிசமானது என்ற குறிப்பினை இக்கட்டுரையின் இறுதியில் சேர்த்துக் கொள்ள வேண்டியது அத்தியாவசியமாகும்.

UNIVERSITY OF PERADENIYA
6-1-1996
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சித்தாந்தம் - ஒரு சமூக வரலாற்று நோக்கு

1

"மெய்யியல்" எனப்படும் பயில்நெறியின் சமூகப் பயன்பாட்டைப் பேராசிரியர் ராதாகிருஷ்ணன் எடுத்துக் கூறியுள்ள முறை ஊன்றி நோக்கப்பட வேண்டியதாகும்.

"மெய்யியலானது. மனிதனின் பிரயோகத் தேவைகளில் வேர் கொண்டுள்ளது. மனித இயல்பூக்கங்களை நியாயப்படுத் தவும், சமய ஆழ்நிலை உயிர்ப்பினை வியாக்கியானஞ் செய்யவும், சிந்தனா முறைமையொன்றினால் முடியவில்லை யெனில் அது பொதுப்படையான அங்கீகாரத்தைப் பெற முடியாது. நமது நெருக்கடிகளின் பொழுதும், துன்பங்களின் பொழுதும் நமக்கு ஆறுதலைத் தரமுடியாததாகவுள்ள மெய்யியலாளர் சிந்தனா ஊகங்கள் கவனத்தை திசை திருப்பும் வெறும் அறிவுப் பொழுது போக்கேயன்றி காத்திரமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனையாகாது.'' (S. RadhaKrishnan. Indian Philosophy-Vol II. London, 1956, ". 659)

கருத்து முதல்வாதக் கட்டுக்கோப்பினுள் நிற்கும் ராதா கிருஷ்ணன் தமது நெறிக்கு இயைய நின்று மெய்யியலின் சமூக நியாயப்பாட்டினை எடுத்துக் கூறியுள்ளார். இயக்கவியற் பொருள் முதல் வாதிகள் சமூக நிலைப்பாட்டினை முக்கியப் படுத்தி நோக்குபவர்கள். மேற் சொன்ன இக்கருத்தினை தம் நிலையில் நின்று பின்வருமாறு கூறுவர்.

> ''*மெய்யியல் என்பது - இது எந்த மெய் யியற் கோட்பாட்டிற்கும் பொருத்த மானது. சிறப்பான ஓர் உசாவு முறை மாத்திரமன்று. அது சமூகப் பிரக்ஞை யின் ஒரு திட்டவட்டமான வடிவ மாகும். அதாவது அது சமூக இருக்கை நியதியின் பிரதிபலிப்பு ஆகும்.* **(T.I. Ozierman The Problems of the Scientific Philosophical world on look in Philosophy in USSR-Problems of Materialism Moscow-***1977-". 30)*

> *இவ்வாறு நோக்கும் பொழுது மெய் யியல் என்பது சமூக சிந்தனையின் மிக உன்னதமான கருத்துப் பிரமாண நிலை என்பது தெரியவரும். இவ் வேளையிற் சமூகசிந்தனை என்பது யாதென தெளிவுப்படுத்திக் கொள்ளல் வேண்டும். சமூக*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுகள் பற்றியும் தனது சொந்த சமூக நிலைமை பற்றியும் மனிதன் கொண்டுள்ள பிரக்ஞை பூர்வமான சிந்தனை நோக்கே சமூக சிந்தனை என்று கூறப்படும். சமூக வரலாற் றினை அறிவதற்கு சமூக சிந்தனை யினைத் தெளிவுபடுத்திக் கொள்ளு தல் அத்தியாவசியமாகும். ஏனெனில் இருக்கின்ற சமூக அமைப்பை நியாயப்படுத்தவோ, அல்லது இருக் கின்ற சமூக அமைப்பை புறங்காணு வதற்கென முன் வைக்கப்படும் இலட்சிய சமூக அமைப்போ, நிதரிச சமூகத்தின் தேவைகளாக அமை கின்றமையை எவரும் ஏற்றுக் கொள் வர். எனவே சமூக அபிவிருத்தி பற்றிய சமகாலச் சிந்தனைகளை அறிவதற்கு அவ்வக் காலச் சமூக சிந்தனைகள் முக்கியமாகின்றன. இச்சமூக சிந்தனை களை மெய்யியலில் மிக்க முனைப் புடன் காணலாம். எனவே எந்த ஒரு சமூகத்தினதும் அல்லது எந்த ஒரு குழு வினதும் சமூக வரலாற்றை அறிய முனையும் பொழுது அச்சமுதாயத் தில் தொழிற்பட்ட, பயிலப்பட்ட, உருவாக்கப்பட்ட மெய்யியற் கொள் கைகளை அறிந்து கொள்வது அத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவசியமாகும்.

சைவ சித்தாந்தம் எனும் மெய்யியற் கோட்பாடு தமிழர்களுடைய சமூக வரலாற்றை அறிவதற்கு எவ்வகையில் உதவுகிறது என்பதனை அறிவியல் முறையில் ஒரு சிறிது நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

2

சைவ சித்தாந்தம் என்பது தமிழ் மக்களின் தனித்துவமான மெய்யியற் கொள்கை என்று போற்றப்படுவதாகும். ''திராவிட இனவுணர்வு, தமிழக வரலாற்றுத் தொன்மையுணர்வு ஆகியன காரணமாக வளர்ந்த அறிவியக்கம் தமிழர்க்கும் பாரம்பரிய இந்து மதத்திற்குமுள்ள உறவினை எடுத்து விளக்க முனைந்த பொழுது, தமிழகத்து இந்துமதப் பாரம்பரியம் ஆரிய பிராமண வழி வரும் வைதீக நெறிப்பட்டது அல்லவென்றும் அது தமிழர்க்கே உரித்தான தனிமதநெறியொன்றினைச் சார்ந்தது என்று அந்தமத, மதச்சிந்தனை நெறியை சைவ சித்தாந்தத்தில் காணலாம் என்றும் வற்புறுத்திற்று. தமிழ், தமிழ்நாட்டு தனித்துவம் பற்றிய அறிவு வாதத்திற்குச் சைவ சித்தாந்தம் மிக முக்கியமான பண்பாட்டு அம்சமாக அமைந்தது.'' (கா. சிவத்தம்பி தனித் தமிழியக்கத்தின் அரசியற் பின்னணி-பக். 34)

இம்மெய்யியற் கோட்பாட்டின் ஆதார நூலாக அல்லது அடிநூலாகக் கொள்ளப்படும் சிவஞானபோதம் வடமொழி வழி வருவதா என்பது பற்றிய கருத்து வேறுபாடு இருப்பினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கோட்பாட்டின் பிற முக்கிய விளக்க நூல்கள் தமிழிலேயே உள்ளன என்பதும் தமிழ்ப் பாரம்பரிய முறைமைகளுக்கு இயைபவே இக்கொள்கை விரிக்கப்பட்டும் விலக்கப்பட்டுமுள்ளதும் மிகமுக்கியமான உண்மைகளாகும். அதாவது முற்றிலும் தமிழ்ப்பண்பாட்டு நிலைப்பட்ட குறிப்புக்களையும் படிமங்களையும் கொண்டே இக்கொள்கை விளக்கப்பட்டுள்ளது. அதனால் தமிழ்ச் சமூக சிந்தனையில் ஒரு தலைசிறந்த வெளிப்பாடாக இது அமைகின்றது. இன்னொரு வகையாகக் கூறினால் இக்கொள்கை பற்றிய கூற்றுக்களும், விளக்கங்களும் வியாக்கியானங்களும் தமிழர் சிந்தனையின் தன்மைகளை உணர்ந்து கொள்ளுவதற்கு உதவும்; உதவல் வேண்டும்.

இக்கோட்பாடு பற்றிய சமூக, வரலாற்று முக்கியத்துவத்தினைக் கைலாசபதி 'பேரரசும் பெருந்தத்துவமும்' என்ற தனது கட்டுரையில் (பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், 1966) எடுத்துக்கூறியுள்ளார். அதில் அவர், சோழர் காலத்து நிலவிய நிலமானிய அமைப்பின் மேற்கட்டுமானக் கருத்து நிலையின் வெளிப்பாடே சைவசித்தாந்தம் என்பதற்கான காரணங்களை முன்வைத்தார். அண்மையில் சோழர் கால ஆட்சிக்கும் சமூக அமைப்பிற்கும் புதிய விளக்கம் கொடுக்க முனைந்த பேராசிரியர் பேற்றன்ஸரைன் (Burton Stein) சைவ சித்தாந்தக் கோட்பாட்டின் வளர்ச்சியையும், பரவலையும் அக்காலத்து மதசீர்திருத்த நடவடிக்கைகள் சிலவற்றுடன் இணைந்து நோக்குகின்றார். (B. Stein, The State and Peasant Society in Medieval South India pp 231-40) சைவசித்தாந்தம் பற்றிய இயக்கம் சைவத்திற் பிராமணர்கள் அல்லாதார்கள் பெற்ற இடத்தினைக் காட்டுவதாக உள்ளது என்பது அவர் கருத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழர் காலச் சமூக சிந்தனையோட்டங்களை விளங்கிக் கொள்வதற்குச் சைவசித்தாந்தத்தையும் அறிந்து கொள்ளல் வேண்டும் எனும் கருத்தினையும் இவர் வன்மையாகவே முன் வைத்துள்ளார் என்று கூறலாம். இவரைவிட ''தமிழர் மெய்யியல்'' எனும் நூலில், குணா, சைவசித்தாந்தத்தின் தன்மை களையும், அம் மெய்யியற் கொள்கையின் பொருள் முதல்வாத அடிப்படைகளையும் அக்கொள்கையின் ஊற்றுகள் என அவர் கருதியவற்றையும் எடுத்துக் கூறியுள்ளார். (குணா, தமிழர் மெய்யியல்-1974 pp 234)

இச்சிறு ஆய்வில் இக்கொள்கை தனி ஒரு சிந்தனை முறைமையாக வளர்த்தெடுக்கப்பட்ட வரலாற்றுச் சூழலையும், அவ்வரலாற்றுச் சூழலில் தொழிற்பட்ட சமூக அசைவியக்கங் கள் சிலவற்றையும் இச்சிந்தனை முறைமையின் அடிப்படை யான எடுகோள்கள் சிலவற்றின் சமூக சிந்தனை முக்கியத் துவத்தையும் எடுத்துக் கூறுவதே நோக்கமாகும்.

3

''சைவ சிந்தாந்தம்'' எனும் மெய்யியற் கோட்பாடு மெய் கண்ட சாத்திரங்கள் எனக் குறிப்பிடப் பெறும் பதினான்கு சாத்திரங்களிலே தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன. மெய் கண்ட தேவர், அருணந்திசிவாசாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாசாரியார் என்ற நால்வரையுங் கொண்ட சந்தனா சாரியப் பரம்பரையில் மறைஞான சம்பந்தர் தவிர்ந்த மூவருமே சித்தாந்த சாத்திரங்களுட் (திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார், உண்மை விளக்கம் தவிர்ந்த) பதினொன்றினையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதியுள்ளனர்.

தமிழ்நாட்டில் வளர்ந்து வந்த வைதிகச் சைவ மரபின் மெய்யியல் மேற்கட்டுமானமாக அமைந்த சைவசித்தாந்தம். மேற்குறிப்பிட்ட பதினான்கு சாத்திரங்களையுமே பிரமாண நூல்களாகக் கொண்டாலும், இக்கோட்பாடு திருவுந்தியார் திருக் களிற்றுப் பாடியார், சிவஞான போதம் ஆகியவற்றுடனேயே ஆரம்பிக்கின்றதெனக் கூறமுடியாது. 'சைவ சித்தாந்தி களிடையே இம் மெய்யியலின் தொடக்கத்தைத் திருமூலரின் திருமந்திரத்திலே காணலாம் என்பது பொதுவான எடு கோளுண்மைகளுள் ஒன்றாகும்.

''திருமூலருக்கு முன் தமிழ்நாட்டில், தமிழ் மொழியில் சைவ சித்தாந்த நூல் இல்லை. அவர் செய்த திருமந்திரமே சைவ சித்தாந்த நூல் என்பது தெளிவு'' (சைவ சமய வளர்ச்சி, பக். 96) என்று வாதிடும் அளவுக்கு இராசமாணிக்கனார் சென்றார்.

ஆனால் அண்மையில், இவ்விடயம் பற்றி எழுதியுள்ள ப. அருணாசலம், வெள்ளைவாரணனாரின் கூற்றொன்று பற்றிக் குறிப்பிட்டெழுதும் பொழுது,

> *''முதல் நான்கு தந்திரங்களும் சிவ ஞானத்தைப் பெறுவதற்கு விரும் பியவர்கள் தம்மை அகமும் புறமும் தகுதி உடையவர்களாக்கிக் கொள் வதற்குரிய சாதனங்களையும், நடு விலுள்ள ஐந்தாம் தந்திரம் சைவ சித்தாந்த சமய தத்துவங்களையும்,*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னுள்ள நான்கு தந்திரங்களும் ஞானம் பெறும் நிலையில் உணர்ந்து கொள்வதற்குரிய பயன்களையும் விரித்துரைக்கும் முறையில் அமைந்தனவாகும் என அறிஞர் ஒருவர் (வெள்ளைவாரணனார்) குறிப்பிடுவர். **இச்சிந்தனை தாம் பெற்றுள்ள சித்தாந்தக் காட்சியினைத் திருமந் திரத்திற் காண முயலும் முயற்சியே தவிர, திருமந்திரத்தில் இருந்து பெற்ற காட்சியாகத் தெரியவில்லை. முதலில் சைவ சிந்தாந்தத் தத்துவம் இந்நூலில் உணர்த்தப்படுகிறது என்பதைத் தானும், சித்தாந்த அறிஞர்கள் பலரும் ஒப்புக் கொள்வார்களா என்பது தெரியவில்லை.** (ப. அருணாசலம் திரு மந்திரக் கோட்பாடு, 347. அழுத்தம் இவ்வாய்வாளருடையது).

திருமந்திரத்தைத் தனியே சைவ சித்தாந்த நூலாகக் கொள்ள முடியாதென்றும், திருமூலர் அந்நூலில் சைவ சித்தாந்தத்தின் ஆரம்பக் கருத்துக்கள் உட்பட அக்காலத்து நிலவிய பல கருத்துக்களைத் தொகுத்துத் தருகின்றார் என்றும் ''இதனால் திருமூலர் பல வழிபாட்டினையும் பட்டியல் இட்டுக் காட்டுபவர் என்று கூறிவிடமுடியாது. இப் பலவற்றினூடேயும் அவர் வற்புறுத்தும் செய்தி ஒன்றுண்டு. இந்நெறிகளெல்லாம் அக வழிபாடாக வளர்ந்து அக அனுபவத்தைத் தரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவன என்பதே. அவ்வாறு அகவழிபாடாக வளரும்போது ஒவ்வொரு தந்திரத்திலும் மந்திரத் தியானமும், அதன் வழித்தாகிய பரவெளி அனுபவமும் இவரால் வற்புறுத்தப் படுவதாகத் தோன்றுகின்றது'' என்றும் அருணாசலம் எடுத்துக் கூறியுள்ளார். (பக். 351)

திரு. ப. அருணாசலத்தின் கருத்துப் பெருவாதம் ஒன்றினைக் கிளப்பிவிடக்கூடியது. இக்கட்டுரையின் நோக்கம் சைவ சித்தாந்தக் கருத்துக்களின் தோற்றத்தினை நிறுவுவதன்று. பதினான்கு சாத்திரங்களில் வரன்முறையான ஒரு கொள்கை யாக நிறுவப்படுவதற்கு முன்னர், இந்நிலைப்பட்ட கருத்துக்கள் படிப்படியாக இலக்கியக் குறிப்புப் பெறுகின்றன எனும் உண்மை நிறுவப்படுவது இக்கட்டுரையின் தேவைகட்குப் போதுமானதாகும். ''**சைவ சித்தாந்தம்**'' என்ற தொடரே திரு மந்திரத்திற் காணப்படுகின்றமை (1422-1423) பதி, பசு, பாசம் ஆகியவற்றை அநாதி (1159 எனக் கொள்கின்றமை போன்ற வற்றை நோக்கும் பொழுது, திருமூலர் காலத்திலிருந்தே இச் சிந்தனா நெறி எண்ணக் கருவாக வளர்ந்து வருவதைக் காண லாம். திருமந்திரத்திற் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் இல்லை யென வாதிடுவது சிரமமாகலாம்.

தத்துவ சாத்திரமென்ற வகையில் சைவ சித்தாந்தம் ஒருநூறு வருட கால எல்லைக்குள் சந்தானாசாரிய பரம்பரையினால் திட்டவட்டமாக்கப் பெற்றது உண்மையெனினும், இந்த எண்ணக் கருவினால் ஏற்புடைமையானவை, சாத்திர அங்கீ காரமுடையவை என்று ஏற்றுக்கொள்ளப்படும் நிறுவனங்கள், நடைமுறைகள் ஆகியன 7-ஆம் நூற்றாண்டு முதல் 9-ஆம் நூற்றாண்டு வரை தமிழ் நாட்டை ஆட்கொண்டு நின்ற பக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்க காலத்திலும், பின்னர் அதனைத் தொடர்ந்து சோழப் பேரரசு தனது நிர்வாக முறைமையின் மையமாகக் கொண் டிருந்த கோயில் நிருவாக முறைமையிலும், இடம் பெற்றனவே என்பதனை நாம் ஏற்றுக் கொள்ளவே வேண்டும். பிறிதொரு வகையாற் கூறுவதெனில், பக்தி இயக்கத்தில் இடம் பெற்றவர் களுக்கும், அந்த இயக்கத்தின் சமூக அனுபவத்துக்கும் முரணான வகையிலே, சைவசித்தாந்தக் கோட்பாடுகளை அதன் கருத்து நிலைப்பாடுகளை வகுத்துவிட முடியாது. சைவப் பக்தி இயக்கம் எவ்வெவற்றை எதிர்த்ததோ, அச்சக்தி களுக்கு எதிரான ஒரு கருத்து நிலையினையே சைவசித்தாந்தம் அவைதீக மதங்களை மறுதலிப்பதாக மாத்திரமல்லாமல் வைதிக மதங்களுள்ளும், தனது நிலைபாடே உண்மையானது, சத்தியமானது. மற்றவை தவறான தன்மைகளை உடையவை என்று நிலைநிறுத்த வேண்டியதாயிற்று.

இத்தகைய ஒரு கருத்துநிலை ஊன்றி வளர்வதற்கான ஒரு சூழ்நிலை சோழர்காலக் கோயில் நிர்வாக முறைமையினால் வலுவாக்கப்பட்டது எனலாம். ஆனால் அவ்வாறு செய்யும் பொழுது ஏறத்தாழச் சமானமான இயக்க வேகத்தைப் பெற் றிருந்த வைணவத்தை அது எதிர்க்க வேண்டுவதும் அத்தியா வசியமாயிற்று. வைணவத்திற் கெதிரான சைவநிலைப்பாடுகள் வெறுமனே மெய்யியல் நிலைப்பட்டவையன்று. அவற்றுக்கு சமூக அரசியற் பரிமாணம் உண்டு என்பதைச் சோழர்கால வர லாறு கூறும். சோழப் பெருமன்னர் கால நடுக்கூற்றில் வைண வத்துக்குக் கிடைக்காத அரச ஆதரவு சைவத்துக்குக் கிட்டிற்று.

சைவ சித்தாந்த சாத்திரங்கள் தோன்றிய காலப் பின்னணி யினை நோக்கும்பொழுது, தமிழ் நாட்டின் சைவப் பாரம்பரியம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது மரபுகளை இறுக்கமாகப் பேணுவதற்கான தத்துவ விழுதுகளை விடுவதற்கான சூழல் ஏற்பட்டிருந்தமையை அவதானிக்கலாம்.

அவற்றுள் முதன்மையாக எடுத்துக் கூறப்பட வேண்டியது, இச்சாத்திரக் கொள்கையைக் கருத்துப் பிரமாணமாக நிறுவிக் கொள்வதற்கான மூலங்கள் ஒன்று சேர்க்கப்பட்டமையாகும். நம்பியாண்டார் நம்பி, கி.பி. பத்தாம் நூற்றாண்டினிறுதி, பதினொராம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் வாழ்ந்தவராவர். சைவத் திருமுறைத் தொகுப்பு வைணவப் பாசுரத் தொகுப்பின் பின்னரே செய்யப்பட்டதென்ற வரலாற்றுண்மையை இவ்வேளை மனத்திருத்தல் அவசியம்.

பக்தி இயக்கத்தின் வெளிப்பாடாக அமைந்த பாடல்கள் தொகுக்கப் பெற்ற பின்னர், அந்த இயக்கத்தில் ஈடுபட்டோர் வரலாறு தமிழ்நாட்டின் பெரிய புராணமாகச் சேக்கிழாரால் 12-ஆம் நூற்றாண்டில் எடுத்துக் கூறப்படுகிறது. ஆக்கங்களையும் வரலாற்றையும் தளமாகக் கொண்டு அவற்றினடியாகப் பெறப் படும் கருத்துநிலை அடுத்துத் துணியப்படுவது ஆச்சரியமன்று. மிகமிக இயல்பான ஒரு நடவடிக்கையே ஆகும்.

இவ்வாறாக சைவசித்தாந்த சாத்திரத் தோற்றத்தை சைவத்தின் இயல்பான வளர்ச்சியின் ஒரு நிறைவு நிலையாகக் கண்டுகொள்ள முடியுமெனினும், இந்தச் சாத்திரத் தோற்றத்தை நிர்ப்பந்தித்த சில ''புற''ப் பண்புகளும் உள்ளன.

கி.பி. பதினோராம், பன்னிரண்டாம் நூற்றாண்டில் வைண வத்திற் காணப்பட்ட வளர்ச்சி, பக்தி இயக்கத்தின் மற்றைய மத மான சைவத்திலும் இடம் பெறுவது அத்தியாவசியமாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமண, பௌத்த எதிர்ப்பு நிலையில் ஒன்றுபட்டு நின்ற இந்து மதத்தின் இரு கிளைகளான இவ்வணக்க முறைகள், பக்தி இயக்கம் நிறுவன நிலைப்படநிலைப்பட ஒன்று மற்றொன்றிலிருந்து விடுபட்டு தனித்தனியே வளரத் தொடங்குவது இயல்பே. சோழ அரசு வழங்கிய அரசியல், சமூக அதிகாரமும், வைணவத்திற்குள்ள மத நிலைப்பட்ட, உள்ளார்ந்த ஆதாரகிரந்தத் தேவைகளும் தமிழ் வைணவம் தனிப்பண்புகளுடையதாக வளர்த்தெடுக்கப்பட வேண்டிய ஒரு நிலைமையை ஏற்படுத்துகின்றன. நாதமுனி பாசுரங் களை ஆயிரப்படிகளாகத் தொகுத்தார். தொடர்ந்து வந்த ஆசாரிய பரம்பரை பக்தி இயக்கத்தினடியாக வளர்ந்த நடைமுறை களுக்கான கருத்துநிலை அடிப்படையினை நிறுவிற்று. இராமானுசர் விசிட்டாத்துவைதத்தை எடுத்தோதினார்.

இக்கட்டத்தில் சங்கரருடைய ஏகான்மவாதக் கொள்கை தமிழ் நாட்டுப்,பக்தி இயக்கத்தின் மீது ஏற்படுத்திய தாக்கத் தினைப் பற்றிச் சிறிது நோக்குதல் வேண்டும்.

பக்தி இயக்கம் தோன்றிய சில காலத்தின் பின்னரே சங்கரர் தனது பணியினைத் தொடங்குகின்றார். பிரம்மத்தை மாத்திரம் அநாதியானதாகவும் உண்மையாகவும் கொண்ட அதன் தத்துவ அடிப்படையை பக்தி இயக்க நெறியில் வளர்ந்த சைவம், வைணவம் ஆகிய இரண்டுமே ஏற்றுக் கொள்ளவில்லை. இரா மானுசர், சங்கரர் அத்வைதத்துக்குக் கொடுத்த விளக்கத்தை எதிர்த்து (குண விசேடணமுடைய அத்துவைதமாகிய) விசிஸ்டாத்துவைதத்தை விளக்கினார். அதே போன்றே சைவர்களும், சங்கரரின் மாயா வாதத்திலிருந்து பெறும் அத்து வைதம் பொருத்தமானதன்று; உண்மையான-சுத்தமான-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துவிதம் சித்தாந்தமே என்பர்.

இராமானுசர் வைணவ நிலைப்பாட்டை கருத்து நிலைப் படுத்தியதன் பின்னர் சைவத்தின் கருத்து நிலைப்பாட்டைத் தொகுத்துக் கூறுவது அத்தியாவசியமாயிற்று.

சைவசித்தாந்தத்தை இந்திய மெய்யியற் கொள்கையின் வளர்ச்சிப் பின்னணியில் வைத்து நோக்கிய கி. லஷ்மணன் கூறியுள்ளதை நினைவு கூறுதல் தகும்.

> ''பலவிதமாகவும் பார்க்குமிடத்து இராமானுசரது கொள்கை வேதாந்தத்துக்கும் சைவசித்தாந்தத்துக்கும் இடைப்பட்ட ஒரு நிலையாகவே தோன்றுகிறது.................................... உலகம் உண்மை, உயிர்களும் உண்மை எனக் கொள்வதால் சைவ சித்தாந்திகளைப் போல்வே இராமானுசரும் மெய்ம்மைவாதி. அவர்களைப் போலவே இவரும் ஒரு பன்மைவாதி. வேதாந்திகளைப் போலப் பிரமாணம் ஆறு எனக் கொள்ளாது சைவசித்தாந்திகளைப் போலவே இராமானுசரும் பிரமாணம் மூன்று என்றே கொள்ளுகின்றார். அன்றியும் வேத உபநிடதங்களை மட்டுமே பிரமாணமாகக் கொள்ளாது, சித்தாந்திகளைப் போல்வே இராமானுசரும் புராணங்களையும் ஆகமங்களையும் பிரமாண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகக் கொள்ளுகின்றார். இவை எல்லாவற்றுக்கும் மேலாகச் சைவ சித்தாந்தத்தைப் போலவே இராமானுசரது மதமும் இறைவனுக்கே முதன்மை வழங்கி அவனையே நடு நாயக மாகக் கொண்டு இயங்குகின்றது.'' (இந்திய தத்துவ ஞானம்-பக். 330)

இந்த ஒற்றுமைகளைத் தனியே மெய்யியல் நிலைப்பட்ட கொள்கைகளாக மாத்திரம் காணாது, பக்தி இயக்கத்தினால் வளர்த்தெடுக்கப்பட்ட இரு மதங்களின் நடைமுறை ஒற்றுமை களாகவும் காணுதல் வேண்டும்.

சங்கரரின் ஏகான்ம வாதத்தை ஸ்மார்த்தர்கள் ஏற்றுக் கொண்ட பின்னர், பக்திப் பாரம்பரியத்தைப் போற்றியவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய தத்துவ அடிப்படைகள் சமூக நிலைப்பட்ட வேறுபாடுகளுக்கு இடமளிக்கத் தொடங்குகின்றது. அது பற்றி இக் கட்டத்தில் நோக்காமல், இக்கட்டத்தில், வைணவத்தின் வளர்ச்சியில் ஏகான்ம வாதத்தின் சமூக, மெய்யியல் தாக்கம் இராமானுசராற் புறங்காணப்பட்ட பின்னர், சைவத்திலும் அச்சவால் ஏற்கப்படுவது அத்தியாவசியமாகின்றது எனும் உண்மையை நாம் உணர்ந்து கொள்வது முக்கியமாகும்.

தமிழ் நாட்டில் நிலை இதுவாக, தமிழ் நாட்டுக்கு வடக்கே, கன்னடப் பிரதேசத்தில் சைவம் முற்றிலும் வேறுபட்ட வன்மையான ஒரு வரலாற்று வளர்ச்சியினைப் பெறுவதினையும், பின்னர் அவ்வரலாற்று நிலைக்கேற்ற ஒரு மெய்யியற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கையை உருவாக்கிக் கொள்வதையும் ஏறத்தாழ இக்கால கட்டத்திலே காணலாம்.

அங்கு, பிராமணீயத்தின் வருணாசிரம நடைமுறையிலிருந்து சைவத்தை விடுவிப்பதற்கு ''வீரசைவம்'' முன்வந்தது. பன்னிரண்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலே பசவரால் தோற்றுவிக்கப்பட்ட இவ்வியக்கம் ''சமயங்களிலும் மாந்தரின் வாழ்க்கையிலும் நிலவிய மூடப்பழக்க வழக்கங்களையும் பிராமண தர்மம் என்னும் தவறான கொள்கையையும் எதிர்க்கும் கூர்வாளாயின. அவர் முயற்சியால் தொடங்கப் பெற்ற சிவானுபவ மண்டபம் கருத்துக்களை ஆய்ந்து முடிவெடுக்கும் பாசறையாகத் திகழ்ந்தது. நால் வருணம் என்ற பெயரால் பிராமணர்கள் பல நூற்றாண்டுகளாக எழுப்பி வந்த மூடப்பழக்க வழக்கங்களை இச்சிவானுபவ மண்டபத்தில் கூடிய அறிஞர்கள் சுக்குநூறாக உடைத்தெறிந்தனர். (வேலா, இராசமாணிக்கம், மு. சதாசிவம், வீரசைவ நெறியும் அதன் வரலாறும். ஈரோடு-1978-பக். 39, 40) வீரசைவ இயக்கத்தின் வளர்ச்சியில் தமிழ்ப் பக்தி இயக்கத்தின் தாக்கமும் இருந்தது. இவ்வீரசைவ இயக்கம் பின்னர் 15-ஆம் நூற்றாண்டில் தமிழிலக்கியத்திலே தனது நேரடித் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. ஆனால் பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் கருநாடகத்தில் தோன்றிய வீரசைவ வளர்ச்சியும், தமிழ் நாட்டிலே நிலவிய சைவ மரபினைக் கருத்து நிலைப்படத் தெளிவு படுத்த வேண்டியதன் அத்தியாவசியத்தை உணர்த்திற்று என்று கொள்வது தவறாகாது.

ஏழாம் நூற்றாண்டு முதல் வளர்ந்து வரும் சைவப் பாரம்பரியத்தின் தோத்திர முறைமைகளை அடிப்படையாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு சாத்திரங்களை வகுக்கும் முயற்சி மேற்கொள்ளப் பட வேண்டிய வரலாற்றுத் தேவையை ஏற்படுத்தியனவாகக் கொள்ளக் கூடிய காரணங்களைப் பற்றி ஆராயும் இக் கட்டத்தில், வைஷ்ணவ, வீரசைவ இயக்கங்களின் சமூக சீர் திருத்த மனப்பான்மையை எடுத்துக் கூற வேண்டுவது அவசிய மாகும். இராமானுசரின் சமூக நிலைப்பாட்டினைப் பின்வரும் குறிப்பால் அறியலாம்.

> "வைணவர்களிடம் பேரன்பு கொண்ட இராமானுசர் திருக் கோட்டி நம்பிகளிடமிருந்து பெற்ற உபதேச மந்திரத்தைக் கேட்பவர்கள் அனைவருக்கும் நன்மை என அறிந்தபோது, அவ்வாறு பிறருக்குச் சொல்வதால் தமக்குப் பெருந்தீங்கு வரும் எனக் கூறிய போதும் அதனைப் பொருட்படுத்தாமல் கோபுரத்தின் மேலேறி நின்று பலரும் அறிய அவ்வுபதேச மந்திரத்தைக் கூறியவர். தீண்டா தாராகக் கருதியவர்களையும் திருக்குலத்தார் ஆக்கியவர். பல்வேறு சமுதாயத்தவர்களும், ஏழையாயினும், செல்வராயினும் "வைணவர்" என்ற நிலையில் இவரால் அன்பாகப் பாராட்டப் பட்டனர். இவர், பார்ப் பனரல்லாதாரிடம் உபதேசம் பெற்ற துண்டு. பார்ப்பனரல்லாத சீடர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருக்குண்டு; மாறனேரி நம்பி திருக்குலத்தாரே.

அரசாங்கத்தின் துன்புறுத்தலால் பன்னிரண்டாண்டுகள் மைசூர் எல்லையில் மேல்கோட்டைப் பகுதியில்-வாழ்ந்து வைணவ நெறியைப் பரப்பியவர். அங்குத் தாழ்த்தப்பட்டார்களை ஒவ்வோராண்டும் சில நாட்கள் திருக்கோயிலுட் செல்லவும், குளங்களில் குளிக்கவும் அனுமதித்தார். வேதங்களைக் கற்கவும் பஞ்ச நமஸ்காரம் பெறவும் உதவினார்.'' (ப. அருணாசலம், வைணவ சமயம், சென்னை - 1982 பக். 113-4 அத்துடன்- **Radhakrishnan-Indian Philosophy - Vol II 1956 - p. ap 8.)**

வீரசைவத்தின் சமூக சீர்திருத்த நோக்கினையும் பாங்கினையும் ஏற்கனவே பார்த்தோம்.

சித்தாந்தக் கொள்கைக்கு ஆதாரமாக அமைகின்ற சைவ மரபினை நோக்கும்பொழுது, அதில் இராமானுசர் நிலை நிறுத்திய அளவு சமூக நெகிழ்ச்சி காணப்படவில்லையெனினும், பிராமணீயம் வற்புறுத்தும் வருணாசிரம தருமம் இறுக்கத்துடன் போற்றப்பட வில்லை என்பது உண்மை. தமிழ் நாட்டின் சைவப் பாரம்பரியத்தில் முற்று முழுதான சமூக அமைப்பு நெகிழ்ச்சிக்கான அறைகூவலைச் சித்தர்களுடைய பாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலே காணலாம். திருமந்திரத்தைச் சித்த மரபின் முதனூலாகக் கொள்வதா அன்றேல் சைவசித்தாந்த மரபின் முதனூலாகக் கொள்வதா என்னும் பிரச்சினை இந்நோக்கிற் பார்க்கும் பொழுது சற்று முனைப்படையவே செய்கின்றது. அத்துடன் பதினெண் சித்தர் பாரம்பரியத்துக்கும் சைவ சித்தாந்த பாரம் பரியத்துக்குமுள்ள இயைபு, இயைபின்மைகளை வரையறை செய்து கொள்ள வேண்டிய அத்தியாவசியத்தையும் இங்குக் குறிப்பிடல் வேண்டும். இக்கட்டத்தில் ஒரேயொரு குறிப்பினை மாத்திரம் கூறல் வேண்டும். மத ஒழுகலாற்றிற் சித்தர் பாரம் பரியம் தமிழ்நாட்டின் அரசியற் சமூக அதிகார வட்டங்களின் அங்கீகாரத்தைப் பெற்றிருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் அதே வேளையில் சைவ சித்தாந்தமோ பொருளாதார பலமோ சமூக அதிகாரமுடைய் குழுக்களின் அனுசரணை யுடனேயே வளர்த்தெடுக்கப்பட்டதாகும்.

சமூக அசைவியக்கம் பற்றிச் சைவ சித்தாந்தத்தின் நிலைபாடு, அதன் வளர்ச்சிக்கு உதவிய பொருளாதார, சமூக பலம் பற்றிய இவ்வினாக்கள் சைவ சித்தாந்தம் பிரக்ஞை பூர்வ மான சாத்திரமாக வகுத்துக் கொள்ளப்பட்ட காலகட்டம் பற்றி யும், அக்கால கட்டத்தில் எவ்வெந் நிறுவனங்களின் ஆதரவு இதற்குக் கிடைத்தது என்பது பற்றியும் இது சாத்திரமாக வடித்தெடுக்கப்பட்ட காலத்தில் இதற்கு எத்தகைய வரவேற்பு இருந்தது என்பது பற்றியும் நாம் நோக்க வேண்டியதன் அத்தியாவசியத்தை வற்புறுத்துகின்றன.

சைவ சித்தாந்த சாத்திர வளர்ச்சியில் முக்கியமாக விதந் தோதப்படவேண்டியது, அது சோழப்பெருமன்னர் காலத்தின் ஒடுங்குதசைக் கட்டத்திலேயே சாத்திரமாக வகுத்தெடுக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது என்பதாகும்.

சித்தாந்த சாத்திரங்களின் அடிப்படை நூலான சிவஞான போதத்தின் ஆசிரியர் ''மெய்கண்ட தேவர் உத்தேசம் கி.பி. 1232-இல் இருந்தார் என்பதாகக்கொள்ளலாம்'' (கா.சு. பிள்ளை மெய்கண்டாரும் சிவஞான போதமும் கழகப் பதிப்பு (திகதி தெரியவில்லை. பக். xvii) சித்தாந்த சாத்திரங்களுள் கடைசி யாக எழுதப்பட்டதாகக் கொள்ளப்படும் சங்கற்ப நிராகரணம் கி.பி. 1313-இல் எழுதப்பட்டதென்பர். (கா.சு. பிள்ளை பக். xvi) மெய்கண்டார், சோழப் பேரரசின் இறுதிப் பெருமன்னன் என்று கருதப்படுபவனாகிய மூன்றாம் குலோத்துங்கன் (1178-1218) காலத்துப்பின் பகுதியில் அன்றேல் அவன் காலத்துக்குப் பின் னரோ வாழ்ந்தவர் என்பது தெளிவாகின்றது. உமாபதி சிவாசாரி யாரோ இரண்டாம் பாண்டியப் பேரரசின் இறுதிக் காலத்தில் மதுரை முஸ்லிம்களாற் கைப்பற்றப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர் என்பது புலனாகின்றது.

இக்காலகட்டத்தின் அரசியல் நிர்வாக நிலைமைபற்றி நோக்கும் பொழுது ஆட்சியாளர்களின் பெயர்களை முதன்மைப்படுத்தி நோக்காது. அக்காலத்து நிலவிய பொருளா தார நிர்வாக ஒழுங்கமைப்புப் பற்றி நோக்குதல் வேண்டும்.

சோழப் பெருமன்னர் காலத்தின் பிற்கூற்றில் அதன் உச்ச நிலையில் நிறுவப்பட்ட மத்திய ஆட்சியின் இயக்கம் பெரிதும் தளர்ந்து விட்டது. இத்தளர்ச்சியின் பெருக்கம் சிறுசிறு பிரதேச ஆட்சியாளரின் பெருக்கத்துக்கு இடமளித்தது. பெயரளவிற் பேரரசுக்கு மதிப்பளித்துப் பிரதேச மட்டத்தில் தமது ஆட்சியை நன்கு நிறுவிய ஆட்சியாளர் தொகை பெருகிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(K.A.N. Sastri Colas. pp. 407. 425, 438) சோழர் நிறுவிய உள்ளூராட்சி முறைமை இதனால் ஊனமுற்றதே தவிர முற்றிலும் உடைந்து போயிற்று என்று கூறிவிட முடியாது. மத்திய அரசின் அதிகாரம் குன்றக்குன்றக் கோயில் நிர்வாகம் முக்கிய பிரச்சினையாகிற்று. குலோத்துங்கன் காலத்திலிருந்தே பிராமணரல்லாதார் மடங்கள் தோன்றுவதையும் அவை பிரச்சினைக்குள்ளாவதையும் அவதானிக்கலாம். பிராமண ரல்லாதார் துறவிகளாக மடங்கள் அமைப்பதற்கு எதிர்ப்பு நிலவியமையை மூன்றாம் குலோத்துங்கன் காலத்திலேயே காணலாம் என்பதை தெ.பொ. மீனாட்சிசுந்தரன் எடுத்துக் கூறுவர். (T.P. Meenakshisundaran-A History of Tamil Literature 1965) சோழராட்சியின் சிதைவின் பின்னர் பிராமணரல்லாதாரின் மடங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. சந்தனாசாரிய மரபு மடமரபு சேர்ந்ததே என்பதை மனத் திருத்திக் கொள்ளல் வேண்டும். சைவ சித்தாந்தத்தின் பிராமணச் சார்பின்மைக்கும், வேளாள மேலாண்மைத் தொடர்புக்கும் இப்பண்புக்கும் தொடர்புண்டு என்பதைச் சிறிது பின்னர் பார்ப் போம். ஆனால் இக்கட்டத்தில், சைவசித்தாந்தக் கோட்பாடு எனும் மெய்யியல் மேற்கட்டுமானம் சோழப் பேரரசாட்சியின் கருத்துநிலையடிப்படைகள் சிலவற்றை உள்வாங்கி நின்றதெனினும் சோழப் பெருமன்னர் காலத் திலே அவர்களது தத்துவ ஆயுதமாகப் பயன்படுத்தப் பட்டிருக்க முடியாது என்பதையும் மனங் கொள்ளுவது போதுமானதாகும். சைவசித்தாந்தம் எனும் மெய்யியற்கோட் பாடு எத்தகைய சமூக சக்திகளின் கருத்து நிலை ஆயுதமாக விளங்கியதென்பதனைப் பின்னர் நோக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4

சைவ சித்தாந்தக் கோட்பாட்டைச் சமூக வரலாறாக நோக்கும்பொழுது அதன் முக்கிய சமூகப்பண்பாக எடுத்துக் கூறப்படுவது அதன் வேளாளச்சார்பு ஆகும். இவ்வேளாளச் சார்பு சில வேளைகளில் பிராமண எதிர்ப்புத் தொனிகளை யுடையதாகவும் காணப்பட்டது.

பிராமணரல்லாதாரின் மட நிறுவனங்களாகிய "குகைகள்" மூன்றாம் குலோத்துங்கன் காலத்திற் கட்டுப்பாட்டுக்குள் வரு வதை ஏற்கனவே பார்த்தோம்.

சைவ சித்தாந்தத்தின் பெரு நூலாகிய சிவஞான போதத்தைப் பிராமணரல்லாதாராகிய மெய்கண்டாரே எழுதினார். அவரது மாணவராக இருந்தவர் சிவஞானசித்தி யாரை எழுதிய அருணந்தி சிவாசாரியர் ஆவர். சித்தாந்த அஷ்டகத்தை எழுதிய உமாபதி சிவாசாரியரும் பிராமணரே. மறைஞான சம்பந்தரைத் தமது குருவாகக் கொண்ட உமா பதியாரின் நடத்தைகளை வெறுத்த தில்லைவாழந்தணர்கள் அவரைச் சமூகப் பிரஷ்டம் செய்த வரலாறு பிரசித்த மானதாகும். பிராமணீயம் விதிக்கும் வருணா சிரம தருமத்தை உமாபதியார் போற்றவில்லை என்பதற்குப் பெற்றான் சாம்பான் சம்பவம் எடுத்துக்காட்டாகும்.

சைவசித்தாந்த விருத்தியை மேற்கொண்ட மடங்கள் பிரா மணரல்லாதார் மடங்களே. தருமபுரம், திருவாவடுதுறை, திருப் பனந்தாள் ஆகியவை பிராமணச் சார்பற்ற மடங்களேயாகும்.

சைவசித்தாந்தத்தின் பிராமணச் சார்பின்மை அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படைக் கோட்பாட்டிலேயே காணலாம். ஸ்மார்த்தப் பிராமணர்கள் சங்கரரின் அத்வைத வியாக்கியானத்தை ஏற்றுக்கொள்பவர்கள். ஆனால் சைவசித்தாந்தமோ மாயா வாதத்தை எதிர்த்துத் தான் கூறுவதே உண்மையான சுத்தாத்து விதமெனக் கொள்வது.

சங்கர அத்வைதிகளின் எதிர்ப்புக் காரணமாகவே சந்தான பரம்பரையைத் திருக்கைலாய ஞானபரம்பரையெனக் கொள் ளும் ஐதீகம் தோன்றியிருக்கலாம். சைவ சித்தாந்தச் சிந்தனை மரபின் தொன்மையையும் தொடர்ச்சியையும் நிலைநிறுத்து வதற்கு இவ் ஐதீகம் அத்தியாவசியமாயிற்று.

சைவசித்தாந்தக் கோட்பாடு சந்தானாசாரிய மரபினால் புதிதாக உருவாக்கப்பட்டு விளக்கி வியாக்கியானஞ் செய்யப் படுவதற்கு எதிராகப் புலமை நிலைப்பட்ட எதிர்ப்புக்கள் இருந் தன என்பதைச் சிவப்பிரகாசத்துக்கு உமாபதி சிவாசாரியார் எழுதியுள்ள அவையடக்கம் நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

"தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா, இன்று
தோன்றிய நூலெனும் எவையும்தீ தாகா? துணிந்த

நன்மையினார் நலம்கொள்மணிபொதியும் அதன் களங்கம்
நவை ஆகாது என உண்மை நயந்திடுவர்; நடுவாம்

தன்மையினார் பழமைஅழகு ஆராய்ந்துதரிப்பர்;
தவறு நலம் பொருளின் கண்சார்வு ஆராய்ந்து அறிதல்

இன்மையினார், பலர் புகழில் ஏத்துவர்; ஏதிலர் உற்று
இகழ்ந்தனரேல் இகழ்ந்திடுவர்; தமக்கென ஒன்று இலரே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடலிற் சைவசித்தாந்தம் புதிய கொள்கையாக விரிக்கப்படுவதும், அதனை எதிர்ப்பவர்களின் தன்மையும் நன்கு சுட்டப் பெறுகின்றன.

அத்துடன் சைவசித்தாந்தம் பலத்த எதிர்ப்பினைச் சமாளிக்க வேண்டியிருந்தது என்பதும் இதனால் தெரிகின்றது.

இந்த எதிர்ப்பின் முக்கிய ஊற்று பிராமணர்களிடத்தே யிருந்தது என்பது சைவசித்தாந்தம் அத்வைதம் பற்றி நடந்த வாதப் பிரதி வாதங்கள் மூலம் தெரியவருகின்றது. இவ் வாதங்கள் இப்பொழுதும் தொடர்ந்து நடைபெறுகின்றன. இவ்வாதங்கள் எவ்வாறு தனித் தமிழ் வாதம், பிராமண எதிர்ப்பு முதலியவற்றைத் தம்முள் அடக்கி நிற்கின்றன என்பதை ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை என்பவரது "அத்வைதம்" எனும் விவாத நூல் நன்கு எடுத்துக்காட்டுகின்றது. (ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை, அத்வைதம், திருவாவடுதுறை ஆதீனம். வெளியீடு எண் 245. 1969).

சைவசித்தாந்த மடங்களின் கருத்து நிலைப்பாடு மாத்திர மல்லாது அவற்றின் ஆட்சியும் நிருவாகமுமே வேளாள முதலாண்மை கொண்டவையாகும். தருமபுரம், திருவாவடு துறை, திருப்பனந்தாள் ஆகிய மடங்களிற் பண்டார சந்நிதி களாவதற்குச் சாதித் தகைமையொன்று யுண்டென்பதும் அது பிறழ்ச்சியின்றிப் போற்றப் படுவது என்பதும் எல்லோருக்கும் தெரிந்ததே.

சைவசித்தாந்தக் கோட்பாட்டினதும், அது வளர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்க்கப்பட்ட இடங்களினதும் வேளாளச் சார்பினையும், வரலாற்றுப் பின்னணியில் வைத்து நோக்குதல் அத்தியாவசிய மாகின்றது.

சோழர் காலத்தின் சமூக அமைப்புப் பற்றி றொமிலாதாப்பர் கூறுவன முக்கியமானவையாகும்.

> *''சாதி வரன்முறையமைப்பில், சமூகத்தைப் பிராமணர் பிராமணரல்லாதார் என்று வகுத்துக் கொள்வதிலேயே பிரதான அழுத்தம் காணப்பட்டது................ பிராமணர்களல்லாதாரிடையே வட இந்தியாவுடன் ஒப்பு நோக்கும் பொழுது சத்திரியர்கள், வைசியர்கள் பற்றிய குறிப்புக்கள் இல்லையெனுமளவுக்கு குறைவாகவும் ஆனால் சூத்திரர் பற்றி நிறையவும் காணப்படுகின்றன.............. .... (பிராமணர்கள், சூத்திரர்களைத் தவிர்ந்த) இடைநிலைச் சாதியினரிடையே வேறுபாடுகள் இறுக்கமானவையாக இருக்கவில்லை.''* **Romila Thapar - A History India-Penguin-p. 212)**

சோழராட்சிக் காலத்தின் ஆரம்பத்திற் காணப்படாது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பிற்கூற்றிலே மாத்திரம் காணப்படுவதான ஒரு நிகழ்ச்சி இவ்வாய்வுக்கு முக்கியமாகின்றது. சோழர் ஆட்சியின் ஆரம்பத்தில் பிரமதேய நில விற்பனையிலே மாத்திரம் காணப்பட்ட தனி நபர் நில விற்பனை பிற்கூற்றில் விவசாயிகள் நிலைப்பட்டோர் மத்தியிற் பரவலாகக் காணப்படுகின்றது. இதன் காரணமாக, முற்கூற்றில் நிலவிய எல்லோருமே உழுகுடிகள் என்ற நிலைமை போய், பிற் கூற்றில் நிலச்சொந்தக் காரர், வேலை செய்வோர் வெவ்வேறானவர்களாக-இரு பொருளாதாரப் பிரிவினராக மேற்கிளம்பும் நிலைமை ஒன்று காணப்படுகின்றது. இந்தப் புதிய நில ஆட்சி உரிமை, காணி உரிமையென வழங்கப்படுவதாயிற்று. தனியார் உடைமையில் வரும்நிலம் காணி எனப்பட்டது. இந்தக் காணி உரிமையாளர் பெரும்பாலும் ஆட்சி நிருவாகத்தில் இடம் பெற்றவர்களாகவே காணப்பட்டனர். (யப்பானிய அறிஞர் நொபொறு கருஷிமா இக்கருத்தை கூறியுள்ளார் Studies in Socio-Cultura Change in Rural Village in Tiruchirppalli...1980) படிப்படியாக இம்முறைமை வளரத் தொடங்கிற்று. சோழர் கால இறுதியில் பெரும் நிலக்கிழார்கள் காணப்பட்டனர்.

சோழர் காலத்திற் காணப்படும் வேளாள மேலாண்மை இந்தக் ."காணியுரிமை" வளர்ச்சியுடன் இணைந்ததே. விதி முறையான் நிலமானிய ஆட்சி தமிழ்நாட்டில் இந்தக் கட்டத் திலேதான் பரவலாகக் காணப்படத் தொடங்குகின்றது. இந்த வேளாள மேலாண்மைக்கும், சோழ தேசத்தில் 13-ஆம் நூற்றாண்டிலே தொடங்கும் புதிய விவசாய அமைப்புக்கும் தொடர்புண்டு.

"சோழ ஆட்சி முடிவுறும் காலப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியில் தனியார் காணிச் சொத்துரிமை காணப்பட்டது. தனி நபர்களுக்கிடையேயும், அன்றேல் கோயில்களுக்கும் தனி நபர்களுக்கிடையேயும் நிலவிற்பனை நடைபெற்றது. இதன் காரணமாக, சிலர் பெருமளவு நிலத்தைச் சேர்த்துக் கொண்டு, உள்ளூர்களிற் செல்வாக்குள்ள பெரும் நிலச் சொந்தக்காரர்களாகினர். இதற்கு ஈடுசெய்யும் வகையில், சிலர் தம் காணி நிலங்களை இழந்து குத்தகை, ஒற்றிற்கு உழுதொழில் செய்பவர்களாகவோ அன்றேல் நிலமற்ற விவசாயிகளாகவோ கீழ்நிலையெய்தினர். இது, கீழைக் காவேரிப் படுகையில் பதின்மூன்றாம் நூற்றாண்டில், புதியதொரு விவசாய அமைப்புத் தோன்றுவதற்குக் காரணமாயிற்று. **(Noboru Karashima''The Prevalence of landowning in The lower Kaveri Valley in The late cola period and its historical implica on in Studies in Socio-Cultural change in Rural Villages in Tiruchira palli District Tamil Nadu-India No.1., Institute for The Study of Languages and cultrals of Asia and Africa-November 1980)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் புதிய அமைப்பிலேதான் பெருங்கோயில்களினது அதிகாரத்திலிருந்தும், பிராமணீய முறையிலிருந்தும் விடு பட்ட ஒரு புதிய ஆட்சி முறை தோன்றுவது சாத்தியமாயிற்று. பிராமணரல்லாதாரின் மேலாண்மைக்குட்பட்ட மடங்களின் தோற்றத்தையும் பொருளாதார பலத்தையும் இந்தப் புதிய மாற்றத்துடன் இணைத்து நோக்குதல் வேண்டும். பிராமணியத் தின் சமூக வலிமை குன்றிய இந்த நிலைமையிலே தான் பக்தி இயக்க வழி வளர்ந்து வந்த சைவ நெறிமுறைகளை ஐயந்திரிபற்ற மெய்யியற் கோட்பாடாக வழங்க முடிந்தது என்று கூறலாம். சங்கரரின் ஏகான்ம வாதத்தையும், வருணாசிரம தருமத்தின் ஸ்மார்த்த நிலைபாடுகளையும் எதிர்க்கக் கூடிய சமூக வலிமை 13-ஆம் நூற்றாண்டிலேயே ஏற்படுகின்றது. இந்தச் செல் நெறியின் கருத்து நிலை எடுத்துக்காட்டாகச் சைவ சித்தாந்தத்தைக் கொள்ள வேண்டும்.

ஏற்கனவே எடுத்துக் காட்டப்பட்ட வரலாற்றுத் தேவைகள் இருந்த அச்சூழ்நிலையில், இந்தச் சமூக, பொருளியல் அபி விருத்தி, சைவ சித்தாந்தம், சாத்திரமாக வடித்தெடுக்கப்படுவ தற்கும், அதனிலும் மேலாக, போற்றப்படுவதற்கும் வேண்டிய சமூகத் தளத்தை ஏற்படுத்திற்று எனலாம். இந்த மாறிய சூழலிலே தான் மூற்றிலும் பிராமணரல்லாத மடங்களைச் சார்ந்தவர்கள் (அவர்களுள்ளும் சில பிராமணர்கள் இருந் தனர்; ஆனால் அவர்கள் பிராமண நிறுவனங்களின் தொல்லை களுக்கு ஆட்பட வேண்டி யிருந்தது) தங்களைத் திருக்கைலாய ஞான பரம்பரையினர் என்று சொல்வதும், அவ்வாறு சொல்லப் பட்டது ஏற்றுக் கொள்ளப்பட்டதும் சாத்தியமாகின.

இக்கட்டத்திலே, சைவ சித்தாந்தம் இராமாநுசர், பசவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோரின் நெறி முறைகள் போன்று, அக்காலச் சமூக அமைப்பு முறைமைக்கு முற்றிலும் எதிரானதாக அமைய வில்லை. சைவ சித்தாந்தம் சாதியமைப்பை ஏற்றுக் கொண்டது. ஆனால் சாதியால் வரும் தீட்டு உடலுக்கேயுரியது. ஆன்மா வுக்குரியதல்ல என்றது. சரியை, கிரியை, யோகத்துக்கு மேல் உண்மையான ஞானம் பெறுவதற்கு நற்சாதியும் அவசியம் என்றது. (சித்தியார் 275) இது பற்றிச் சிறிது பின்னர் சற்று விரிவாக நோக்குவோம்.

சமூக நடைமுறை நிலை நின்று நோக்கும் பொழுது, சைவ சித்தாந்தத்தின் மிகமுக்கிய அமிசமாக அமைவது அது சாத்திரமாக வகுக்கப்பட்ட காலம் வரையுள்ள சைவ வழிபாட்டு முறைமைகள் யாவற்றையும் தனது மெய்யியற் கோட்பாட்டு முறைமைக்குள் அமைத்துக் கொண்டமையேயாகும். இவ்வாறு நோக்கும் பொழுது அது தனியே ஒரு சிந்தனை முறைமையாக மாத்திரமல்லாமல், மத நடைமுறைகள் பலவற்றுக்கான நியாயப் பாட்டினை வழங்கும் ஒரு கோட்பாடாகவும் அமைந்துள்ளமை கவனிக்கப்பட வேண்டியதாகும்.

சமூகக் கண்ணோட்டத்திற், சைவ சித்தாந்தத்தின் மிக முக்கியமான அமிசம் அது அங்கீகரிக்கும் வழிபாட்டு முறைமைகளும், அது சுட்டும் ''முத்தி'' நிலைகளுமாம்.

சைவ சித்தாந்தத்தில் வழிபாட்டு மார்க்கங்களாகக் குறிப் பிடப் பெறும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கனுள்ளும் சமூகத்தின் ச்கல மட்டங்களிலுள்ள மக்கள் யாவரும் இடம் பெறுவர். ஆயினும் சரியை பற்றிக் குறிப்பிடும் சிவஞான சித்தியார் சுபக்கச் செய்யுளை நோக்கும் பொழுது (செய்யுள் 270) அது கோயிலுக்குட் செல்லத்தக்கவர்க்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரியதாகக் கொள்ளப்படத் தக்கதாகவுள்ளதெனினும், பெரிய புராணத்திற் பேசப்பட்டுள்ள நாயனார்கள் பலர் கோவிலுக்குட் புகமுடியாதவர்களே. சாதி வரன் முறையை ஏற்றுக் கொள்ளும் சைவ சித்தாந்திகள் ''சாதிகள் உடலோடு அழியும்'' என்பர்.

சரியை, கிரியை, யோகத்தின் வழியாகப் பெறுவது பதமுத்தி என்பதும் ஞானமே சாயுச்சியத்தைத் தருமென்பதும் சித்தாந்தக் கொள்கையாகும். இதில் உள்ள முக்கியத்துவமென்ன வெனில், நால் வகையினருக்கும் முத்தி கிடைப்பதை இத்தத்துவம் உறுதிப்படுத்துகின்றது. இவ்வாறு உறுதிப் படுத்துகின்ற வேளையில் ஒவ்வொரு படி நிலையிலுமுள்ளவர்களுக்கு ஒவ் வொரு முத்தி நிலைகிடைப்பதாகவே கூறுகின்றது. இந்த வேறுபாட்டைக் குறிப்பிட்ட சொற்களே நன்கு உணர்த்துகின்றன.

''சாலோகம் என்பது ஒரே உலகம் அல்லது இறைவன் இருக்குமிடத்தையடைதல், சாமீபம் இறைவனுக்கு அண்மையை அடைதல். சாரூபம் ஒரே ரூபம். சாயுச்சியம் எனப்படுவது இறைவனோடு இரண்டறக் கலக்கும் நிலை'' (இந்திய தத்துவஞானம். பக். 381)

இதனால் இங்கு முத்தி நிலை என்பது எல்லோருக்கும் சமமான நிலை அன்று என்பது புலனாகின்றது. ''மோட்ச ராச்சியம்'' (The Kingdom of Heaven) எனும் எண்ணக் கருவுக்கும் சைவசித்தாந்தம் கூறும் முத்தி நிலைகட்கும் வேறுபாடு காணப்படுகிறது. பூவுலகத்திலே காணப்படுகின்ற படிநிலை வரன்முறை வேறுபாடு (Hierarchy) முத்தி நிலையிலும் பேணப்படுவது சுவாரசியமான ஒரு சமூக உண்மையாகும். சைவசித்தாந்தத்தில் உண்மையான பரதானமுத்தி சாயுச்சிய மேயாகும். சாலோக, சாமீப, சாரூப முத்தி நிலைகளைப் பெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாக்கள் மீண்டும் பிறந்தே இறுதியில் சாயுச்சிய நிலையை அடைய வேண்டுமென்பர். அப்படிப் பரஞான நிலைபெறப் பிறக்கும் பொழுதுதான்.

"நாட்டிய நற்குலத்தினில் வந்து அவதரித்துக்
குருவால் ஞான நிட்டை அடைந்து,
அடைவர் நாதன் தாளே"

என்பர் அருணந்தி சிவாசாரியார் (275)

வழிபாட்டிலும் முத்தியிலும் சகலருக்கும் இடம் கொடுத்தும் அதே வேளையில் வரன்முறையான படி நிலைகளைப் பேணியுள்ளமையை நோக்கும் பொழுது, இந்தியச் சமூக அமைப்பினைப் பற்றி லுயி துமோங் (Louis Dumont) கூறிய ''ஹோமோ ஹயராக்கிஸ் (Homo Hierarchichus) எனும் கருதுகோளே நினைவுக்கு வருகின்றது. இந்திய சமூகத்தில் மனிதன் தன் சமூக வரன்முறைக்கேற்பவே போற்றப்படுகின்றான் என்பது அதன் முடிபாகும். சைவசித்தாந்தம் மத நிலையிலும் அந்தப் படிமுறைகளையே பேணுவதனைக் காணலாம்.

இந்த நான்கு வழிபாட்டு முறைகளை விளக்குவதற்குச் சைவ சித்தாந்தம் பயன்படுத்தும் சொற்றொடர்கள் மிக முக்கியமானவையாகும். அபரஞான நிலைகளை, அதாவது உலகில் மட்டும் பிறப்பதற்கேதுவாகிய, முத்தி நிலைகளை அச்சமூகத்திற்கு நன்கு தெரிந்த சமூக உறவு முறைகொண்டே எடுத்துக் காட்டியுள்ளமை மிக முக்கியமாகும்.

சரியை - தாசமார்க்கம் - அடிமை
கிரியை-சற்புத்திரமார்க்கம்-மகன்
யோகம்-சக மார்க்கம்-நண்பன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் உறவைப் புரிந்து கொள்வதற்கு நிதர்சனமான சமூக உறவுகளைக் காட்டியே செய்ய வேண்டியுள்ளது. இது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

இக்கட்டுரையின் நோக்கில், அடுத்து வற்புறுத்தப்பட வேண்டிய சைவசித்தாந்தப் பண்பு, அதன் மெய்ம்மைவாதக் கூறு ஆகும். மாயை என்பது உண்மையிற் சடப் பொருளே. சத்காரிய வாதத்தைச் சைவசித்தாந்தம் ஏற்றுக்கொள்ளும் இந்நிலைப்பாடுகளில் சைவசித்தாந்தம் வேதாந்தத்திலிருந்து வேறுபடுகின்றது. திராவிடப் பாரம்பரியத்தில் வரும் இச் சிந்தனை மரபில் இறைவனின் சக்தியைப் பெண்ணாக உரு வகித்துள்ளமையும் வரலாற்றுப் பாரம்பரியமொன்றினை வற் புறுத்துவதாகவேயுள்ளது. இக்கட்டத்தில், வரலாற்றுண்மை யொன்று முக்கியமாகின்றது. சோழப் பெருமன்னர் ஆட்சியின் ஒடுக்கு தசைக்காலத்தில் கிராமப் பெண் தேவதைகளின் வழிபாடு வளர்ந்து செல்வதையும், அவ்வாறு வளர்ச்சியடைந்து தேவி வழிபாட்டுடன் இணைக்கப்படுவதையும் நோக்குதல் வேண்டும். பேற்றன் ஸ்ரைன் இது பற்றி எடுத்துக் கூறியுள்ளார்.

சைவ சித்தாந்தத்தின் சமூக வரலாற்றமிசங்களை ஓரளவு தெளிவு படுத்த முனையும் இக்கட்டுரையில், சித்தர்களின் தத்துவ நோக்குகளுக்கும் சைவ சித்தாந்தத்துக்குமுள்ள உறவை விரிவாக ஆராய்தல் அவசியமே. ஆயினும் விரிவஞ்சி அதனை விடுத்தோம். ஆனால் சில உண்மைகளை வற்புறுத்தல் அவசியமாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப் பாரம்பரியத்திற் சித்தர்களாகப் போற்றப்படுபவர்களைப் பார்க்கும் பொழுது அவர்கள் யாவரும் ஒரே கோட்பாட்டைக் கொண்டவர்கள் என்று கூறிவிடமுடியாது. சித்தர்களாகக் கொள்ளப்படும் சிலரை-சித்தாந்திகளாகவும் கொள்ளும் மரபுண்டு. இதுபற்றி விரிவாக ஆராய்தல் வேண்டும். பெரும்பான்மையான சித்தர் பாடல்கள் சமூக நியமங்கள் எனக் கொள்ளப்பட்ட பலவற்றுக்கு எதிராகக் குரல் எழுப்புவனவாக அமைந்துள்ளன.

இவ்விடயம் தனியே ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

UNIVERSITY OF ... LIBRARY
6-1-1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழிலக்கியத்தில் மானுடம்

மனிதனுக்கு மேலொரு தெய்வமும் இல்லை—இந்த
மானுடம் போலொரு மெய்ம்மையும் இல்லை.
மனிதன் இயற்கையின் எதிரொலிச் சின்னம் உழைப்பு
மனம் இல்லையேல் அவன் விலங்காண்டி இன்னும்.

-உலோகாயதச் சித்தர் (பாடல் எண் 7)-சித்தர் பாடல்கள்.

1

''மானிடம்'', ''மானுடம்'' ஆகிய இரு பதங்களும் தமிழ் மொழியில், மனிதனின் ''மானுஷிக''த் தன்மையைக் குறிப்பனவாகும்.

மனிதனையே தனது களமும் தளமுமாகக் கொண்டியங்கும் இலக்கியக் கலையில் இக்கோட்பாடு பற்றிய சிந்தனை நிலைத் தேடல்களும் உணர்வு நிலைக் கண்டுபிடிப்புகளும் இடம் பெறுதல் இயல்பே. மதச்சார்பற்ற சிந்தனையே சமூக அசைவியக்கத்தின் அடிப்படைக் கருதுகோளாகத் தொழிற்படும் இன்றைய யுகத்தில் இக்கருத்து அகமுகிழ்ப்பாகவும் புறத்தாக்கமாகவும் தமிழிலக்கியத்திலே தொழிற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

இக்கருத்து பண்டைய தமிழிலக்கியங்கள் முதல் இன்றைய தமிழ் இலக்கியங்கள் வரை இலைமறை காயாகக் காணப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுவதுண்மை யெனினும் அத்னை இத்திட்டவட்டமானவோர் இலக்கியக் கோட்பாடாகக் காணும் இலக்கிய நோக்கினை காலஞ்சென்ற ப. ஜீவானந்தத்தின் எழுத்துக்களிலும் புதுக் கவிதை துறையாளர்களின் பிரகடனங்களிலும் ஆக்கங் களிலும் காணலாம்.

தமிழ் இலக்கியத்தை மானுடக் கோட்பாட்டின் தெளிவாக வும் சாறாகவும் காணும் நோக்கு மேனாட்டுச் சிந்தனை மர பொன்றினைத் தமிழ் நிலைப் படுத்துமொரு கண்ணோட்ட மரபின் முகிழ்ப்பாகும்.

2

மேனாட்டுத் தத்துவ இலக்கிய மரபில் மானுடக் கோட்பாடு, ''ஹியுமனிஸம்'' (Humanism) என்றே அழைக்கப் பெறும். மனிதனை அன்றேல் மனித நலத்தை மையக் கருவாகக் கொண்ட எந்நோக்கினையும் ''ஹியுமனிஸம்'' (மானுஷிகம், மனிதத்தன்மை பற்றிய நோக்கு) என்று கொள்ளும் மரபே மேனாட்டுச் சிந்தனைப் பாரம்பரியத்தில் இப்பெயரைப் பெற்றது.

''மனிதனை அவன் இயல்பினை, அவன் ஆக்கத்தினை வரலாறு, இலக்கியம், கலை ஆகியவற்றின் மையக் கருத்தாகக் கொள்ளும் மெய்யியலும் கண்ணோட்டமும் ''ஹியூமனி ஸம்'' (மானுடம்) எனப் பெறும்'' எனத் தனிநாயக அடிகளார், தமிழில் மானுடம் பற்றிய தமது சொற்பொழிவிற் குறிப் பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேனாட்டுச் சிந்தனைமரபில் இக்கண்ணோட்டம் பிரதானமாக முதன் முதலில் ஓர் இலக்கியக் கோட்பாடாகவே முகிழ்த்தது என்பர்.

ஐரோப்பாவில் மத்திய காலத்தில் மதச் செல்வாக்கின் (கிறித்தவத்தின்) காரணமாக உலகையும் மனிதனையும் முற்று முழுதாக இறையிற் கோட்பாடுகளினடியாகவே நோக்கும் ஒரு மெய்யியற் பாரம்பரியம் வளர்ந்து வந்தது. அக்கோட்பாட்டின் ஊடுபாவாக அமைந்த ''மனிதனின் மூலாதாரமான பாவச் செய்கை'' என்னும் கோட்பாடு மனித நடவடிக்கையின் முற் போக்கான விகசிப்புக்களை ஆராய இடங்கொடுக்காதிருந்தது. மனிதன் தன் பூரணத்துவத்திற்கு இறை வலியையும் அருளை யும் எதிர் நோக்கியே நிற்றல் வேண்டுமென்ற ஒரு கருத்துப் பரிமாணம் பாவக் கோட்பாட்டின் உள்ளீடாகவிருந்ததால், மனிதனை முதன்மைப்படுத்தியோ அல்லது மனித இயல்பு களைப் பிரதானப்படுத்தியோ அவனை அளக்கும் சிந்தனை மரபு வளர்வதற்கு இடமில்லாது போயிற்று. 15-ஆம் நூற்றாண் டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட ''மறுமலர்ச்சி'' (Renasisance) இயக்கம் இக்கோட்பாட்டு நிலை நின்ற ஆய்வுப் பாரம்பரியத் தினை விடுத்து, மத்திய காலத்துக்கு முன்னர் நிலவிய கிரேக்க, ரோம (பிரதானமாகக் கிரேக்க) சிந்தனை மரபை மேற்கொள்ள வேண்டியதன் அத்தியாவசியத்தை வற்புறுத்திற்று. எனவே, மனிதனை மனிதநிலை கொண்டு நோக்கும் அக்கல்விப் பாரம்பரியத்தினை மீட்டெடுக்க முனைந்த இயக்கம் மானுடக் கோட்பாட்டினை வற்புறுத்தும் இயக்கமாகக் கருதப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இச்சிந்தனை இயக்கம் பின்னர் ''கிறித்தவ மனிதாயுதவாதிகளின்'' சிந்தனா விளக்கங்களுடன் இணைந்தது. கிரேக்க, ரோமத் தொல்சீர் இலக்கியங்களைக் கிறித்தவ நன்னெறிப் பகைப்புலத்தில் வைத்து விளங்குமோர் இயக்கமாக இது முகிழ்க்கத் தொடங்கிற்று. கிரேக்க, ரோம இலக்கியங்களின் அறிவுப் பாரம்பரியத்தைக் கிறித்தவப் பக்தி நிலையுடன் இணைத்து நோக்கி மனித நிலையையும் மனிதப் பண்புகளையும் விளக்கிக் கொள்ளும் ஒரு சிந்தனை மரபு. இதன் காரணமாக வளரத் தொடங்கிற்று.

இக்கண்ணோட்டம் மெய்யியல் துறையில் ''பயனீட்டு வாதம்'' **(Pragmatism)** என்னும் மனித நலனுக்குப் பயன் படுகிற அளவிற்கு ஒன்றினை மதிப்பிட வேண்டுமென்னுங் கோட்பாட்டுக்குப் பின்னர் இடமளித்தது.

இத்தகைய ஒரு சிந்தனை வளர்ச்சியானது. மனிதனது உலோகாயத வளர்ச்சிக்கு உதவுவனவற்றைக் கண்டு பிடிப்பதற்கும், அவனது இயற்கைச் சூழல் பற்றிய பௌதீக நிலைத் தெளிவுக்கும் வேண்டிய அறிவுத் தொகுதியின் வளர்ச்சியுடன் முரணுறுவது இயல்பே. இத்தகைய ஒரு நிலையில் மனிதனை அறிந்து கொள்வது என்பது யாது, அதற்கான சிந்தனை முறைமை யாது என்பன முக்கிய பிரச்சனைகளாக எழுவது இயல்பே. இப்பின்னணியிலேயே மானுடக் கோட்பாடு பற்றிப் பேக்கன் **(Bacon)** தந்த விளக்கம் முக்கியமாகின்றது. மனிதாயதம் என்பது, மாறும் அறிவுத் தொகுதி பற்றியல்லாது மனிதனின் மாறாத பெறுமானங்கள் பற்றிய கல்வியென அவர் வற்புறுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கட்கு அளிக்கப்படும் கல்வி, மிதமிஞ்சிய தொழினுட்ப அறிவுக்கு மாத்திரமல்லாது, மானிடப் பண்புகளை எடுத்து விளக்கும் பாடங்களுக்குமிடமளிக்க வேண்டும் எனும் கருத்துத் தோன்றியது. இலக்கியம், கலை, வரலாறு என்பன வற்றை மானிடவியற் பாடங்களாக (Subjects in Humanities)க் கொள்ளும் பாரம்பரியம் இந்த இயக்கத்தின் வழியாகவே வந்தது. அமெரிக்காவைச் சேர்ந்த ஏவிங் பபிற் (Irving Babbit) என்பார் இது சம்பந்தமாக முக்கியமான ஒருவராவர்.

''மானுடம்'' பற்றிய மேலே கூறிய மெய்யியல், கல்வித் தேடல்களை நோக்கும்பொழுது மானுஷிகத்தன்மை யாது என்பது பற்றிய எண்ண அழுத்தம் காலத்துக்குக் காலம் வேறு பட்டுள்ளதென்பதும், இவ்வழுத்த வேறுபாடுகட்கிடையே மனிதனை, மனித நிலை நின்று புரிந்துகொள்வதற்கான ஓர் உந்துதல் தொடர்ச்சியாகக் காணப்படுவதும் நன்கு புலனாகின்றது.

இந்த அழுத்த வேறுபாட்டுடன், ஆனால் அடிப்படைத் தொடர்ச்சியுடன், இன்று செல்வாக்குப் பெற்றுள்ள மானுடம் பற்றிய கோட்பாட்டினை அறிந்து கொள்வது அத்தியாவசிய மாகின்றது. அக்கோட்பாடு மார்க்சீயச் சிந்தனை வழி வருவ தாகும். மார்க்சீயச் சிந்தனை மரபில் மானுடம் என்பது மனித னுக்குரிய கௌரவத்தை, தன் வாழ்க்கைச் சூழலைத் தானே மாற்றியமைக்கும் திறனுடைய அவனது ஆற்றலை அந்த ஆற்றலை அவனுக்கு வழங்கவும் வளர்க்கவும் வேண்டிய அற, நன்னெறிப் பெறுமானங் களைப் பற்றியறிதலும் அவற் றின் தொழிற்பாட்டை விதந்து கூறுதலுமாகும்.

'மனிதனை விட மிக நுண்ணிய, அழகிய, அவனைவிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகப் பன்முகக் கோலங் கொண்ட அவனை விடச் சுவாரசியமான வேறொன்றை நான் அறியேன். மனிதனே யாவும், எனவரும் மார்க்ஸிம் கோர்க்கியின் கூற்று இந்தப் புதிய 'மானுட' நோக்கினை நன்கு புலப்படுத்துவதாகும்.

இவ்வாறு கூறும் பொழுது மனிதனது மானுடத் தன்மையை அறிய முனையும் ஒரேயொரு இலக்கியக் கோட்பாடு இதுதான் என்று கூறுவதாகி விடாது. மனிதனது நிலையை, அவனது வீழ்ச்சியை, இயலாமையை எடுத்துக்கூறும், ஆராயும் இலக்கியக் கண்ணோட்டங்கள் பல உள்ளன. மனிதனது பராதீன நிலைப்பாட்டை விளக்கும் கோட்பாடுகளும் ஆக்கங்களும் பல உள்ளன. ஆனால் அவை, அந்த அந்நியமாதலைப் புறங் கண்டு மனிதன் மானுட நிலைப்பட்ட ஓர் ஒருமையைப் பெறுவதற்கான நம்பிக்கையையும் அதற்கான அறிவியல் சார்ந்த வழி வகைகளையும் கூறுவனவன்று. இக்கண்ணோட்டத்தில் நோக்கும் பொழுது 'மானுடம்' எனும் இலக்கியக் கோட் பாட்டுக்கு அடித்தளமாக அமைவது மனிதன் பற்றிய கோட் பாடேயாகும் என்பது தெரியவரும். இன்று நடை முறையி லிருக்கும் பல்வேறு இலக்கிய, அழகியற் கோட்பாடுகளின் வேறுபாடுகளும், வேறுபாடான செல்வாக்கும் அவை அடிப் படையில் மனிதன் பற்றிக்கொண்டிருக்கும் கொள்கையினடி யாகவே தோன்றுகின்றன. இன்றைய மனிதனின் நிலைமை பற்றியும் அவனது நாளைய நல்வாழ்வுக்கான கருத்து பற்றியும் கருத்து வேறுபாடு இருக்கு மேல், மனிதனைப் பற்றிய எமது சித்திரிப்புக்கள் வேறு படுவது ஆச்சரியமன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

தமிழ் இலக்கியம் 'மானுட'த்தின் குரலாக அமைய வேண்டுமென்ற கருத்தியற் கோட்பாடு தெட்டத் தெளிவான, ஐயந்திரிபற்ற இலக்கியக் கோஷமாக முன் வைக்கப்பட்டது அண்மைக் காலத்திலேயெனினும், தமிழ் நாட்டு மனித உணர்ச்சிகளைப் பற்றிப்பாடும் இலக்கியம் என்ற வகையில் தமிழிலக்கியம் தனக்கேயுரிய வகையில் மானுடக் குரலை எழுப்பியே வந்துள்ளது உண்மையே.

ஆனால், மேலே கூறியுள்ளவாறு, அது ஓர் இலக்கியக் கோட்பாடாக, சமூக நோக்கொன்றினைப் புலப்படுத்தும் இலக் கிய சிந்தனை நெறியாகத் தமிழ் நாட்டிலே முன்னர் தொழிற் படவில்லையென்பதை ஏற்றுக் கொள்ளவே வேண்டும்.

இதற்குத் தமிழ் நாட்டில் நிலவிய, நிலவும் சமூக, அரசியல் அதிகார வரன்முறையே காரணமாகும். தமிழ் நாட்டின் சாதி யமைப்பு உருவாக்க நிலையிலிருந்த சங்க காலத்திலும் சிதை வுறு நிலையிலிருக்கும் இக்காலத்திலுமே தமிழில் "மானுடக்" குரலின் தாக்கமான ஒலியைக் கேட்கும் ஒரு நிலை ஏற்பட்டுள்ளமை தற்செயல் நிகழ்வன்று.

இந்தச் சமூக அமைப்புக் காரணமாகத் தமிழ்நாட்டிலும் தமிழ் இலக்கியத்திலும் "மானுட" உணர்வுகள் வெளிப்பட்ட முறைமையும் எடுத்தோதப்பட்ட முறைமையும் ஐரோப்பிய மரபினின்றும் வேறுபட்டனவாக விருத்தலும் இயல்பே.

சங்க இலக்கியத்தில் "மானுட"க் கோட்பாட்டின் அமிசங் கள் தொழிற்பட்ட முறைமையினையும் அவை இலக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவம் பெற்ற முறைமையினையும் தனிநாயக அடிகளார் முதலிலே குறிப்பிட்ட ஆராய்ச்சிச் சொற்பொழிவிலே குறிப்பிட்டுள்ளார். அச்சொற்பொழிவில் அவர் காட்டும் மானுடம், மேனாட்டு இலக்கிய மரபில் இரண்டாவது கட்டமாக அமைவதாகும்.

சங்க இலக்கியத்தின் அடிப்படையான மானுட நெறிப் பாட்டை எடுத்துக் காட்டுவதற்கு மேலுமொரு தடயமும் உள்ளது. சங்க இலக்கியமே அதிகார வரன் முறைப்பட்ட சமூக ஏற்றத்தாழ்வுகளை ஏற்றுக்கொண்ட ஒரு சமூக அமைப்பையே காட்டுகின்றதெனினும், அதன் அடிநாதமாக அமையும் இலக்கியக் கோட்பாட்டில்-அதாவது அகத்திணை இலக்கிய மரபில்-மனித உணர்ச்சிகளின் பின்னணி பற்றிக் குறிப்பிடப் பெறும்பொழுது (அதாவது கருப் பொருள் பற்றிக் குறிப்பிடப் பெறும்பொழுது) தெய்வம்கூட உணர்ச்சியின் பின்னணியில் இடம்பெறும் ஒன்றாகவே குறிப்பிடப்பட்டுள்ளதனை நாம் கவனித்தல் அத்தியாவசியமாகும். அகத்திணைப் பாடல்களுக் கான முதல், கரு, உரியில் மனித நடவடிக்கையே முக்கியமான தாக, ஆனால் அது இயற்கையால் கட்டுப்படுத்தப்பட்ட ஒரு நடவடிக்கையாக இருத்தலை நோக்குதல் வேண்டும். குலக்குழு நிலைச் சமுதாயத்தில் இது தவிர்க்க முடியாததே. இயற்கையை மனிதனால் ஆட்சி செய்ய முடியாதவிடத்து அவன் இயற்கை யால் ஆளப்படுவது இயல்பே.

தமிழின் அற இலக்கியங்களை நோக்கும் பொழுது அவை சில சமூக-பண்பாட்டு (Socio Culutral Typs) வகை மாதிரிகளை நிலை நிறுத்தவே விரும்பியுள்ளன என்பது தெரிய வருகின்றது. ஆயினும் திருக்குறள் தனி மனித நிலை நின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சமூக நோக்கையும் நிலை நிறுத்த முனைகின்றதெனலாம்.

தமிழ்நாட்டில், ஏழாம் நூற்றாண்டு முதல் ஏறத்தாழ ஒன்பதாம் நூற்றாண்டு வரை பிரவகித்து ஓடிய பக்தி இயக்கத்தின் இலக்கிய வெளிப்பாட்டில், மானுட நிலையில் மாத்திரமே வைத்து விளங்கிக் கொள்ளக் கூடியதான தனி நிலைப்படுத்தப்பட்ட மானுட, அந்தரங்க உறவு நிலை (Personalized human based relationship) தொனிப்பதை நாம் கவனிக்கத் தவறுதல் கூடாது. வைதிக மதத்தின் இறுக்கமான சமூக வரையறைகள் தமிழ் நாட்டில் முற்றிலும் தோன்றாத அக்கால கட்டத்தில் (கி.பி. 700-900) இத்தகைய ஓர் உறவு பக்திய நுபவத்தின் அடிப்படையாகக் காணப்பட்டது ஆச்சரிய மன்று. சம்பந்தர் தேவாரங்களிற் காணப்படும் தன்னிலைப் படுத்தப்பட்ட உவகையுணர்வும், சுந்தரரின் தேவாரங்களிற் காணப்படும் தோழமையுணர்வும் இப்பண்பினை உணர்த்து கின்றன. தெய்வத்தை நோக்கி 'வாளாங்கிருப்பீர் திருவாரூரில் வாழ்ந்து போதீரே' என்று கூறத்தக்க அளவுக்குத் தெய்வம் பற்றிய உணர்வு கூடக் கேண்மையுணர்வுடையதாகவிருந்தது நோக்கத் தக்கது.

இக்கட்டத்தில், தேவாரங்களிற் சுட்டப்படுவதாகக் கூறப் பெறும் ஆண்டான் அடிமையுறவு (தாச மார்க்கம்) ஓரளவில் அக்காலத்தில் படிப்படியாக இறுக்கம் பெற்று வந்த தமிழகத்தின் நிலவுடைமைப் பாங்கினை எடுத்துக்காட்டுவதையும் நாம் அவதானிக்கத் தவறக் கூடாது.

ஆயினும் பக்தி இயக்கத்தின் 'மானுட' உட்கிடக்கையை வெளிப்படுத்தும் மிக முக்கிய சமூக உண்மையாகவிருப்பது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தி இயக்கத்திற் சம்பந்தப்பட்டவர்களின் சமூக அந்தஸ்தே. தமிழ் நாட்டின் பல்வேறு சாதிக் குழுக்களிடையேயிருந்தும், நாயன்மார்கள் தோன்றினர் என்பதற்கும், இந்த நாயன்மார் களுக்கிடையே சமகாலத்தவர்களாகவிருந்தவிடத்து குறிப் பிட்ட அளவாவது சமூக வரையறைகளைக்கடந்த ஓர் உறவு காணப்பட்டது என்பதற்கும் பெரியபுராணத்தின் அடிப்படை யான வரலாற்றுச் செய்திகள் சான்று பகருகின்றன. பக்தி இயக்கத்தின் இந்த மானுட நெகிழ்ச்சியே அதனைத் தோற்று வித்த சமூக-மதக் கோட்பாடு பின்னர் வலுவான இறுக்கம் பெற்ற பின்னரும் அம்மத நெறியினைப் பல்வேறு சமூக மட்டங்களிலும் பேணி வந்தது எனலாம். இப்பண்பை இன்றுங்கூட நாம் காணலாம்.

தெய்வங்களுக்கு மனித நிலையும் மனித உறவும் கற்பித்து மனிதனுடன் மனிதன் உறவு கொண்டாடுவது போன்று தெய்வத்துடன் உறவு ஏற்படுத்திக் கொள்ளும் ஓர் உணர்வு நிலை பக்தி இலக்கியங்களிலே மாத்திரமல்லாது, சாதாரண வாழ்க்கை யநுபவத்திலும் நிலவுவதை நாம் அவதானிக்கத் தவறக்கூடாது. பக்தி இயக்கத்தின் சமூக வியலடிப்படைகளை ஆராயும் பொழுது இப்பண்பிற்கான காரணமும் இப்பண்பின் தாக்கமும் தெளிவிக்கப்பட வேண்டுவது அவசியமாகும்.

பக்தி இலக்கியத்தின் மானுட நிலைவெளிப்பாட்டினைப் பொறுத்த வரையில், அவதாரக் கோட்பாட்டை (அதாவது தெய் வங்கள் மனித உருவில் மாத்திரமல்லாது மனித உறவுகளுடன் இயங்கும் ஒரு ''ஜீவி''யாக வரும், உலவும் என்ற கோட் பாட்டை)த் தனது அடிப்படைகளிலொன்றாகக் கொண்ட வைணவம், சைவத்தைவிட மானுட நிலையினை, உணர்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்வமாக வெளிப்படுத்தும் இலக்கியங்களைத் தோற்றுவித்துள்ளது என்ற இலக்கிய உண்மையை நாம் ஏற்றுக்கொள்ளவே வேண்டும். பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார் போன்றவர்களின் பாசுரங்கள் இவ்வுண்மையைப் புலப்படுத்துகின்றன.

இந்த மானுட நிலைக்கான இயற்கை யதீதத் தத்துவ விளக்கங்கள் பின்வந்த ஆசாரியர்களாற் கொடுக்கப் பட்டுள்ளதுண்மையெனினும் வைணவப் பக்தி இலக்கியத்தின் ''தொடர்பியல் மேன்மை'' (Communicative Excellence) அவற்றின் ''மானுட''ப் பாங்கிலேயே தங்கியுள்ளதென்பதனை மறுக்க முடியாது. மேலும் வைணவர்களிடையே நிலவிய 'பாகவத' மரபும் இம்மானுட நிலையினை மேலும் வளர்த்ததெனலாம்.

அதிகார வரன்முறைகள் சமூக அமைப்பிலும் மத்திய, உள்ளூர் ஆட்சி நிறுவனங்களிலும் ஏகாதிபத்தியப் பாங்குடன் வலியுறுத்தப்பட்ட சோழப் பெருமன்னர் காலத்து அரசர்களிற் சிலர் வைணவத்துக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு ''மதப்பூசல்'' என்ற விளக்கம் போதுமானதாகாது. அதற்கு அடிப்படையான சமூக, பொருளாதாரக் காரணங்கள் இருந்திருத்தல்வேண்டும். இது சம்பந்தமாக சிந்திக்கும் பொழுது, வைணவ வழிபாட்டு நெறி சைவ நடைமுறையிலும் பார்க்க மானுட நிலை நின்ற மதஉறவுக்கு இடமளித்தது. அத்தகைய உறவினை அத்தியாவசியப்படுத்திற்று எனும் உண்மையை நாம் மறந்து விடலாகாது.

இக்கட்டத்தில் பக்தி இலக்கியங்களிற் காணப்பெறும் சமூக அதிகாரப புறக்கணிப்புணர்வையும் அதன் ஆதார சுருதியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானுட நிலையினையும் தெளிவுபடுத்துதல் அவசியமாகும். ''நாக் கொண்டு மானுடம் பாடேன்'' எனும் பொழுது அக் காலத்தில் நிலவிய, அரசவைக் கவிமரபே, இங்குப் புறக் கணிக்கப்படுகின்ற தென்பனை உணர்ந்து கொள்ளல் வேண்டும். ''மானுடம் என்பது இங்கு மானுஷ்யத் தன்மை களைக் குறிப்பதன்று. அதிகாரங்களையுடைய மனிதனையும் குறிக்கும். சைவ இலக்கியங்களிலும் நிரஸ்துதி வெறுக்கப்படு வதைக் காணலாம். பொருள் பல ஆதிக்கத்தினால் வலுவுடைய மனிதரைப் பாடமாட்டேன் என்று புறக்கணிக்கும் பொழுது உண்மையில் அவர்கள் மனிதாயதப்பிழிவினை (Human essence) மனித நிலைப்படுத்தப்பட்ட தெய்வங்களிலேயே கண்டனர் என்பதை அவதானித்தல் வேண்டும். ''தமிழ் வளர்ச்சியில் மதங்களின் பங்கு'' என்ற எனது கட்டுரையிலே குறிப்பிட்டுள்ளது போன்று இதில் மறுதலைப்படுத்தப்பட்ட ஓர் உலகப் பிரக்ஞையையே (a reversed world consciousness) காண்கின்றோம்.

கம்பராமாயணம் அதன் பாத்திரச் சித்தரிப்பிலும் உணர்வு வெளிப்பாட்டிலும், தமிழ் இலக்கியப் பரப்பு முழுவதிலும் மிகச் சிறந்து விளங்குவதற்கும் வைணவத்தின் அடிப்படையான, அவதாரக் கோட்பாட்டினை ஏற்றுக்கொள்வதால் வரும், ஆதார சுருதியான மானுட நிலையே காரணமாக இருக்கலாம். கம்பனில் ஆழ்வார்களின் செல்வாக்குக் காணப்படுவதன் முக்கியத்துவத்தை நாம் இங்கு மனங்கொளல் வேண்டும். பின்னோக்காகப் பார்த்துக் கம்பனின் மானுட நேசத்தைப் புகழக்கூடிய அளவுக்கு அப்பெருங்காவியத்தில் மானுட நேசப் பொருள் விறகில் தீயாக நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுக்கிரீவன் என்ற வானர வீரன் வாயிலாக வரும் பொழுது அது ஓர் பௌதிக உடற்கூற்று வேறுபாட்டை உள்ளீடாகக் கொண்டது என்று சிலர் வாதிட இடமுண்டெனினும், வைணவத்தின் அடிப்படையான அவதாரக் கோட்பாடு மானுடக் கோட்பாட்டுக்கு வழி வகுப்பதைக் கம்பனின் பின்வரும் பாடலிற் காணலாம்.

தேறினன்—அமரர்க்கு எல்லாம் தேவர் ஆம் தேவர் அன்றே
மாறி, இப் பிறப்பில் வந்தார் மானிடர் ஆகிமன்னோ:
ஆறுகொள் சடிலத்தானும், அயனும் என்று இவர்கள் ஆதி
வேறு உள குழுவையெல்லாம் மானுடம் வென்றது அன்றே.

சைவ மரபினைப் பொறுத்தவரையில் சித்தர் பாடல்களில் அடிப்படையான மனிதாயதவாதமொன்று சமூக-மத இறுக்கங் களை மீறி வன்மையுடன் வெளிக் கிளம்புவதைக் காணலாம்.

சித்தர் பாடல்கள் என நாம் இப்பொழுது கொள்ளும் பாடற் றொகுதியில் பல்வேறுபட்ட சிந்தனைகளின் வெளிப்பாட்டைக் காணலாம். அவையாவற்றையும் இணைத்து நோக்கி அவற்றின் அடி நாதமான கோட்பாட்டினைத் தெளிவுபடுத்தும் தத்துவ ஆய்வு முயற்சி இன்னும் மேற்கொள்ளப்படவில்லை யெனினும், பொதுப்படையாகக் கூறுமிடத்து கு. அருணாசலக் கவுண்டர் அவர்கள் கூறுவது போன்று ''இந்து சமுதாயத்திலே சாதி சமயத்தின் பெயரால் உருவாகி வந்த வைதிக ஆதிக்கத்தை யும் கண்மூடித்தனமான பழக்க வழக்கங்களையும் அவ்வப் போது எதிர்த்துக் குரல் கொடுத்தவர்கள் தாம் சித்தர்கள். இந்து மதத்தின் அடிப்படைத் தத்துவங்களில் நம்பிக்கையும் கடவுள் பற்றும் வாய்ந்த இவர்கள் சடங்காசாரம் தவறுதலாகப் பொருள் செய்யப்படுவதையும் அமுல் நடத்தப்படுவதையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்த்தார்கள்.'' இந்த எதிர்ப்பினூடாகச் சில மனிதாயதப் பண்புகள் மீண்டும் தமிழ் இலக்கியத்தில் (அதுவும் உயர் இலக்கியத்தில் அத்தகைய குரல்கள் கேட்காத வேளையில்) இடம் பெறலாயின. சாதியடிப்படையில் மனிதனின் திறன்களை அவன் சாத்தியப்பாடுகளை மதிப்பிடலாகாது எனும் கருத்து இப்பாடல்களில் வன்மையுடன் மேற் கிளம்புவதைக் காணலாம்.

தமிழ்நாட்டின் வரலாற்று, இலக்கியச் சூழலில் மதம் சமூக சீர்திருத்தக் கருத்துக்களை உள்ளடக்கி நின்றமைக்குச் சித்தர் பாடல்கள் நல்ல உதாரணமாக விளங்குகின்றன. அப்பாடல் களில் மனிதரிடையே நிலவ வேண்டிய சமத்துவமும் மனிதன் என்ற உயிர்ப் பிறவி பற்றிய மதிப்பும் மாண்புணர்வும் காணப் படுகின்றது. தமிழ் இலக்கியச் சூழலில் இதனை மானுடப் பண்பின் வெளிப்பாடாகவே கொள்ள வேண்டும்.

18, 19-ஆம் நூற்றாண்டின் பின்னர் மேனாட்டாட்சி மூலமும், அந்த ஆட்சி வழியாக வந்த கல்வியறிவின் மூலமும் சமூக சமத்துவம் என்னும் கோட்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்ட தெனினும் அதன் தொழிற்பாடு அக்கோட்பாட்டை அறிமுகஞ் செய்தவர்களின் ஏகாதிபத்திய மனப்போக்குகள் காரணமாக வும், அந்நியராட்சியினால் பலன் பெற்ற வர்க்கத்தினரின் தன் மைகள் காரணமாகவும் மனித ஒருமையை வற்புறுத்துவதாக அமையவில்லையென்பதுண்மையே. தமிழ் நாட்டின் சமூக, பொருளாதார அரசியற் சூழல் அதற்கு இடங்கொடுக்கவில்லை.

இந்திய பாரம்பரியம் என்ற ''ஆரிய சம்பத்தினை''த் தனது தளமாகக் கொண்டு இச்செல்வாக்குகளை உள்வாங்கிக் கொண்ட சுப்பிரமணிய பாரதி மனிதனை முதன்மைப்படுத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதா சிந்தனையும் உலக நோக்கும் கொண்டவனாகவே விளங்கினான். முப்பத்தொன்பது வருடங்கள் மாத்திரமே வாழ்ந்த (1882-1921) அவனது வாழ்க்கை அவனது பூரண திறமைகளையும் வெளிக்கொணர்வதற்கு வாய்ப்பளிக்க வில்லை. இன்று பின்னோக்காகப் பார்த்து நாம் எவ்வளவு திருப்திப்பட்டுக் கொண்டாலும் அக்காலத்து அரசியல் தலை மையிலிருந்தோர் சிலர், அவனைப் பித்தனாகவே கருதி யுள்ளனர் என்பது உண்மை. இதனால் அவனது மேதா விலாசம் பெற வேண்டிய விகசிப்பினை பெறவில்லை. அத்துடன் அவனுடைய கொள்கைகளும் நன்கிணைந்த ஒரு தத்துவமாக முகிழ்க்க முடியவில்லை. இத்தகைய வரையறைகளுக் கிடையேயும் அவனது பாடல்களில் மானுடப்பண்பினை நன்கு காணமுடிகின்றது. ஆனால், அந்த மானுடதாகம் உலகளாவிய மனிதன் பற்றியதாகவிருக்கவில்லையென்பதுண்மையே.

கவிதைத் துறையில் அவனது வாரிசுகளாக அமைந்தோர் சிலர் மானுடத்தின் அடிப்படைப் பண்புகளைப் புறக்கணிக்கும் கோட்பாட்டினை "இன" ரீதியாக மேற்கொள்ள வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டதுண்மையே.

அவனால் அவனது இலக்கிய உந்துதலினால் வெளிவந்த இலக்கியம் சார்ந்த அரசியல், அரசியல் சார்ந்த இலக்கியம் எனுமிரண்டையுமிணைத்த இயக்கத்தின் முன்னணி வீரர் களுள் ஒருவராக விளங்கிய திரு. வி. கல்யாணசுந்தர முதலி யாரின் எழுத்துக்களில் மனிதாயத உந்துதல்கள் முக்கிய இடம் பெறுவதனைக் காணலாம்.

அந்த இயக்கத்தின் விரிவாக வந்து, பின்னர் தன்னைப் பொதுவுடைமைக் கட்சி இயக்கத்துடன் இணைத்துக்கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப. ஜீவானந்தமே, முன்னர் கூறியது போன்று, தமிழ் இலக்கியத்தின் மேலாண்மையுடைய பொருளாக மானுடத்தையே கொள்ள வேண்டுமென்றும் காண வேண்டுமென்றும் வற்புறுத்தினார். சமயவாதக் கோட்பாடுகளைக் கொள்கை ரீதியாக ஏற்காத ஜீவானந்தம் ,தமிழ் நாட்டின் சமய இயக்கங்களினடியாக இலக்கிய வடிவம் பெற்ற மனிதாயதப் பண்பை வலியுறுத்தினார்.

தமிழின் நவீனமயப் பாட்டில் இச்சிந்தனை மிக முக்கியமானதாகும்.

இந்தச் சிந்தனை தளத்திலிருந்தே இன்றைய தமிழ் இலக்கியத்தில் மானுடம் பாடுவதையே தமது இலக்கிய இலச்சினையாக்கிக் கொண்ட ஒரு புதிய இலக்கிய இயக்கம் தோன்றியுள்ளது. நவீன உலகின் அந்நியப்பாட்டையும், வெற்றிச் சாத்தியப்பாடுகளற்ற மனித 'இருப்புநிலை'யையும் கவிதைப் பொருளாகக் கொண்டும் இரவல் உந்துதல்கள் பெற்றும் புதுக்கவிதையை நடத்தி வந்த ஓர் இலக்கியச் செல்நெறியைப் புறங்கண்டு தொழிலாளி வர்க்கத்தின் இந்திய நிலைப்பாட்டையும் சர்வதேசீய நிலைமைகளையும் விளக்கிப் புதுக் கவிதையை ஓர் உடனிலைச் சாதனமாக்கிக் கொள்ள முனைந்த ''வானம்பாடிக்'' கவிஞர்களே இங்குக் குறிப்பிடப் படுகின்றனர். உலகளாவிய மனிதாயதச் சிந்தனைகளை இந்தியத் தமிழ்ப் பாரம்பரியங்களின் வழி வரும் படிவங்கள் கொண்டு செறிவுடன் புலப்படுத்துகின்றனர். அவர்களின் கவிதைகள் ஆர்வம் கொப்புளிக்கும் இதயதாபத்தையும் நம்பிக்கை நிறைந்த நோக்கையும் வெளிப்படுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள்
வடுப்பட்ட வரலாற்றின்
ஆத்மாக்களுக்காகப்
புறப்பட்ட புரட்சிகளின்
அடிச்சுவட்டைத் தொடர்ந்து
"எல்லார்க்கும் எல்லாம்"
என்றிருப்பதான
இடம்நோக்கி நகர்கின்ற
அக்கினி வீணைகள்....
ரத்த புஷ்பங்கள்....
கறுப்பு மலர்கள்....
அக்கினிப் பறவைகள்....

அக்னி புத்திரன்
(வானம்பாடி)

✡ ✡ ✡

UNIVERSITY OF PERADENIYA
6-1-19
LIBRARY
469255

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
6-1-1996
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

469255

6-1-1996
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org